XXV ff. 10
3840

ஸ்ரீ

# ஸ்ரீ குமுதவல்லி திருமங்கைமன்னன்

## ஓர் தமிழ் நவீனகம்.

இஃது
ஸ்ரீமத் வாதூலகுல தேசிகரென்னும்
கோயிற் கந்தாடை யண்ணன்ஸ்வாமிகள்
திருவடிகளின்ஸம்பந்தியும்
திருநாகை இயற்றமிழாசிரியர் ஜெகநாதபிள்ளையவர்கள்
குமாரருமாகிய
திருநாகை வித்வான்
அமிர்தகவி
ஜெ. இராஜகோபாலபிள்ளை யவர்களால்
எழுதப்பெற்று
ஸ்ரீமத் - இத்யாதி, கோ. க. அண்ணன்ஸ்வாமிகள்
திருவடிஸம்பந்தியாகிய
கா. வே. திருக்கச்சிநம்பி தாஸரால்

சென்னை
வைஜயந்தி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1913.

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600

திருமங்கைமன்னன்.



ஸ்ரீ குமுதவல்லி.

ஸ்ரீ

# இந்நூலைப்பற்றிய அபிப்பிராயங்களிற் சில.

சுதேசமித்திரன்:—'ஸ்ரீ குமுதவல்லி' என்னும் இந்நூல் திருமங்கைமன்னனின் திவ்ய சரித்திரத்தை நாடகநூலின் இலக்ஷணம்பொருந்த சிறந்த செந்தமிழ்நடையில் விவரிக்கிற படியால் இது கற்றோர்களுக்கும் பெரிய திருமொழிபோன்ற அரிய நூற்களைப் படித்தறிய சக்தியில்லாத சாமான்யர்களுக்கும் நம்மத உண்மைக்கருத்துக்களை எளிதில் விளங்கும்படிச் செய்யுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூலாசிரியர் இது போல் மற்றைய ஆழ்வாராதியர் வைபவங்களையும் இவ்வித நடையில் எழுதி வெளியிடுவாரானால் இருபாலார்க்கும் மிக்க பயன் தரும்.

செந்தமிழ்ச்செல்வி: — ஸ்ரீ குமுதவல்லி திருமங்கை மன்னன், இந்நூல் சிறந்த செந்தமிழ்நடையில் சொற்சுவை பொருட்சுவை நிரம்பப்பெற்று அநேக அரிய பெரிய மேற் கோள்கள் நிறைந்து படிக்கப்படிக்க இன்பத்தைத் தருவ துடன் பக்தியை யுண்டாக்கத்தக்க அநேக விஷயங்களை யுட்கொண்டிருக்கின்றன. உலகத்தில் பல வித்வான்கள் பற் பல நாவல்கள் எழுதியிருப்பினும் இதற்கு இணையாகாதென எம்மனோர் மதிக்கும் பெருமிதம்வாய்ந்த புத்தகம் இதுவே யாகும்.

ஜனானுகூலன்: — திருநாகை - வித்வான் அமிர்தகவி, ப-ா-ா-ஸ்ரீ, ஜெ. இராஜகோபால பிள்ளையவர்கள் 'ஸ்ரீ குமுத வல்லி திருமங்கைமன்னன்' என்னும் ஓர் திவ்ய சரித்திரத்தை தற்கால இங்கிலீஷ் நாவல்களைப்போல செந்தமிழ் நடையில் இயற்றி நமது பார்வைக்கனுப்பியதை வந்தனத்தோடு வரப் பெற்றோம். இதில் திருமங்கைமன்னன் தமது பெருஞ் செல்வம் அனைத்தையும் அடியார்க்கு அன்னமீதல் முதலாகிய சற்கருமங்களில் வினியோகம்செய்துவிட்டு கையில் சிறிதும் பொருளின்றி இனி எத்தொழிலைச் செய்தாவது பொருள்

தேடித் தாம்கொண்ட விரதத்தை முடிக்க எண்ணங்கொண்டு ஆங்காங்கு சென்று பலவழிகளிற் பொருள் சேகரித்து கோவிற் றிருப்பணிகளை நடத்தியும் பல திவ்ய தேசங்களைத் தெரிசித்தும் பல பதிகங்கள் பாடியும் அநேக அற்புதங்களைக் காட்டியும் விளங்கினதை நமது நூலாசிரியர் சுருங்கச்சொல்லி விளங்கவைத்து பல அரிய நூற்களின் மேற்கோள்களையும் அங்கங்கே எடுத்துக்காட்டி இனிய நடையில் எழுதி யிருக்கிறார்கள். இதைப் படிப்பவர்களுக்கு உள்ளபடியே பக்தி ஞானம் வைராக்கியம் இவைகள் உண்டாகுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இரஞ்சிதபோதினி:—நாகைநகர் - ஸ்ரீமாந், ஜெ. இராஜகோபால பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற ஸ்ரீ குமுதவல்லி திருமங்கைமன்னன் என்னும் தமிழ் நாவல் வைணவர்களுக்கு இன்றியமையாத பக்தி ஞான யோகங்களை நன்கு போதிக்கின்றது.

பிரஜானுகூலன்:—ஸ்ரீ குமுதவல்லி - ஸ்ரீமாந் அமிர்தகவி ஜெ. இராஜகோபால பிள்ளை அவர்களால் இயற்றியது. திருமங்கை யாழ்வாரின் வைபவமே குமுதவல்லி யென்பது இது ஒரு நாடகரூபமாகச் செய்யப்பெற்றிருக்கிறது. சரித்திரத்தில் படிப்பவைகளைக் கண்கூடாகக் கண்டுவருவது சரித்திர விஷய போதகத்திற்கு மிக்க சாதனமானதால் அங்லந்தமுலி எழுதப்பட்டவற்றுள் இதுவே முதலாவது நூலாகும். நடை அதிக அழகாக அமைந்திருக்கிறது. ஆசிரியரின் முயற்சி பாராட்டற்பாலது.

### தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்.

ஸ்ரீ குமுதவல்லி திருமங்கைமன்னன். இது ஒரு தமிழ் நவீனகம் வெகு சிங்காரமாக எழுதப்பட்டிருக்கிறது. எழுதப் படிக்கத்தெரியாத பாமரஜனங்களுக்குத் தெய்வத் தன்மை பொருந்திய இத்தேசபுராணேதி காசங்களில் செல்லப்பட்டிருக்கும் கதைகளையும் நீதிகளையும் புகட்டுவதற்கே நாடகங்கள் ஆதியில் ஏற்பட்டன அந்தநோக்கம் இப்போது பலிதப்படாமல் அதன் னேர்விரோதம் இப்போது பலிதப்பட்டு வருகிறதென்பதை எவரும் ஒப்புக்கொள்ளத் தாமதியார் ஸ்ரீ குமுதவல்லி திருமங்கை மன்னன்போலொத்த பக்திரசம் நிரம்பப்

பெற்ற நாடகம் நடத்திக் காண்பிக்கப்பட்டால் நாஸ்திகன் கூட ஆஸ்திகனாவான் என்பதில் தடையுண்டோ? இலகுவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலையுஞ் சொற்பம் சரித்திரமும் பக்திஞான யோகங்களை கதாரூபமாக போதிக்கிறதாயிருக்கிறது ஆதலால் ஸ்திரீ புருஷர்கள் எல்லாரும் இதை விரும்பி வாசிக்கலாம் இந்த நாவலை எழுதும்படியான பாக்கியத்தைப் பெற்றிருப்பவர் திருநாகை வித்வான் அமிர்த கவி ஜெ. இராஜகோபாலபிள்ளை யவர்களே யாவர்!

ஞானபாநு: — ஸ்ரீ குமுதவல்லி திருமங்கைமன்னன். ஸ்ரீ வைஷ்ணவமத சிரேஷ்டர்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவர்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வார் என்பவரது சரித்திர பிரபாவத்தை நாகைநகர் - ஜெ. இராஜகோபால பிள்ளையவர்கள் நாடக ரூபமாக மிகவும் இனிய வசனநடையில் எழுதி யுபகரித்துள்ளார் நாம் இந்த புஸ்தகத்தை ஆதியோடந்தமாக நன்குய் வாசித்துப் பார்த்தோம்; பாஷையோ படிக்கப்படிக்கப் பரமானந்தத்தை அளிக்கின்றது. ஆங்காங்கு சந்தர்ப்பங்கட்கேற்ற மேற்கோள்கள் நமது பூர்வீகக் கிரந்தங்களிலிருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பகவத் கைங்கர்யத்தையே பரமலக்ஷியமாகக் கொண்டருளிய இவ்வாழ்வாரது சரித்திரத்தை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நாம் நினைக்கிறோம். இந் நூலாசிரியராகிய இராஜகோபால பிள்ளையவர்கள் இம்மாதிரியே மற்ற பதினோராழ்வார்களுடைய சரிதங்களையும் இயற்றித் தமிழ் உலகத்திற்குப் பேருதவி புரியுமாறு ஜகன்மாதாவாகிய மகா சக்தியைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்வார்திருநகரி தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமத், ஆழ்வார் ஐயங்கார் அவர்கள்:—'ஸ்ரீ குமுதவல்லி' யென்னும் நாவல் படிக்கப்படிக்க ஆனந்தம் கொடுப்பதல்லாமல் நிரம்பவும் பக்தியைப் புகட்டுகிறது. இதை முக்கியமாய் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தறிய வேண்டுவதுடன் வைணவர்களுக்குப் பெரும்பாலும் இன்றியமையாததென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

மதுரை ஜில்லா, பாலவனத்தம் போஸ்டு,
குட்டிலோட்டி,
**மகாவித்வான்—ஸ்ரீமாந், மதுரகவி, அழக ரெட்டியார்**
அவர்கள் குமாரராகிய
ஸ்ரீமாந் - தி. அ. வெங்கடசாமி ரெட்டியார்
அவர்களால் இயற்றிய

## சாத்துக்கவிகள்.

**எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.**

தெண்டிரைக் கடல்சூழ் திலங்குமிப் புவியிற்
திகழ்தரு மங்கைமா நகரிற்
றிண்டிறற் கலிய னவதரித் தமலன்
சேவடிக் கன்புசெய் துயர்ந்த
கண்டினு மினிய கதையினைத் தமிழாற்
கவிவலோர் வியப்பகன் கமைத்தான்
எண்டிசை புகழு நாகைநன் னகர்வாழ்
இராஜ கோபால நாவலனே. (க)

**அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.**

அந்தணருக் கருமறையு மரசருக்கு மறுமுறையும்
அமலன் றாளைச்
சிந்தைசெயு மடியவருக் கானந்தப் பேரின்பத்
திரளு மாகும்
செந்தமிழ்தே ரமுதகவி யிராஜகோ பாலமுகில்
சிறப்ப தாகத்
தந்தபெருங் குமுதவல்லி யெனுங்குறையற் பெருமான்றன்
சரித நூலே. (உ)

இன்னும் பல பத்திரிகைகளினுடையவும் பண்டிதர்களினுடையவும் அபிப்பிராயங்களும் சாத்துக்கவிகளும் அநேகம் இருப்பினும் சிலதே போதுமானதென விரிவஞ்சி இத்துடன் நிறுத்தப்பட்டது.

ஸ்ரீ

# முகவுரை.

ஸத் ஸம்ப்ரதாய சீலர்களே!—

தற்காலத்தில் நந்தமிழ் நாட்டகத்தின்கண் ஆங்
காங்குள்ள வித்வ சிரோன்மணிகளாவார் பலருந் தத்தம
தாற்றலுக் கேற்ப பண்டைக்காலத்துச் சரிதங்களையும்
பற்பல கற்பனை கதைகளையும் சுவபாஷையிலியற்றியும்
பிறபாஷைகளி லுள்ளதை மொழி பெயர்த்தும் புதிது
புதிதாய் மிக வழகு அழகாய் நவீன நடையில் எழுதி
நம்மவர்க்குதவி வாநிற்பது யாவரும் நன்கறிந்த தன்
றோ? அவற்றிற் பெரும்பான்மையானவை உலக நடையா
திய ஒழுக்கங்களைப்போதிப்பனவாய் நிற்பதன்றிப் பக்தி
ஞான யோகங்களை யுணர்த்திப் பரமேஸ்வர னடியிணை
கட்குப் பாத்திரமாக்குவன மிக அறிதினும் அறிதே
யாகும். ஆனதுபற்றி யக்குறையினை ஒருவாறு அகற்
றுவான் வேண்டி யாமும் அப்புலவர் பெருமாக்களை
பெரிதும் பின்பற்றி நமது விசிட்டாத்வைத வேதாந்த
சித்தாந்த சமயக் குரவர்களாம் ஸ்ரீ-சடகோப மகா
முனிவர் முதலான பன்னிருவருடைய திவ்ய வைப
வங்களை முறையே (நாவல்களாய்) நவீனக நடையில்
எழுதி யுபகரிப்பின் பலர்க்கும் பயன்படுமெனக் கரு
திப் பிரதமத்தில் நவரச பூரிதமாய்ச் சிறந்து விளங்கும்
திருமங்கை மன்னன் பிரபாவத்தினைப் பூர்வாச்சாரி
யர்களருளிச்செய்த ஆறுயிரப்படி, பன்னீராயிரப்படி
யாதிய குருபரம்பரைக் கிரந்தங்களையும் அரி சமயதீபம்,

புலவர் புராணம் முதலிய நூற்களையும் ஒத்திட்டுப் பார்த்தும், நமது பரகாலர் புரிந்து நின்ற அற்புதத் திருவிளையாடல்கள் பலவும் கர்ணபரம்பரையாய் வழங்கிவருவனவற்றை யாம் ஆன்றோர்பால் கேட்டுணர்ந்துள்ளவை கொண்டும் பல அரிய நூற்களின் மேற்கோள்களையு மங்கங்கே எடுத்துக்காட்டி மிகவும் வேண்டுவன தழுவியும் மற்றவை யொழித்தும் முற்றும் உற்று நோக்குவார்க்கு யாவும் தெள்ளிதிற் புலப்படுமாறு எமது சிற்றறிவிற் கெட்டியதூரம் ஆராய்ந்தறிந்து வரையாநின்றுள்ளேன். ஆகலின் இவை நம் வைணவ நன்மக்கட்கு ஒரு சிறிதேனும் நன்மை பயப்பக் காரணமாமெனவுஞ் சமயத் தோரால் நன்கு மதிக்கப்பெறுமேல் அதுவே யாம் பூண்டுள கருமமாய் மற்ற வேதாக்ரேசர்களின் சரிதங்களையும் இதுபோன்ற நாவல் நடையில் எழுதி வெளியிடப் போதிய யேதுவாகா நின்று எம்மை நல்லாற்றிற் செலுத்தி நாராயணன் திருவடிகளிற் சேர்ப்பித்து நிற்குமென்பது எமது பெருந்துணிபே யாகும், அன்றியும் இஃது எழுதி அச்சிட்டு வருங்காலங்களில் யாம் மேற்பூண்டுள பல தொழிற் காரணமாக மிகப் பிழைபாடுக ளிதன்கட் காணக்கிடத்தால் "பிழைப்பாராகிலுந் தம்மடியார் சொற் பொறுப்பதும் பெரியோர் கடனன்றே" என்னும் ஸ்ரீ பட்டபிரான் திருவாய்மொழியினை ஸ்மரிப்பித்து அவற்றை ஏற்றவாறு திருத்தியமைத்துக்கொண்டு எம்மை யாதரித்தருள்வீர்களாக.

13—4—10
நாகைநகர்

☛ ஜே. இராஜகோபாலபிள்ளை.

ஸ்ரீ

# இரண்டாம் பதிப்பின் முகவுரை.

ஆரியர்களே!

மகா காருண்ய அங்கிலேய அரசாக்ஷியின்கீழ் சிறந்து இனிது விளங்கும் இவ்விந்திய தேசத்துள்ள நம்மவர்களாகிய யாவர்களும் இராஜபாஷையாகிய ஆங்கிலத்தினை மிகுதியும் அவலம்பித்து அவாவுடன் கற்றும் அன்போடு ஆதரித்தும் பாவச்செய்து வருவதால் தேசபாஷைகளாகிய ஹிந்தி, மகாராஷ்டிரம், கன்னடம், மலையாளம், தெலுங்கு, தமிழ்முதலியவைகளை விரும்பிக் கற்பாரும் ஆதரிப்பாருமின்றி நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகின்றன வென்பது எவரும் நன்கறிந்த விஷயமே. அதிலும் நமது தென்னாட்டின் தாய்ப்பாஷையாகிய *தமிழின் நிலைமையோ இன்னுஞ் சின்னாளில் கற்பவர்களே யில்லாது எங்கு ஒழிந்து போய் விடுவார்களோ என்று பாஷாபிமானமுள்ள ஒவ்வொருவரும் பெரிதும் வருந்தாநிற்கும் இக்காலத்தில்

---

* தமிழ்ப்பாஷையானது இதரபாஷைகளைப்போல் ஓர் காலத்தில் வாழாது வாழ்ந்து பின்னோர்காலத்தில் தாழாது தாழ்ந்து மறைந்தொழிந்து போவதுபோலன்றி "என்றுமுள தென்றமிழ்" என்றுகூறின தெய்வக்கவிஞராகிய ஸ்ரீமத் கம்பநாட்டடிகளைப் போன்ற அநேக அரும்பெருமக்களை இவ்வுலகில் யீன்று சாக்ஷாத் பரப்பிரம ஸ்வரூபியாகிய ஸ்ரீ வைகுண்டநாதனைப்போல் என்றும் நித்யமாய் விளங்கிவரும் தெய்வத் தன்மையுள்ள பாஷையாயினும் தற்காலத்தில் நம்மவர்கள் மிகவும் அதை அலக்ஷியஞ்செய்து வருவதைக்கொண்டு வருந்தாநின்று அவ்வண்ணம்சொல்ல நேர்ந்தது.

குமுணன், கர்னன், மலையன், முதலிய, வரையாது கொடுக்கும் வள்ளல்களோ வென முன்வந்து தங்கள் ஔதாரியம் நிறைந்த, வள்ளற்றன்மையால் ஸ்ரீகுமுத வல்லி திருமங்கைமன்னன் என்னும் இந்நூலை யாம் எழுதவாரம்பித்த காலமுதலாக எமக்குப் பெரிதும் ஊக்கந்தந்து அந்தந்தக்காலங்களில் யான் வேண்டியபடி பொருள்களை நூற்றுக்கணக்காய் உதவி எழுதாவெழுத்தில் அமைத்து அச்சு விமானத்திலேற்றி முதற்பதிப்போ ஆயிரம் இரண்டாம்பதிப்போ மூன்றாயிரம் புத்தகமாய் பதிப்பித்து வெளிவந்து நாடெங்கும் பரவி அபிமானிகளிடமெல்லாம் அஸ்தபூஷணமாய் விளங்கிவருமாறு புரிதரற்கேதுவாய் நின்ற பிரபல மிராசுதாரர்களாகிய வடுகச்சேரி பெரியபண்ணை ஸ்ரீமாந் அப்பாசாமிநாயுடுகாரு அவர்கள் குமாராகிய ஸ்ரீமாந் அயோத்திராமநாயுடுகாரு அவர்களுக்கும் டிைட்டியூர் சின்னப்பண்ணை ஸ்ரீமாந் பாலகிருஷ்ணநாயுடுகாரவர்கள் அருமைத்திருமருகரும் மன்னார்குடி டிஸ்திரிக்ட் முன்சீப் அவர்களுமாகிய ஸ்ரீமாந் K. சௌரிராஜநாயுடுகாரு அவர்களுக்கும் யாம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன் அன்றியும இவ்விரண்டாம் பதிப்பு வெளியாவதற்கான ஓர் பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்ட திருவல்லிக்கேணி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய புத்தகசாலைத் தலைவராகிய ஸ்ரீமாந் கா. வெ. திருக்கச்சிநம்பிதாஸர் அவர்களுடையவும் வெகு அழகாயும் சுத்தமாயும் கூடிய விரைவில் நேர்த்தியாய் அச்சிட்டுத்தந்த சென்னை மவுண்ரோட் வைஜயந்திபிரஸ் மானேஜர்

ஸ்ரீமாந். சிங்காரவேலுமுதலியார் முதலிட்ட அவ்வச்சா பீஸ் காரருடையவும் செய்நன்றிகள் என்றுங் கொண் டாடத்தக்கனவாகும்.

இவற்றிற் கெல்லாம் ஆதி காரணபூதனாய் நின்று தமியேனை தடுத்தாட்கொண் டருளியவப்பனை ஆதியஞ் சோதியமலனை மனமொழி மெய்களால் மறவாது நினை ந்து வாழ்த்தி வணங்கா நிற்போம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

"மறப்பும் ஞானமும் நானொன் றுணர்ந்திலன்
மறக்குமென்று செந்தாமரைக் கண்ணொடு
மறப்பற வென்னுள்ளே மன்னினான் றன்னை
மறப்பனோ வினியானென் மணியையே."

9—12—13.
திருநாகை.

ஜெ. ரா.

ஸ்ரீ

# திருமங்கைமன்னன் விஷயமாக ஸ்ரீமத் மணவாள மாமுநிகள் அருளிச் செய்துள்ள *தனிப்பாடல்கள்.

### வண்ண விருத்தம்.

உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாதர்பால்
உருகவைத்த மனமொழித்து உலகளந்த நம்பிமேல்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செய்கையான்
மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முனே
மடியொதிக்கி மனமடக்கி வாய்புதைத்து ஒன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றஅந்த நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனாணை யாணையே. (1)

### வெண்பா.

காதுஞ் சொரிமுத்துங் கையுங் கதிர்வேலும்
தாது புனைதாளுந் தனிச்சிலம்பும்—நீதிபுனை
தென்னாலி நாடன் திருவழகைப் போல
வென்னாணை யொப்பாரிலை. (2)

---

* இதுவரையில் அச்சில் வந்திலாது ஏட்டுப் பிரதியிலிருந் தெடுத்தவை.

வேலணைத்த மார்பும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்து வலச்செவியும்—காலிணைத்த
தண்டையும் வீரக்கழலும் தார்க்கலியன் நன்முகமும்
கண்டுகளி கூருமென் கண். (3)

இதுவோ திருவரசு இதுவோ மணங்கொல்லை
இதுவோ வெழிலாலி யென்னுமூர்—இதுவோதான்
வெட்டுங் கலியன் விரட்டிநெடு மாலையெழுத்
தெட்டும் பறித்த விடம். (4)

# பொருளடக்கம்.


| அத்யாயம். | | பக்கம். |
| --- | --- | --- |
| I. | ஸ்ரீ குமுதவல்லியார் வரலாறு ... ... | 1. |
| II. | திருமங்கைமன்னன் ஸ்ரீ குமுதவல்லியாரைக் கண்டு மோஹித்தல் ... ... ... | 12. |
| III. | திருக்கல்யாண மஹோத்ஸவம் ... ... | 19. |
| IV. | அகோரயுத்தம், பரகாலர் சிறைவாசம், காஞ்சியிற் நிக்ஷேப தனமெடுத்தல் ... ... | 23. |
| V. | வயலாலி மணவாளர் வேடுபறி, திவ்ய தேச யாத்திரை ... ... ... ... | 39. |
| VI. | வெற்றி வேல் பெறுதல், திருநாங்கூர் துவாதச கருடசேவை .. ... ... | 49. |
| VII. | ஐராவதி நதிதீரத்திலோர் அரங்கமாநகரம், கப்பலில் பாதிப்பாக்குப் போட்டது, சக்கரம் நிறுத்தி விக்கிரகம் எடுத்தது ... | 61. |
| VIII. | தீராவழக்குத் திருக்கண்ணங்குடி, திருவரங்கம் பெரியகோயிற் திருப்பணி, காவிரிப்பூம்பட்டினத்திற் காட்டிய லீலை ... | 78. |
| IX. | அத்யயனோத்ஸவம், ஆற்றில் ஓடம் கவிழ்த்தது ... ... ... ... ... | 93. |
| X. | ஸ்ரீ சடகோப உபநிஷத்தின் சாரார்த்தம், திருக்குறுங்குடியில் யோகநிஷ்டை, தெளிவிசும்பு திருநாடு ... ... | 100. |

நாமகட்கோர்சிரோரத்தினம்! நமக்கோர் ஜீவரத்னம்!!

ஸ்ரீ

# பிரசன்ன ராகவம்.

தமிழ் வசனம்.

1. ஸ்ரீமத் அயோத்தியாபுரியில் தசரத சக்கரவர்த்தி அரசாக்ஷி செய்தகாலத்தில் நாம் இருந்து ஸ்ரீ சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன அநுமத் சமேத ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் திவ்ய லீலாவிநோதங்களை நேரே கண்ணாரக்கண்டால் எவ்வளவு ஆனந்தம் அடைவோமோ அதனிலும் பதின்மடங்கு ஆனந்தம் இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் அடைவோமென்பது உண்மை! உண்மை!! முக்காலும் உண்மை!!!

2. இத்திவ்ய காவ்யமானது நமதுபூர்வ ஆர்ய மணிகளில் ஒருவரும் மகா பரமபாகவதோத்தமரும் ஆகிய ஸ்ரீமத் ஜெயதேவ ஸ்வாமிகளால் அநேக நூற்றாண்டுகளுக்குமுன் சமஸ்கிருத பாஷையில் நாடக ரூபமாய்ச் செய்யப் பெற்றிருந்ததை சிலவாண்டுகளுக்கு முன் அருட்செல்வத்திலும் பொருட்செல்வத்திலும் கல்விச்செல்வத்திலும் சிறந்து மகா வித்வரத்னமாக விளங்கியிருந்த கவித்தலம் ஸ்ரீமாந் துரைசாமி மூப்பனார் அவர்களால் தமிழில் மொழிபெயர்த்து வசனநடையில் எழுதப்பெற்றது.

3. நமது தமிழ்ப்பாஷையிலுள்ள மகாமேன்மை தங்கிய சிறந்த பெருநூல்களாகிய பஞ்ச காவ்யம். திருவாய்மொழி திருக்குறள் கம்பராமாயணம் வில்லி

பாரதம் முதலிய நூல்களில் காணக்கிடந்த அரியபெரிய கருத்துக்களையும் பதங்களையும் ஆங்காங்கே யெடுத்தாண்டு இதுவரையில் நமது உலகமே கண்டிராத ஓர் உயர்ந்த வசனநடையில் விளங்காநின்றது.

(4) இந்நூலைப்போல் கம்பீரமான மதுரமுள்ள வசனநடையில் மகா அழகாய் எழுதப்பெற்ற வேறு நூல் ஒன்றேனும் கிடையாது ஆதிகாலத்திலுள்ள முதற் சங்கம் இடைச் சங்கம் கடைச் சங்கங்களிலிருந்த புலவர்களாவது பிற்காலத்திலுள்ள எந்த வித்வான்களாவது ஒருநூல் இதைப்போல் எழுதவுமில்லை இனி எவரும் எழுதப்போவதுமில்லை.

5. நாங்கள் இந்நூலைப்பற்றி அதிகமாய்ச் சொல்வது மிகையானதால் சுவல்ப விலையுள்ள ஒரு புஸ்தகத்தை வாங்கி வாசித்து நீங்களே இராம நாம மானது மகா மந்திரங்களுக்கெல்லாம் தலைமையானதும் தாரகமானதும் என்று அறிவீர்களோ! அதுபோல் இந்த பிரசந்நராகவமானது இதர ராமாயணங்களுக்கும் மற்றெல்லா நூல்களுக்கும் தலைமையானதும் சிரேஷ்டமானதும் என்பதை நன்கு கண்டுகொள்ளலாம்.

இரண்டாம்பதிப்பு இதன்விலை அணா 8.

சுவல் காப்பிகள் அச்சிடப்பெறுவதால் வேண்டுவோர் உடனே எங்களுக்கெழுதவும்.

ஜெ. ஆர். கோபால் தாஸ் கம்பெனி,
86-ெந. பெருமாள் தெற்குவீதி,
நாகபட்டணம்.

ஸ்ரீ

# குமுதவல்லி

# திருமங்கைமன்னன்

வழிபடு கடவுள் வணக்கம்.

* திருமாலுக்கடிமை செயுஞ் செகத்தீர்க ளொன்றுணர்த்து
மொருவாய்மை கண்டுங்கேட்டுணர்ந்திருந்து முணரார்போ
பெருமால் செய் பிறதெய்வம் பேணுவார் சிலரென்னே [ல்
வருமாயை களைந்தருளும் மதிளரங்க மாதவனே.

## முதல் அத்யாயம்.

இடம்-சுவர்க்கலோகம். காலம்-அருணோதயம்.

பாத்திரங்கள் { சுவேதவதி. அம்ஸகாமினி. அரதநாங்கி. திவ்யதேஜஸி.

சுவேதவதி :—அடி அம்ஸகாமினி! ஏ திவ்யதேஜஸி! அடி அரதநாங்கி! நாமெல்லோரும் பூலோகம் சென்று †"பாழியந்திண் டோட் படுசுடர்க்காலும் ஆழியங்கடக்கை அண்ணல் கோட்டமும், பொன்றிகழ் நோக்கத்தவுணர்ப்புடைத்த வன்றியம் பெயரிய மாயோன் குலமும்" இன்னும் பலதலம் மன்னிப்பொலிதரும் வாணாடர் புகழ் சோணாடதனில் திருவெள்

* திருவரங்கப்பதிற்றுப்பத்தந்தாதி.

† மாணிக்காற்றுப்படை.

ளக்குள மடைந்து ஜலக் கிரீடை புரிந்து கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூவென்னும் நால்வகைப் புஷ்பஜாதிகளில் அபீஷ்டமானவற்றை அவரவர்கள் கொய்து வரலாம் புறப்படுங்கள்; ஏடி சேடி! விமானத்தை யலங்கரித்துக் கொண்டுவாடி.

அம்ஸகாமினி:—சகி! பார் இதோ! சேடியும் புஷ்பவிமானத்தைக் கொண்டுவந்து விட்டாள். வாராய் ஆரோகணிப்போம்; மற்றைய அப்ஸர ஸ்திரீகளும் ஏறிவிட்டார்களா? விமானமும் இதோ செல்லாநின்றது.

சுவேதவதி:—ஏ அம்ஸா! பாரடி, உடன்வரு மனைவரும் கூடிக்கூடி யேதேதோ அவரவர்கள் பட்டதுங் கெட்டதுமான பற்பலவார்த்தைகளை மிருதுவாய்ச் சம்பாஷித்துக்கொண்டு போகாநிற்கையில், நாமிருவர்மட்டும் "மௌநம் கலகநாஸ்தி" என்னும் முதுமொழியை முற்றுமுணர்ந்தோர் போல் ஏன் வெறுமனே செல்ல வேண்டும்? நாமோ இப்பொழுது பூலோகத்திற்குச்சமீபமாய் வந்துவிட்டோம்; இதோ நமக்கு நேரில் ஓர் சுந்தரவனம் தோற்றுகின்றது பார்த்தனையா? ஆகா! என்ன மனோரம்யமாக விளங்குகின்றதடி.

அம்ஸகாமினி:—அடி சுவேதா! அவ்"வண்டுபாடும் பொழி" லினிடமாக "நன் பொனேய்ந்த மதிள் சூழ்"ந்து ஓர் திரு நகரானது ஜ்வலிப்பதைப் பாராய்; அதுதானடி குறையலம்பதி யென்னும் மாநகர். அதனிடமாகத்தான் சாக்ஷாத் ஜகதீசனான பகவான் உலகை உய்வித்தருள்வானாய் வல்லித்திருவென்னும், அரசநங்கையின் தவத்தினுக் குவந்து நீலனென்னும்

குறுநிலமன்னனுக்கு, சார்ங்காம்ஸமான ஓர் *புத்திரரத்னத்தை, அளித்திருக்கின்றார்; அவர்தானடி, கிரேதாயுகத்தில் கர்த்தமனென்னும் பிராமணனாகியும், திரேதாயுகத்தில் உபரிசரவசுவென்னும் க்ஷத்திரியனாகியும், துவாபரயுகத்தில் சங்கபாலனென்னும் வைசியனுமாக, அவதரித்து அற்புதம் விளைத்தபொற்பினரடி; அவர் பெயர் பரகாலனென்பார்கள். அந்நவர் மிகுந்த பராக்கிரமசாலியாகவும், "ஆடல்மா" என்னும் உன்னதமான அஸ்வமும், ஜகந்மோகந குஞ்சரமென்னும் ஓர் அழகிய யானையும், உடையவராயும், வீரவாளேந்துந்திரனுயும், விளங்குவதைச் செங்கணான் என்னும் சோழபூபதி கண்டாச்சர்யப்பட்டு, தனதிராஜ்ஜியத்திலுள்ள குறுநில மன்னர்களுக்கெல்லாம் தலைவனுயிருக்கும்படி வேண்டிக்கொள்ள, அதற்கவரு மிசைந்து, நீர்மேல்நடப்பான், நிழலிலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன், ஆலிக்குறும்பன், கோட்டியாள் பார்க்குங்குறுமுனி, ஞானத்தெளிந்தான், பகலிரவணுக்கன் என்னும் அஷ்டமந்திரிகள் புடைசூழ வீற்றிருந்து செங்கோல் செலுத்தி வருகின்றாரடி; சுவேதா! அவரால் இனி இத் தராதலத்தில் அநேக அற்புதங்கள் நடக்கப்போகின்றது, நாம் கண்குளிரப் பார்க்கலாமடி.

சுவேதவதி:—அடி அம்ஸா! நாம் இதுபோது யாரைப்பற்றி உரையாடா நின்றேமோ, அவ் விடபுருஷரானவர், இதோ அஸ்வாரூடராய் சவாரிவருகின்

---

* இவர் கலி 398. நளஹு கார்த்திகை மாதம் வியாழக்கிழமை கிர்த்திகை நக்ஷத்திரத்தில் அவதரித்தார்.

ருர் பாரடி ; ஆஹா ! இவர் மூலமூர்த்திபோல நீலநிறமும், சந்திரன்வெட்கும் சுந்தரவதனமும், அங்கஜனெய்தா துங்கசோபிதமும், உடையராய் மங்கையர் மனதிற்கிங்கிதம் தருவதாலன்றோ ! இவர்க்கு மங்கை மன்னவரென வந்தது நாமம் ; அடிசகி ! இவர் வையாளி நடைக்கும், ஒய்யாரக்கொண்டைக்கும், என்னவென் றுவமை எடுத்துரைப்பேனடி ? ஆஹா ! இவரை கூடி அணையும்பெற்றி யாவளுக்கெய்துமோ ; அன்னவளன்றோ அதிபாக்கியவதி ? அம்மம்ம ! இதென்ன ஆச்சர்யம் ? அவர் குதிரையை என்ன அதிவேகமாய் விட்டுக்கொண்டு போய்விட்டாரடி.

அம்ஸகாமினி :— ஏடி சுவேதா ! அவரும் அதோ மறைந்து விட்டார். நாமும் இதுபோது உத்தேசித்து வந்த திருவெள்ளக் குளமடைந்தோம். இதோ அந்தத் தாமரைத் தடாகமானது சமீபத்தில் ரமணீயமாய்த் தோன்றுகிறது. நாமெல்லோரும் இவ்விடம் நின்று விமானம் விட்டிழிந்து ஜலக்கிரீடை புரியப்போகலாம் வாருங்கள்.

சுவேதவதி :— ஆகா ! அம்ஸா ! அப்படியே. ஏ ! அரதநாங்கி. ஏ திவ்யதேஜஸீ ! வாருங்கள் ; சேடி விமானத்தை நிறுத்தி விட்டாள் ; எல்லோரும் ஜாக்கிரதையாகக் கீழிறங்கி, ஒரு பக்கத்தில் நமது ஆடையாபரணங்களை யெல்லாங்களைந்து வைத்து விட்டு, ஜலத்திலிறங்கிச் சிறிதுநேரம் விளையாடிக்கொண்டிருந்து, பின்பு விரும்பிய மலர்களைக்கொய்து செல்லுவோமாக ;

இவ்வாறு அப்ஸரஸ்திரீகள் ஜலத்திலிறங்கி நீந்தியும் குதித்தும் விளையாடிக்கொண்டிருத்தல்.

அம்ஸகாமினி :— என்னடியம்மா! நாம் ஜலத்திலிறங்கி எந்நேரமாகிவிட்டது? இன்னும் விளையாடிக் கொண்டிருந்தால் எப்போது புஷ்பங்களெடுத்துக் கொண்டு நமது சுவர்க்க புரிக்குச் செல்லுகின்றது? அடி சுவேதா! நீ செந்தாமரைமலரைப் பறியடி, திவ்ய தேஜஸி குமுதமலர்களைக் கொய்யட்டும், நான் நெய்தற் போதைக் கொய்து வருகின்றேன், மற்றவர்கள் இஷ்டமானவைகளை எடுத்து வரட்டும்.

சுவேதவதி :— அடி அம்ஸா! எல்லோரையும் அழைப்பாய்! நாமிவண் போதரலாகி எவ்வளவுகால மாகிவிட்டது. "நீர்விளையாடேல்" என்பதைக்கூடக் கவனியாமல், அதிக காலம் போக்கிவிட்டோம்; ஆனதால் யார்வந்தாலும் வாராவிட்டாலும் நீவாடி நாம் போகலாம்; சரி மற்றைய மாதர்களும் இதோ விமானத்திலேறி விட்டார்கள். அடி சேடி! விமானத்தை விடடி! சீக்கிரமாய்ப் போகட்டும். காலஹரணமாகி விட்டது;

திவ்யதேஜஸி நீங்கலாக மற்ற மகளிரெல்லாம் விமானமேறிக் ககனமார்க்கமாய்ச் சுவர்க்கலோகம் சென்று விட்டார்கள்.

திவ்யதேஜஸி :— ஆஹா இதென்ன விபரீதம்! நம்முடன் வந்த சகிமார்களெல்லோரும் அவர்கள் போன அவசரத்தில் நம்மைக் கவனியாமல் போய்விட்டார்களே; நாமும் குமுதமலர் கொய்யுங் கொண்டாட்டத்தில் நின்று விட்டோமே; இப்போது நாம் யாது செய்வது? தன்னந் தனியளாய் இவ்வகாதவேளையில்

தகாத விடத்தில் வந்து சிக்கிக் கொண்டோமே; இனி எவ்வாறு விண்ணுலகம் செல்லுகின்றது; எனது இன்னுயிர்ச் சேடியாகிய சுவேதவதிகூட என்னைமறந்தே போயினளே; ஆ! ஜகதீசா! அடியாளுக்கு இவ்வளவுதானு சுவர்க்கானுபவம்? இனி நரை, திரை, மூப்புக்கேதுவான பூவுலகத்தில் வசிக்கவா விடுத்தனை; ஹே கருணாநிதி! உடன் வந்து போன மற்ற ஸ்திரீஜாதிக ளெல்லாரும் தம்மை யலங்கரித்துத் தம்மழகைப் பார்ப்பதற்காகவல்லவோ? அவர்கள் மலர்கள்கொய் தேகினர். அடியாள் அப்படியல்லவே? உன்னை யலங்கரித்து உன்னழகைக் காணக் கருதியன்றோ? குமுதமலர்களை அமிதமாய்க் கொய்தது. அவ்விதமாக விருப்ப, ஏ ஆபத்பாந்தவா! அனுதரக்ஷகா! இவ்வித அல்லலுறும் வண்ணம் ஆக்கினையே? இனி அப்ஸர உருவைக்கரந்து மானிடரூபத்தைப் பெற்று மண்ணுலகபோகம் நண்ணவும் காலமோ? ஏ. பரஞ்சோதீ! நினது கருணையே கருணை; இந் நிர்மானுஷீகமான விடத்தில், நான் எங்குக் கண்டு செல்வேன். ஆகா? இதோ கூப்பிடுதூரத்தில் கோயி லொன்று தோன்றுநின்றதே; அதனிடமாகத்தான் "ஆலைப் புகை கமழும் அணியாலி யம்மான்" அமர்ந் திருக்கின்றானு; ஒன்றுந் தெரியவில்லையே! ஏ! தீன பந்தோ! அன்றுனைக்கோடி அருள் சுரந்ததுபோல் இன்றெனைக் காக்க நன்றுவாராயோ? ஆகா? என்ன தான் இன்னல் எய்தியபோதும், "நின் மன்னு சேவடியை மறவாமை" வைத்தருளினுய்; ஆன தால்.

*" குரவை யாய்ச்சியரோடு கோத்ததும்
குன்ற மொன் றேந்தியதும்
உரவு நீர்ப்பொய்கை நாகம்காய்ந்ததும்
முட்பட மற்றும்பல
அரவிற் பள்ளிப் பிரான்றன் மாய
வினைகளையே யலற்றி
இரவு நன்பகலுந் தவிர்கிலம் என்ன
குறை யெனக்கே"

ஏ பரமபுருடா! சதா உன்னையே தியானித்திருப் பார்க்கு ஒரு குறையும் நேருமோ? நேராதென்பது அநுபவசித்தமன்றோ? ஆகா இதோ அணித்தில் ஒரு பெரியவர் போதருகின்றார். அன்னவரும் இம்மார்க்கமாய்த் தான் வருகின்றார்போலும். நாம் ஸ்திரீ ஜாதியானதால் கிஞ்சித் மறைவாக இவ்விருக்ஷத்தினடியில் காத்துநிற்போம். அவர் தாமாய் நம்மை வினவுவரேல்; "உற்றது கூறின் அற்றது பொருந்தும்" என நேர்ந்தவற்றை யுரையா நிற்போம். பின்னர் பகவானுடைய செயல் எவ்வாறாயினும் ஆகுக.

---

(சுசீலர் பிரவேசிக்கிறார்.)

சுசீலர்:— நமது நாங்கைமாநகரிற்கு இத்தடாகம் சிறிது தூரமேயானாலும், ஏகாந்தத்தை யுத்தேசித்தே சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு போகலாமென்று, ஈண்டெய்தலானேம். ஆயினும் இத்தாமரைத் தடாகக் கரையில் அதி ரூபலாவண்ய மமைந்த ஓர் இளங் கன்னிகையானவள், ஒருவர் துணையுமின்றித் தனித்து, அவ்வசோகத்தருவினடியில் மறைந்து, ஏதோ வியாகூலத்தோடு, நிற்கின்றனள்; அப்

* திருவாய்மொழி.

பெண்மணியை யாரென விசாரித்து, கூடிய சகாயத்தைப் புரியாது போவது நம்போன்ற பிரபந்நனுக்கு அழகேயல்ல; ஆனதால் வினவி யறியலாம். ஏ? அம்மணி! நீ யார்? மிகவும் சௌந்தர்யம் நிறைந்த யுவதியாயிருந்தும், இவ்வரிய கூவிள வனத்தில் தனியளாய் நிற்கக்காரணம் யாது? ஏ? வத்ஸே! உள்ளதை ஒளியாமற் கூறினால், என்னாற் கூடிய நன்மையைச் செய்யச் சித்தனாக விருக்கின்றேன் தெரிவிப்பாய் குழந்தாய்.

திவ்யதேஜஸி:—பெரியீர்! நமஸ்கரிக்கின்றேன்.

* "உயர்குடி நனியிற் றோன்றல்
ஊனமில் யாக்கையாதல்
மயர்வறு கழிந்த கேள்வித்
தன்மையால் வல்லராதல்
பெரிதுணர் வறிவேயாதல்
பேரறங்கோட லொன்றுங்
கரிதிவை பெறுதல் கூடா
பெற்றவர் மக்களென்பார்.

ஆனதால் தங்களை இன்னதென்று கதியற்ற இப்பேதைக்கு அறிவித்தால் பின்னர் சவிஸ்தாரமாய் எனது வரலாற்றைத் தெரிவிக்கின்றேன்.

சுசீலர்:—ஹே, வத்ஸே! யானே திருநாங்கூரில் வசிக்கும் சுசீலன் என்னும் ஆயுர்வேதியன். ஆனால் எனக்குப் புத்திர சந்தானம் இல்லாத ஓர் குறையை மட்டும். தெய்வநாயகன் வைத்திருக்கிறானே யல்லது மற்றொன்று மொன்றிலும் குறையேயில்லை குழந்தாய்.

---

* வளையாபதி.

திவ்யதேஜஸி:— ஐயன்மீர்! அடியாளோ விண்ணுலகில் வசிக்கும் அப்ஸர ஸ்திரீகளில் ஒருத்தியாணும் சில ஸ்திரீகளுமாய் ஜலக்கிரீடை செய்வதன்பொருட்டு விமாநாரூடராய், இத்தரணியை யடையலானோம். அப்படியாக இத்தடாகமடைந்து விளையாடிக்கொண்டிருக்கையில், குமுதமலர்கொய்வதில் ஞாபகமாய் அடியாள்மட்டும், பாக்காய் நின்றுவிட்டேன் இதர ஸ்திரீகளெல்லாம் என்னையும் அவர்கள் மறந்தவர்களாய் விமானத்திலேறிக் ககனமார்க்கம் சென்றுவிட அப்பால் இப்பேதையானவள் "என்செயலாவது யாதொன்றுமில்லை பினித்தெய்வமே உன்செயலே" செயலென்று நினைத்து இம்மாநுட உருவைத்தாங்கி, இவண் அநாதையாய் புலம்பிக்கொண்டிரா நின்றேன்; கோமானே! இது தான் அடியாள் வரலாறு: இனி என்னைத் தாங்கள் தான் இரக்ஷித்தருளல் வேண்டும்.

சுசீலர்:—ஏ கண்மணி! எனக்கேற்பட்டிருந்த மக்களில்லா மனக்குறையை இன்றுதான் வயலாளி மணாளன் நீக்கி வைப்பானாய் நின்னை உதவினான் போலும்; ஆகா? இறைவனது கிருபை இருந்தவாறென்னே? ஏ வத்ஸே! நீ யாதொன்றுக்கும் கவலையுறவேண்டாம். என்னுடன்வருவாய்; எனதுகிரகத்திற்கு அழைத்துப்போகிறேன். நீ குமுதமலர்க்கையளாய் நின்றமையால் உனக்கு இனிக் குமுதவல்லியென்ற நாமகரணந்தரித்து எனது புத்திரியாய்க் கொண்டு வளர்த்து வருகின்றேன் வாராய்.

நாமும் திவ்யதேஜஸிக்கு சுசீலர் வைத்த குமுதவல்லி யென்னும் பெயரையிட்டே அழைப்போமாக.

குமுதவல்லி:— அத்த! அப்படியே பின்பற்றி வருகின்றேன். கிரகத்திற்கு செல்வீர்களாக.

சுசீலர்:—ஏ வத்ஸே! இதோ வந்துவிட்டோம் நமதுகிரகத்திற்கு; வாசலில்வந்து நிற்பவள் தான் எனதுபாரியாளான பிரேமாவதியென்பவள். வருவாய் கிரகத்தினுட் செல்லலாம்; அடி பிரேமாவதி! வா இப்படி? அடி இன்று தான் ஜெகதீசன் நமக்கேற்ப ட்டிருந்த பிள்ளையில்லாப் பெருங்குறையைத் தீர்ப் பானுகி இப்பெண்மணியைத் தந்தருளினுன் காணுய். அடிபிரியே! பார். நான் திருத்தேவனுர்த்தொகைத் தெய்வநாயகனைச் சேவிக்கச்சென்று, திரும்புகாலையில் மார்க்கத்திலுள்ள தடாகத்தையணுகி நித்ய கர்மானுஷ் டானத்தை முடிப்பான் செல்லா நிற்க ஆங்கண் இக் கன்னிகை தனியளாய் நின்று விம்மி விம்மி ரோதனம் செய்துகொண்டிருக்கக்கண்டு, சகியாதவனுய்த் தேறு தல் கூறி நிகழ்ந்த விபத்தினைத்தெரிந்து ஆதரிப்பதாய் உறுதி, மொழிந்து அழைத்து வந்திருக்கின்றேன். காந்தி! உனது அபிப்பிராய மென்ன தெரிவிப்பாய்.

பிரேமாவதி:-ஆ என் நாதா! இவ்வனிதாமணியை என்கண்மணிபோல் வளர்த்து வருவதில் என்னதடை. மற்றும் தனது நாயகன் பார்த்து; ஒருகார்யத்தை புரி வாய் என நியமித்தால், அதனைமறுது புரிவதன்றே? கற்புடைய் மகளிரின் கடமையாகும். அப்படியாக நான் எவ்வாறு அன்னிதா பிரதி யுத்தரம் சொல்லப் போகின்றேன்! உலகத்தில் வலியவந்த சீதேவியை வேண்டாமென்று உபேக்ஷிப்பாருமுண்டோ? ஆ என் கண்ணே! அருகில் வாராய் ஒரு முத்தங்கொடு! உனது நாமம் யாது தெரிவிப்பாயடி யம்மா!

குமுதவல்லி:—அன்னைமீர்! குமுதவல்லி நமஸ் கரிக்கின்றேன் மேலும் தங்கள் உதரத்தில் ஜனித்த

மகவினைப்பார்க்கிலும் பதின்மடங்கு நன்றி யறித லுடன் மாதாபிதாவாகும் தாங்களிருவருமிட்ட பணி களைத் திட்டமாய்ச்செய்துகொண்டு கிரக கிர்த்தியங் களில் ஒரு குறையும் வாராமல், அடியாள் பார்த்து வருகின்றேன். அம்மையீர்! இனித் தாம் ஒன்றை யும் கவனித்தல்வேண்டாம். சுகமேயிருங்கள் ;

பிரேமாவதி:—அடி குமுதா! ஆகா உனது இஷ் டப்படியே நடந்து கொள்ளுகின்றேன் இனி யாவும் உன்னுடையதே ;

# இரண்டாவது அத்யாயம்.

*"வலியி லன்று தந்தை செற்ற
மைந்தனுக்கு வந்தபேர்
நலி வெலா மகற்று நாம
நாலிரண்டெழுத்துடன்
பொலியு நாம மறைகள் சொன்ன
பொருள்விளங்கு நாமமுன்
கலிய னெங்கள் மங்கை யாதி
கண்டுகொண்ட நாமமே.

இடம் - திருவாலிநாடு: காலம்-வைகறை:

(பாத்திரங்கள் - பரகாலர்: சுசீலர் : குமுதவல்லி: பிரேமாவதி.)

பரகாலர்:—நாமின்று காலையில் படுக்கைவிட்டுத் துயில் நீத்து எழுந்திருக்கும்போது ஜன்னல் வழியாய் வீதியில் நோக்குகையில் ஓர் மணமக்கள் தம்பதி சகிதராய் செல்லாநிற்கக் கண்டோம்; அதன் பலன் மிகுந்த நன்மையைத்தான் தர வேண்டும். வரட்டும் பார்ப்போம்; நமது அன்பார்ந்த நண்பராகும் திருநாங்கூர் சுசீலரைச்சேவித்து வெகுநாளாய் விட்டது. அவரைச் சென்றுபார்த்து வருவோம். ஏ சாரதி! அஸ்வங்களைப் பூட்டி இரதத்தைக்கொண்டுவா ஆகா! இரதமும் தயாராக வந்து நிற்கின்றது; நல்லது நாம்ஏறிச்செல்வோம். சாரதி! இரதத்தை திருநாங்கூர் சுசீலர் திருமாளிகைக்குக் கொண்டுபோய் நிறுத்துவாயாக; சரி. இதோ அவர் கிரகத்தின் வாசலில் வந்து

---

* வில்லிபாரதம்.

விட்டோம். இரதமும் நின்று விட்டது இறங்கி உட்செல்வோம்.

சுசீலர்:—என்னடி குமுதா! இவ்வளவுவேகமாகத் தானே என்வீட்டிற்குள்ளேயே ஓட்டம்பிடிக்கிறாய் மெதுவாய் நடந்தாலென்ன!

குமுதவல்லி:—இல்லை அண்ணா! வாசலில் இரதம் ஓடிவருகிற சப்தம் கேழ்க்கிறதே என்னவென்று பார்க்கலாமென போனேன்; நமது வீட்டின் வாசலில் இரதமும்வந்து நின்றது அதினின்றும் ஓர் சார்வபௌமன் வெளிப்பட்டு இதோ நமது வீட்டிற்குள் வருகிறதை கண்டதும் ஓடோடியும் வந்து விட்டேன்;

சுசீலர்:—அப்படியா; வத்ஸே! கோபித்துக் கொள்ளாதே? நான் தெரியாமல் கேட்டேன். நீ அந்தப்புரத்தில் போயிரு! நான் யாரென்று பார்த்து வார்த்தையாடி வருகின்றேன்; அதோ வந்து நிற்பவர் யார்? பாகாலப் பெருமானே! நமஸ்காரம் அடடடா, ஆகா அங்கே நிற்பானேன், இப்படி கிருபை வைத்து உள்ளே எழுந்தருளுகிறதுதானே? இந்த ஆசனத்தில் அமருவீர்களாக; தன்யனானேன்! தன்யனானேன் அடிகுழந்தேகுமுதவல்லி! பூபாலனுக்கு தாம்பூலங்கொண்டுவந்து வையடி; "சுவாமிந்! தேவர் இவ்வளவுதூரம் அடியேனை ஒரு பொருட்படுத்தி அன்பு மேலீட்டால், தாஸ்யனது கிரகமேற எழுந்தருளஎன்ன பாக்கியம் செய்தேன்; விசேஷம்யாது? தெரிவிப்பதுடன் இதோ குழந்தை தாம்பூலத் தட்டங்கொண்டு வந்துவிட்டாள். தரித்துக்கொள்ளுவீர்களாக.

பாகாலர்:—ஆர்வலீர்! இன்று அருணோதயத்தில் ஓர் சுபதெரிசனம் கண்டேன். அதன் பலாபல

த்தை இன்னதெனஎதிர் பார்த்தவனாய், அரண்மனையை விட்டு வெளிப்படுகையில், தமது ஞாபகம் வந்தது; உடனே தம்மைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வரலாயினேன். அது போலவே புத்திர சந்தான மில்லாத தமக்கு ஓர் யுவதியான தருணீமணியானவள் தமதில்லத்தில் புத்திரியாய் வதிதரவும், அன்னவளே எனக்கு தாம்பூலங்கொணர்ந்தீயா நிற்கவும், கண்டானந்த மடைந்தேன்; என்ன ஆச்சரியம்? நண்பீர்! அம்மடமங்கையின் வரலாற்றை வியக்தமாய் தெரிவித்தல் வேண்டும்?

சுசீலர்:—மன்னர் பிரானே! யான்ஓர் தினம் திருத்தேவனார்த் தொகையில் எழுந்தருளியிருக்கும் தெய்வநாயகனைச் சேவிப்பான் சென்று திரும்புகையில், மார்க்கத்திலோர் பொய்கையில் இப்பாலையானவள் தனித்து நின்று ரோதனம் புரிந்து கொண்டிருக்கக் கண்டு மிகவும் மனங்கசிந்து சமீபஞ்சென்று, நேர்ந்த அசம்பாவிதத்தை யுணர்ந்து, எனது கிரகத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறேன். அன்றியும் இப்பெண்மணிக்கு சீக்கிரத்தில் ஓர் தகுந்த வரனைத் தேடி, பாணிக்கிரகணம் செய்து கொடுக்கவேண்டியது முக்கியமான விஷயம்; பூபதி! அது உத்தேசமாய்த் தானிருக்கிறேன்.

பரகாலர்:—சுசீலரே! அக்குயின்மொழிக்கோதையாங் குமுதவல்லியானவள், எப்பொழுது எனக்குத் தாம்பூலங்கொண்டு வந்து வைத்தனளோ? அப்பொழுதே என்மனதானது ஓர்வித அத்யந்தப் பிரீதியை அப்பூவைபால் மிகுதியுங்கொண்டுவிட்டது; ஆனதால்

தாம் திருவுளமுவந்து அக்கன்னிகையை எனக்கு பாணிக்கிரஹணம் செய்து கொடுத்து பார்யாளாகும் படி அனுக்கிரகித்தருளல் வேண்டும். அற்றேல்! கணமேனும் யான் இனி உயிர் வைத்திரேன். இது நிச்சயம்; பிறகு தமது சித்தம் எனது பாக்கியம்.

சுசீலர்:—ஏ ராஜந்து! அவ்வாறே தேவர் விரும்பிய வண்ணம் தமக்கு இல்லக்கிழத்தி யாக்குவதில் எனக்குப் பூரண சம்மதம்; அல்லாமலும், தம்மைப் பார்க்கிலும், பராக்கிரமத்திலும், வீரத்திலும், தீரத்திலும், அழகிலும், அந்தசந்தத்திலும், ஐஸ்வர்யத்திலும், நடையிலுங், கொடையிலுங், குணத்திலும், இன்னும் மற்ற எந்த விதத்திலும், சமமேனும் மேம்பாடுற்றவர்களேனும், இப்பூவுலகில் இனி யாரிருக்கிறார்கள்; ஆனால் ஒரு விஷயம், அப்பெண் மணியின் அபிப்பிராயத்தை மட்டும் அவசியம் கேட்டறிந்து கொள்ளுவோம்; ஏ வத்ஸே! குமுதவல்லி! இப்படித் திரைமறைவில் சற்றுவருவாய்; இதோ ஆண் சிங்கம் போல் வீற்றிருக்கும் மங்கைநாட்டு மன்னர் பிரானனவர் நின்னை மனைவியாக அடைய விரும்புகின்றார்; அதுபோல் உனக்கும் அபிமதமுண்டா? இல்லையா வென்பதை ஒளியாது கூறுவாய் குழந்தாய்;

குமுதவல்லி:—பிதா! இது விஷயம் தாங்கள் என்னைக் கேட்பதானது எனக்கே மிகவும் லஜ்ஜையாக விருக்கிறது; பாருங்கள்: தாங்களென்ன, எனது அம்மையாரென்ன, தாங்கள் 'இருவர்களும் பார்த்து இஷ்ட முண்டாகில் அப்படியே செய்யலாம். சில மதியீனப் பெண்களைப் போல அடியாள் தடுத்துச் சொல்லுபவள் அல்ல; ஆனால் திருவிலச்சினையுந் திருமண்

தாரணமும் பெற்றவர்க்கொழிய, "மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன்" இதுதான் எனது அபிப்பிராயமாகும்.

பரகாலர் :—ஆகா! நன்குணர்ந்தேன் சுசீலரே; எனக்கு *"திருமந்திரமில்லை, சங்காழியில்லை, திருமண்ணில்லை" ஆனதால் அப்பெண்ணீர்மை குன்றுப் பெருந் திருவின், மனோபீஷ்டப்படி இதோ சென்று கண்கண்ட தெய்வமாய் விளங்கும், நறையூர்நம்பி திருமுன்பே சென்று "தேனார் கமலத் திருமாமகள் கொழுநன் தானே குருவாகித் தன்னருளால் மானிடர்க்காய் இந்நிலத்தே தோன்றுதலால், யார்க்குமவன் றாளிணையை உன்னுவதே சாலவுறும்" என்னும் ஞானசாரத்தின்படி அடைந்து, சமாஸ்ரயணம் பெற்றுக் கொண்டு, போதரா நின்றேன். மற்ற விவாக மஹோற்சவத்திற் காகவேண்டிய யாவத் சாமக்கிரியைகளையும் ஆடையாபரணங்களையும், எமது அரண்மனையி னின்று இன்றே இவ்விடம் அனுப்பிவைக்கும்படி யான் மந்திரிமார்களுக்கு இதோ லிகிதம் வரைந்தனுப்பி விடுகிறேன்; அவையாவும் இன்னும் ஓர் கடிகையளவில் இவண் வந்துசேரும்; தாமும் "நாளை வதுவை மணமென்று நாளிட்டு" எங்கும் மணவோலை சிங்காரமாய் விடுத்து "பாளைக் கமுகு பரிசுடைப் பந்தர்" முதலியன வெல்லாம் அதி சம்பிரமமாய் அமைத்து செவ்வனே திருமணம் நிகழ்தருமாறு பார்த்துக் கொள்ளுங்கள்! நான் கடிதில் இதோ திருநறையூர் சென்று வந்து சேருகின்றேன் சென்று வருகிறேன்.

---

* திருவேங்கடத்தந்தாதி.

குமுதவல்லி:—அன்னைமீர்! வந்திருந்த மன்னர் மன்னனை வழிவிடப் போன எனது பிதா சுசீலரும் சிறிது தாமதமாய்த்தான் வருவார் போலிருக்கிறது. இது சமயம் என்னுடைய மனக்குறைகளை தங்களிடம் தெரிவித்து ஒருவாறு ஆறுதலடையலா மென்று கருதுகிறேன், அனுமதி தர வேண்டும் மாதஹா.

பிரேமாவதி:—அடி எனது இன்னுயிர்க்கண்ணே! நீ எப்போது உன் அழகிய செங்கனிவாயைத் திறந்து மிருதுவான இனிய மொழிகளை, வசனிப்பாய் என்று அல்லும் பகலும் எதிர்பார்த்தவளாய் அருந்தவஞ் செய்து கொண்டிருக்கிறேனடி! சொல்லடி கிளியே, சொல்.

குமுதவல்லி:—"எழிலுடைய அம்மனைமீர்!" இது போது வந்துபோன சுந்தரனைவர் நான் தெரிவித்த விஷயத்தில் ஏதேனும் கோபித்துக்கொண்டு உபேக்ஷிதராய் என்னைப் புறக்கணிப்பாரோ, ஒன்றுந்தெரியவில்லையே? என்னசெய்வேன் ஆகா! நான் நினைத்ததெல்லாங்கூடியென்ன; கழுதையைக்கட்டி ஹோமம் வளர்ப்பது போல் குபேரனைப்போல் சம்பத்துள்ளவனுயிருந்தும் தெய்வபக்தியே இல்லாத ஓர் பூமானுக்கு வாழ்க்கைப்பட்டு, "தொண்டுபூண்டமுத முண்ணுத்தொழும்பராகி" வாணுளெல்லாம் வீணேகழித்து, மீளாநரகத்திற்கு ஆளாய்ப்போகாமல் எவ்வளவோ சுவர்க்க போகமெல்லாம் நமக்கு இருந்ததே; அதெல்லாம் இப்போதெங்கே? ஏனிப்படி நா ஜென்ம மாகினேம்; எல்லாங் கூடி பகவத் பக்தி ஒன்றில்லாக் குறையாற்றுனே; என்றிப்படி பலவிதமாக நினைத்து இனி யேனும் நாம் பக்தியோடிருக்கலாமே என்றால் வரும் மணவாளனும் அக்

காரியத்திற்கனுகூலமாயிருந்தால் தான் சரி; இல்லாது நானொரு பக்கமிழுக்க நாதன் ஒரு பக்கமிழுத்தால் எப்படி பக்தியாகிற இரதம் பரமபதம் செல்லும்; என்று எல்லா விஷயத்தையும் ஆத்தீர வாராய்ச்சி செய்து வைலக்ஷண்யத் தோடாவது வந்தருளும்படிக் கேட்டேனே யல்லாது வேறல்ல? ஆகலின் ஈசன் செயல் எவ்வாறோ? அறியேன்; அம்மையீர்! எனக்கோ அக் கோமகன் பிரிவை ஆற்ற முடியவில்லை; யென்செய்வது? * "நானவனைக் காரார் திருமேனிக் கண்டதுவே காரணமாய்ப் போய்ப்பிதற்றித் திரிதருவன்; பின்னையும் ஈராப்புகுதலு மிவ்வுடலைத் தண்வாடை சோராமற்காக்கும் வகை யறியேன்; சூழ்குழலார் ஆரேனு மேசுவர் என்னும் அதன் பழியை வாராமற்காப்பதற்கு வாளா விருந்தொழிந்தேன்" ஆனதால் சரி. இதோ பிதாவானவர் வந்துவிட்டார் மாதஹா! வாருங்கள் அந்தப்புரம் போவோம்.

பிரேமாவதி:—அடிவத்ஸே! உன்னுடைய எண்ணப்படியே ஜெகதீசன் முடித்துப்போருவன் நீயொன்றுக்கும் ஆகுலமெய்த வேண்டியதில்லை, சீக்கிரம் அக் கோமகன் வந்தருள்வார். நான் சொன்னதைத்தான் பார்ப்பாய்; வா செல்லலாம்.

---

* சிறியதிருமடல்

## மூன்றாவது அத்யாயம்.

*"பொன்னேறுமார்பர் புகழ்சேர் திருவரங்கர்
என்னேரமும் பாம்பி லேகிடப்பா ரம்மானே
என்னேரமும் பாம்பிலே கிடப்பா ராமாயின்
என்னே தலைக்கு விடமேறாதோ வம்மானே
ஏறுமோ செங்கருட னேறினு லம்மானே."

இடம்-திருநறையூர் காலம்-நள்ளிரவு.

பாத்திரங்கள் { பரகாலர், நறையூர்நம்பிகள், சுசீலர், குமுதவல்லி, சேடிகள்.

பரகாலர்:—"மானேய் நோக்கு நல்லார் மதிபோல் முகத்துலவும் ஊனேய் கண்வாளிக் குடைந்தோட்டத் துன்னடைந்தேன்" ஏ ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! நறையூர் நின்ற நம்பியே! அடியேன் பத்தினியாக விரும்பிய யாதொரு குமுதவல்லியானவள் சமாஸ்ரயணம் செய்துகொள்ளாத உமக்கு மாலையிடேன் என்கிறபடியால் தேவரீர் அடியேற்கு பஞ்ச சமஸ்காரம் புரிந்தருளல் வேண்டும்; அற்றேல்? இப்போதே நும் சந்நதி முன்பே இதோ எனது கரத்திலிராநின்ற கட்கத்தினால் எனது கண்டத்தை துண்டிதம் செய்துகொள்ளாநிற்பன். ஏ. கருணாநிதி! நுமது திருவுளமெப்படியோ அருள்வீராக?

(இப்படி இவர் வீரவாளை யோங்கி வெட்டிக்கொள்ளப் போதந்தருணத்தில் நறையூர்நம்பிகள் ஓர் பிராமணராய்த் தோன்றி சமாஸ்ரயணம் புரிந்தருளுதல்.)

நம்பிகள்:—ஏ பக்தசிரோன்மணி! நீ விரும்பிய வண்ணம் யாவும் முடித்துவிட்டோம். இப்பொழுதே

* தனிப்பாடல்.

சென்று அம் மடமங்கைக்கு மணவாளனாகி நன்றே சுகித்திருப்பாய்; சென்று வாராய்.

(வந்த பிராமணர் அந்தர்த்தியான மாயினர்.

பரகாலர்:—*"உலகெலாம் படைத்த ஒருதனி முதல்வன் அலகிலாவிளையாட் டற்புதமென்னே?" †"இனியறிந்தேன் ஈசர்க்கும் நான்முகர்க்கும் தெய்வம் - இனியறிந்தேன் எம்பெருமானுன்னை - இனியறிந்தேன் - காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை-நாரணன்நீ நன்கறிந்தேன் நான்." ஏ தயாநிதி! இதோ எனது மேனியிற்றுலங்கும் துவாதசோர்த்துவ புண்டரமென்ன, சங்கு சக்கிராங்கனமென்ன, திருமணித் தாழ்வடங்களென்ன, இவ் வலங்கார வைபவத்துடனேயே சென்று, அன்னவளைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளாநின்றேன்; நமஸ்காரம் சென்று வருகின்றேன்; இதோ நாங்கூர் எல்லைவந்து விட்டோம் ஆகா; சுசீலர் திருமாளிகை என்ன நவீனமாய் சிங்காரிக்கப்பெற்றுக்காண்கிறது; அவர்களும் திருமணத்திற்காக வேண்டிய எல்லாக்காரியங்களையும் முடித்துக்கொண்டு நமது வரவை மட்டும், எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களென்று நினைக்கிறேன்; ஏனென்றால் அவர்களும் பல வாத்தியகோஷத்துடன் நம்மை எதிர்கொண்டழைக்க இதோ வருகின்றார்கள்போல் காண்கிறது சமீபம் வரட்டும் பார்ப்போம்.

சுசீலர்:—எனது புத்திரி புரிந்த நற்றவப்பயனால் மருகராய் வந்த மங்கைமன்னா! தமக்கென்று அம்பாரிவைத் தலங்கரிக்கப் பெற்று இதோ வந்துநிற்கும்

* மானவிஜயம். † நான்முகன் திருவந்தாதி.

யானையின்மீது ஆரோகணித் தருள்வீர்; ஓய் யானைப் பாகரே! மெல்ல மெல்ல மாடவீதிகள் வழியாய் யானையை நடத்திக் கொண்டுபோய் நமது மன்றல் மாளிகையின் கண்ணே நிறுத்துவீர்; ஏ ராஜகெம்பீரா! சீக்கிரம் இறங்கி வருவீராக; முகூர்த்த காலம் வந்துவிட்டது; வாரீர்! வாரீர்!! மணவரையில் வீற்றருள்வீர்; மறையவர் விதிமுறை வழாதே நின்று சரிவர யாவும் புரிதாற் காணீர்; அடி பிரேமாவதி! குழந்தை குமுதவல்லியை ஆடையாபரணாதிகளாலும், சுகந்த புஷ்பாதிகளாலும், நன்றாயலங்கரித்துச் சேடிகளைக் கொண்டு அழைத்துவரச் செய்வாய், அருணோதயமாகப் போகின்றது.

சேடிகள்:—ஐயன்மீர்! இதோ குமுதவல்லி நாச்சியாரை சர்வாபரணபூஷிதையாய் சிங்காரித்து அழைத்து வந்து விட்டோம்; வத்ஸை குமுதவல்லியானவள் தானடையப்போகும் பிராண பதியைத் தயையாக ஒரு வார்த்தை கேட்டுக்கொள்ளுகின்றாள்; என்ன வெனில், பிரதிதினமும் ஆயிரம் பிரபந்நர்களுக்கு அமுதுசெய்வித்து அவர்கள் ஸ்ரீபாததீர்த்தமும் தளிகை ப்ரசாதமும் ஸ்வீகரித்தல்வேண்டும் என்பது தான்! ஆனதால் அதற்கவர் உறுதிகூறுதல் வேண்டுமோம்;

பரகாலர்:—ஆகா! அப்படியே அன்னவள் அபிஷ்டப்படி நிறைவேற்றுவதாய் பிரமாண பூர்வமாகச் சொல்லுகின்றேன் நம்புவீர்களாக.

குமுதவல்லி:—பிராண காந்தா! நமஸ்கரிக்கின்றேன்; இதோ தமக்கு மாலையிட்டேன்; அடியாளை, அங்கீகரித் தருள்வீராக!

(மங்கலவாத்திய கோஷம் ஆசீர்வசனம் முதலியன.)

சுசீலர்:—அடி பிரேமாவதி! "திங்கட் குடையுடைச்சோழனும் சேரனும், பாண்டியனும், மங்கைக் கருகிட வந்துநின்றார் மணப்பந்தலிலே" ' ஆனதால், நமது மங்கை மணாளற்கும், நங்கை குமுதவல்லியாருக்கும் "குங்குமமப்பிக்குளிர்சந்த மட்டித்து மங்கலவீதி மணஞ்செய்து மணநீர், அங்கவனோடு முடன் சென்றங் கானைமேல்" மஞ்சன மாட்டவேண்டும்; ஆனதால் சீக்கிரமாகக் "கதிரொளி தீபம் கலசமுட னேந்தி சதிரிள மடவார்தாம் வந்தெதிர்கொண்டு" மங்களாரத்தி முதலியனபுரிந்து மணமக்களை உள்ளே அழைத்துச் செல்வாய்; நான் மகோற்சவங்காண வந்துள அனைவருக்கும் சந்தன புஷ்ப தாம்பூல பூரிமுதலியவற்றை க்ரமேண வழங்கி அவர்களை அனுப்பி வைத்துவிட்டு வருகின்றேன் செல்வாயாக.

(இவ்வாறு மிகுந்த வைபவமாய் தேவர்கள் பூமாரி பொழிய திருமணம் இனிது நடந்தேறியதும் மணமக்களிருவரும் தங்கள் நகரஞ்சென்று "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" யெனக்கொண்டு குமுதவல்லியார் நடவா நிற்க, ததீயாராதன கைங்கர்யத்தை பரகாலரும் செவ்வனே புரிந்து போதரு நாளில் காலக்கிரமத்தில் பொக்கிஷத்திலுள்ள திரவிய மெல்லாம் இது விஷயத்தில் செலவழிந்து விட்டதால் பகுதிப் பணம் வந்து கேட்ட சோழபூபதியின் பிரதானி முதலானவர்களை பணங்கொடாமல் அடித்துத் துரத்திவிடுவாராயினர்.)

## நான்காவது அத்யாயம்.

“ஏமக் கலிங்கனை யென்றாழ்த் திகிரி யிருப்பவனை
வாமக் கலிகன்றி வாழ்த்துடை வண்கச்சி வாழ்பவனை
வீமக் கலிவய மாகாது நெஞ்சே விரும்புதி யேல்
பாமக் கலிக்கடற் பார்வரு நம்பவப் பற்றறுமே.”

இடம் உறையூர் கோச்செங்கட்சோழன் கொலுமண்டபம்.
காலம்-நண்பகல்.

பாத்திரங்கள் { செங்கணான், மந்திரிகள், பரகாலர்.

செங்கணான்:—ஏ மந்திரிவர்ய! என்னவிசேஷம்? தாமேதோ சிந்தாக்கிராந்தராக இருப்பதாய் காண்கின்றது காரணம் யாது?

மந்திரி:—ஹே ராஜேந்த்ர! நமதுசெங்கோலிற்குட்பட்ட யாதொரு குறுநில மன்னர் தலைவனான பரகாலனானவன் தனது பார்யாளின் பிரார்த்தனைக்கிணங்கி, † ததியாராதனம் செய்துவரத் தலைப்பட்டு, பொக்கிஷத்திலுள்ள திரவியங்களையெல்லாம் செலவழித்து வந்து இரண்டு வருடத்திய பகுதிப்பணமும், நமக்குக் கட்டாமலிருந்து, பெற்றுவரப்போன பிரதானி முதலானவர்களையும், அடித்து துரத்திவிட்டுள்ளான். ஆனதால் இனி நாம் சதுரங்கசேனையுடன் சென்றேனும், அத்துஷ்டனின் கொட்டத்தை அடக்கினாலொழிய நம்மை இதர அரசர்கள் கிஞ்சிற்றும் லக்ஷியம் செய்யார்கள்;

* அத்திகிரியந்தாதி.

† பரகாலர் ததியாராதனம் செய்தவிடம் இன்றும் மங்கை மடமென்று வழங்கா நின்றுள்ளது.

ஆனதால் அதற்கான பிரயத்தனத்தை அவசியம் உடனே புரிய வேண்டியிருக்கிறது மகாராஜ்!

செங்கண்ணன்:-மந்திரிவர்ய! * "உமைக்கு நாதற்கும் ஓங்குபுள்ளூர் திக்கும், இமைக்கு நாட்டமோர் எட்டுடையானுக்கும் சமைத்தகோள்வலி தாங்கினராயினும் அமைச்சர் சொல்வழி யாற்றுதல் ஆற்றலே" ஆனதால் தமதபீஷ்டப்படியே செய்கிறேன் அதற்காகத் தாம் லேசமும், ஆலோசிக்க வேண்டியதில்லை இதோ நானே யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டுவந்து அப்பாமதுஷ்டனை ஹதாஹதம் செய்து விடுகின்றேன். தாம் முன்னதாக சேனாவீரர்களையும், சைந்யங்களையும் அனுப்பி யுத்தத்தை நடத்தச் செய்வீராக; நான் இதோ வந்துவிட்டேன்.

பரகாலர்:—ஆகா இதென்ன விந்தை! இன்றையே தோ நமது வலது புஜம் துடிக்கின்றது; காரணம் ஒன்றுந் தெரியவில்லை சமீபத்தில் ஏதேனும் ஓர் பெரிய யுத்தம் நேரும்போல் தோற்றுகிறது அதிருற்றான் இதோ நமது எதிரில் சோழபூபதியினுடைய சைந்யங்கள் எல்லாம் ஒருங்கே திரண்டு ஆர்ப்பரித்துக் கொண்டு வரவும், மத்தியில் செங்கணனும் போதருகின்றான் போலும்; சபாஷ்! சபாஷ்! நன்று! நன்று!! வரட்டும் பார்ப்போம். நாமினிச் சிறிதும் பாணித்திருத்தல் கூடாது; சைந்யங்களும் வந்து நாலாபக்கமும், சூழ்ந்து கொண்டன. நான் இதோ அஸ்வாரூடனாய்ச் சென்று நமது ஆயுதங்களினால் அவர்களைத் தொம்ஸம் செய்து திரும்புகின்றேன்.

---

* கம்பராமாயணம்.

(சைந்யங்களெல்லாம் பாகாலனால் முறியடிக்கப்பட்டு நாலாபக்கங்களிலும் ஓடாநிற்பதைக்கண்டு சோழனும் பீதியடைந்து சமாதானம் புரிந்துகொள்ள முற்படுகிறன்.)

செங்கண்ணன்:—ஆகா இதென்ன! போராதகாலம். சேரன் முதலான வீரமன்னர்களை யெல்லாம் கோரயுத்தம் புரிந்து புறமுதுகு காட்டச்செய்த நமது சைந்யத் தலைவர்களெல்லாம் கேவலம் ஏகாங்கியான இந்தப் பாகாலனிடத்தில் தோல்வியுற்று நாலாபக்கங்களிலும் ஓடி யொளிகின்றனர். ஆகா! இப்பெற்றிய கொற்றவனுக்கு "பாகாலன்" என்னும் பெயர் பதினுயிரம் விதத்தில் ஏற்கும்! ஏற்கும்!! என்பதில் என்ன ஆக்ஷேபனை? ஏ அமாத்யரே! இவ்வீரசிகாமணிக்கு நம்மால் அடையார்சீயம அரட்டமுக்கி, யென்னும் வீரபட்டங்களளித்திருப்பதாயும் * கண்ணனுணைப்படி அவரை யொன்றுஞ் செய்யவில்லை என்றும் தெரிவித்து அன்னவர்பால் தாமேசென்று யுத்தத்தை நிறுத்தச்செய்து சமாதானப்படுத்தி இன்மொழி பகர்ந்து நயமாய் அவ்வீரனைக் கைப்பற்றிக்கொண்டு வருவீர்; நமக்கு வரவேண்டிய அரசிறையை மட்டும் பெற்றுக்கொண்டு என்றேபோல் அன்னவரே, மங்கை நாட்டு மன்னராகவே இருக்கட்டும்; ஏனென்றால்? இத்தகைய சுத்த வீரன் நமக்குக் குறுநில மன்னர் தலைவனுக இருப்பது எவ்வளவோ கீர்த்திக்கிடமாகும்; ஆனதால், உடனேசென்று யான் தெரிவித்தபடி தந்திரமாய்க் காரியத்தை முடித்துக்கொண்டு வருவீர்.

---

* கண்ணன் ஆணை யென்பது. கண்ணுணை யென்று நாகூர் முதலிய விடங்களில் நாளைக்கும் வழங்கிவருகிறது.

பரகாலர்:—பேஷ்! இதென்ன! இருந்தாப்போலிருந்து திடீரெனச் சைந்யங்களெல்லாம் அவரவர்கள் ஆயுதங்களை கீழெறிந்துவிட்டு வெறுமனே நிற்கின்றார்கள்; அல்லாமலும், இது கால பரியந்தம் எங்கோ ஓர் மூலையில் பதுங்கிக்கிடந்த மந்திரியானவன் நிராயுத பாணியாக நம்மை எதிர் நோக்கி கையமர்த்திக்கொண்டு ஓடோடியும் வருகின்றான் காரணம் யாதாயிருக்கலாம்? ஒருக்கால் சோழபூபதியானவன் சமாதானம்செய்து கொள்ளக் கருதி மனதொருப்பட்டு இவனை யனுப்பியிருப்பானென்று நினைக்கின்றேன்; சமீபம் வரட்டும் பார்ப்போம்.

மந்திரி:—ஏ மங்கை மன்னா! யுத்தத்தை நிறுத்துவீராக! நிறுத்துவீராக!! தம்முடைய போராற்றலைக் கண்டு மிகவும் சந்தோஷித்தவராய் எமது வேந்தரேந்தலானவர் தமக்கு அடையார் சீயம், அரட்டமுக்கி என்னும் விருபட்டங்களை என் மூலமாய் அளித்ததும் அல்லாமல் "கண்ணனுணைப்படி உம்மை ஒன்றுஞ் செய்யவில்லை" யென்றும் நீர் யென்றேபோல மங்கை நாட்டை ஆண்டு வருவதுடன் குறுநிலமன்னர் தலைவனாயும் விளங்கி வருவீரென்றும் தெரிவித்து சில அந்தரங்க விஷயங்களை உமக்கு நேரில் தெரிவிக்க வேண்டித் தம்மை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றார் ஆனதால் தடைகூறாது என்பின் வருவீராக.

பரகாலர்:—மந்திரிவர்ய! அப்படியா! சரி இதோ வருகின்றேன். ஈஸ்வரச்செயல் எவ்வாறாயினுமாகுக; ஏ ராஜராஜேஸ்வரா! தமது சைந்யங்களையெல்லாம் நிர்மூலமாக்கிய இக்கொடியன்பால் சினங்கொள்ளாது

அன்பு கூர்ந்து மந்திரியை அனுப்பி அழைத்துவரச் செய்த காரணம் யாது? தெரிவித்தருள்வீர்.

செங்கணன்:—ஹே வீராதிவீரா! நினது புஜபல பராக்கிரமத்தையும் இணையற்ற, வீரச்செயலையுங்கண்டு மிகவும் மெச்சினேன்! தாம் எப்போதும்போல ஆலி நாட்டதிபனுய் விளங்கிவருவீர். ஆனால் எமக்குச் சேர வேண்டிய அரசிறையை மட்டும் கொடுத்துவிடுவீராக. ஏ அமாத்தியரே! நமக்கு இவரிடம் வாராது நின்று போன இரண்டு ஸம்வத்ஸரப் பகுதிப்பணத்தை இறுக்கும் வரையில் இதோ சமீபத்தில் தோன்றும் ஆலயத்தில் சிறைப்படுத்தி வைப்பீராக.

(பரகாலரைச் சிறைப்படுத்தல்.)

பரகாலர்:—ஆ! ஆ!! நம்மை இப்படிவஞ்சனையினுல் கைதியாக்கிய இச்சண்டாளனை ஒரு நொடியில் எமபுரத்திற்கு அனுப்பி விடுவேன். ஆனால் * "ஆலம் பார்த்துண்டவன் போல் ஆற்றல் அமைந்துளரெனினும் சீலம்பார்க் குரியோர்கள் எண்ணுது செய்பவோ! மூலம் பார்க்குறினுலகை முற்றுவிக்கு முறைதெரினும் காலம்பார்த் திரைவேலை கடவாத கடலொத்" தன்றே ஒழுகல் வேண்டும். ஏ ஜெகதீசா! இஃதென்ன பேரின்னலுக் காளாக்கினீர்; இப்பாபிஷ்டன் என்னைக்கபடமாய் பிடித்து கைதியாக்கினனே; இனியெப்படி இவனுக்கு திரவியமீவது. எனது பொக்கிஷத்திலிருந்த பொருள்களை யெல்லாம் ததியாராதனத்தில் உபயோகித்து விட்டேன் இப்போது ஒருசெப்புக்காசுகூட கையில் இல்லையே; இனி நான் என்னசெய்வேன் எப்படி அரசிறை யீவேன், "அணியார் பொழில் சூழ் அரங்க

* கம்பராமாயணம்.

நகரப்பா, துணியேன் இனி நின்னருளல்ல தெனக்கு மணியே! மணி மாணிக்கமே! மது சூதா!, பணியா யெனக்கு உய்யும்வகை பான்சோதி" என பக்தவத்ஸலா! பாம்பணைப்பராமா! என்ன உன் திரு விளையாடல். இத் தேவாலயத்தினிடமாக சிறைக் கோட்டமெய்திய மூன்று தினத்திலும் வாராத ஓர் நித்திரையானது இன்று என்னையறியாது வருகின்றது. நாம் சிறைபட்ட காலமுதல் அன்னாகாரமில்லாது வருந்துகின்றோமே; அதனாலுண்டாகிய ஓர் களையோ? யாதும்தெரியவில்லை. ஆயினும் இதோ உள்ள இம் மேடையின் மீது சிறிது சயனித்துக் கொள்ளுகின்றேன்.

(அடியவர் அங்ஙனம் அயர்ந்து நித்திரை போய்விடுகிறர்.)

மந்திரி:—பிரதான்ஜீ! என்ன ஓயாது கபாடத்தைத் தட்டுஞ்சப்தம் அடிக்கடி கேழ்க்கின்றதே!

பிரதானி:—பிரபோ! இத் தேவாலயத்தினிடமாக நம்மால் கைதியாகப் பட்டிருக்கும் பரகாலரானவர் திறைப்பணம் முற்றினு மீவதாயும் தன்னைச் சிறையினின்று விடுவிக்கும் படியாயும் பெருங் கூச்சலிட்டு அடிக்கடி கதவைத் தட்டிக்கொண்டே யிருக்கிறார்.

மந்திரி:—பிரதான்ஜீ! அப்படியானல் அவரை சிறையினின்று நீக்கி அதி ஜாக்கிரதையாய் அழைத்துக் கொண்டு போய் அவர் காட்டுமிடத்தில் நமக்குச் சேர வேண்டிய திரவ்யம் யாவையும் பெற்றுக்கொண்டு அவரை விட்டு விடுவீர்களாக. காவலர்காள்! உஷார்! உஷார்!! ஓடிப்போய் விடுவார் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பரகாலர்:—நாம் இத்தேவாலயத்தினிடமாக அயர்ந்து நித்ரை புரிகையில் எனது சொற்பனத்தில் அத்தி

கிரி யருளாளன் தோன்றி சேவை சாதித்துத் தனது காஞ்சீ நகரிற்கு வந்தால் அளவற்ற திரவ்ய மீவதாய் தெரிவித்து மறைந்தருளினன்; அப்படி நாம் கண்ட கனவையே நனவாகக் கருதி கபாடத்தைத் தட்டித் திறக்குமாறு பிரதானியிடம் தெரிவித்துவிட்டோம். அதன்படி இதோ பிரதானியும் வந்து சிறை நீக்கி என்னை அழைக்கிறான் யானும் காஞ்சீபுரிக்குப் போய் வருகின்றேன்; ஏ தீனதயாளா! உனது திருவுள்ளம் எப்படியோ! ‡ "வாழ்விப்பானெண்ணமோ வல்வினையி லின்ன மென்னை, ஆழ்விப்பா னெண்ணமோ வறிந்திலே ன்—தாழ்வில்லா, பாடலழகார் புதுவைப்பட்டர்பிரான் கொண்டாடும் கூடலழகா நின்குறிப்பு" யாதோ?

(காஞ்சீ நகரத்திற்குச் செல்லுதல்.)

பிரதானி:—ஓய் மங்கை மன்னா! தாம் தெரிவித்த படி இதோ காஞ்சீபுரத்திற்கு வந்து சேர்ந்தோம். தனத்தைப் புதைத்து வைத்துள்ள இடத்தைக் காண்பியும், இல்லையேல், உம்மை இலேசில் விடோம்; என்பதை நன்றாயறிவீர்.

பரகாலர்:—ஏ பேரருளாளா! நின்னுடைய சந்நிதியின் † "முன்னே புகுந்தேன் முகில்வண்ணா என் குறையைச், சொன்னேன் இனியோர் சொலவுண்டோ," ஏ வரதா! நீ கனவில் வந்து தெரிவித்த வார்த்தையை நம்பி இவ்விடத்திற்கு பிரதானி முதலானவர்களை பணம் தந்துவிடுவதாய் அழைத்து வந்துவிட்டேன். இதோ வேகவதி நதிதீரமும் வந்துவிட்டோம் கனவில் கண்ட வடவால விருக்ஷமும் இதோ நிற்கிறது

‡ நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.
† பெருந்தேவனார் பாரதம்.

இவ்விடத்தை வெட்டிப்பார்க்கச் சொல்லுவோம். ஏ பிரதானீ! காவலர்களைக் கொண்டு இங்கு வெட்டிப் பார்ப்பீர்.

பிரதானி:—இதுவென்ன அத்யாச்சர்யம்! "ஊருணிநீர் நிறைந்தற்றே யுலகவாம்-பேரருளாளன்கொடை" என்ன விந்தை இம்மரத்தி னடியிலாவது இவ்வளவு சுவர்ணப்புதையல்கள் இருக்கவாவது? இஃதென்னமாய மாகவிருக்கிறது வெட்ட வெட்ட மாளாமல் சுவர்ணங்கள் வந்துகொண்டே யிருக்கிறதே; ஆனதால் இவைகள் ஒருவரால் மறைத்து வைக்கப்பெற்றதேயல்ல. அது சாக்ஷாத் * ஸ்ரீ சர்வேஸ்வரனாகிய அந்த வரதராஜனது நிர்ஹேதுக கிருபாகடாக்ஷமேயாகும். இப்பரகாலப் பெருமானே மகாபக்த சிரோன்மணியாக விளங்குகிறார். ஆனதால்இவருடைய மகிமைதானிது இவரின் மனோரதநிலையை யறியாமலன்றோ! இவர் திறத்துநாமும்நமதரசனும் பெரிதும்அபசாரப்படலானோம் இவரிடம் நாம் அறியாமல் செய்த ஓர் குற்றத்தை மன்னித்தருளும்படி வேண்டிக்கொள்வதுடன் நமதுசிவிகையில் ஆரோகணிக்கச் செய்து அவரை தம் நகரத்திற்குக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும்; ஏ பரகால சீலா! இதோ நாங்கள் நமஸ்கரிக்கின்றோம் தம்முடைய பிரபாவாதிசயம் இப்பெற்றியதென வறியாது யாங்கள் செய்த பெரும்பிழையை மன்னித்தருள்வீராக; ஏ பூபால! எங்கள் இறைவனுக்குச் சேரவேண்டிய பொருள்கள் எவ்வளவோ அதனை எடுத்துக்கொண்டதுபோக மிகுதியான அளவற்ற தனங்களும் இதோ

* பேரருளாளன் வைசியனாக வந்து பொருளீந்ததாயுஞ் சரித்திர முண்டு.

இருக்கின்றன; இவை யாவும் தமக்குரியவே ஆனதால், தாம் பார்த்து இவைகளை எங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும்படி ஆக்ஞாபிக்கிறீரோ அப்படியே சேர்ப்பிப்பதுடன் தாம் எங்கள்மீது அருள் பாலித்து கறை மரம் சேர்ப்பிக்கக் கருதி இம்முத்துச் சிவிகையில் ஆரோகணித் தருளினால் தமது மங்கை நாட்டிற்கு கொண்டுபோய் விடுகின்றோம் ஏ மகாத்மந்று! விஜயம் செய்யவேண்டும்.

பரகாலர் :— இதுவெல்லாம் அப்பேரருளாளன் திரு விளையாடலே யாகும்; உங்கள் பிரார்த்தனையின் படி நாமும் வருகின்றோம்; இக் காவலர்களை யெல்லாம் திரவியப் பொதிகளை எடுத்துவரச்செய்து அதி ஜாக்கிரதையாய் நம்முடன் மங்கை நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பிப்பீர்களாக.

பிரதானி:—மன்னர் பிரானே! இனி நாங்கள் பொருட் செல்வனுன எங்கள் சோழ பூபதியின் சொல்லை ஒருக்கால் தட்டி நடந்த போதும், அருட் செல்வராகிய தேவர் திருவாக்கை எக்காலத்தினும் உல்லங்கனம் செய்யோம்; ஆனதால் தமது கட்டளைப் படியே நடந்து கொள்ளுகின்றோம்; தாங்கள் எழுந்தருளல் வேண்டும்; இதோ போயிகள் சிவிகையைக் கொண்டுவந்து விட்டார்கள்.

பரகாலர்:—அப்படியே வந்து விட்டேன்.

**(பிரதானி முதலியவர்கள் திரவிய மூட்டைகளையும் பரகாலப் பெருமானையும் மங்கை நாட்டில் கொண்டு போய் சேர்த்துவிட்டு, சோழராஜன்சமுகம் சென்று நடந்த விசேஷங்களை விவரமாய்த் தெரிவித்தல்.)**

செங்கணன் :—ஏ மந்திரிவர்ய! என்னசமாசாரம்? பிரதான்ஜீயானவர் வந்துவிட்டுப் போகிறரே, பர

காலனிடத்தில் பகுதிப்பணம் யாவும் வந்துவிட்டதா என்ன?

மந்திரி:—பிரபு மகாராஜ்! அந்த விசேஷத்தை தெரிவிப்பதற்காகத்தான் இவ்வளவு அவசரமாக வந்தேன்; சர்க்கார்! பாருங்கள், அம் மங்கைவேந்தனானவர் தேவாலயத்தில் கைதியாக விருந்தபோது அவர் சொப்பனத்தில் அத்திகிரி அருளாளன் தோன்றியருளி காஞ்சீபுரத்திற்கு வந்தால் அளவற்ற திரவிய மளிப்பதாய்ச் சாற்றினதாகவும் அதுபோல் பிரதானி முதலானவர்களை யழைத்துக்கொண்டுபோய் அங்கு ஓரிடத்தைக் காட்டி வெட்டச்செய்ய; அப்படியே வெட்டிப் பார்க்க, அளவற்ற சுவர்ணப் புதையல்கள் அகப்படக் கண்டு அவற்றில் நமக்குச் சேரவேண்டியதை மட்டும் உடனே எடுத்து இவ்விடம் அனுப்பி விட்டு, நமது பிரதானியானவர் மிகுதியான திரவியங்களை யெல்லாம் நமது சைந்யங்களைக்கொண்டே யெடுத்துவரச் செய்து, அப் பரகாலப் பெருமானையும் நமது சிவிகையிலேற்றி திரவியங்களுடன் அவர் அரண்மனைக்கு கொண்டுபோய் சேர்த்துவிட்டு வந்தனர்களாம். பிரபு பார்த்தீர்களா? மாலடியார் மாக்ஷியை. *"வற்கலை யசைத்தவரும் வானவரு முன்னாள் - முற்கலனு நான்முகனு முக்கணனு மூவா - சிற்பரம னுகுமரி நாமமது சிந்தித்-தற்புடைய சித்திகளுற் றமர்தலுறி யீரோ" மன்னவா.

சேங்கணன்:—ஆகா †"அரசர்க் கமைச்சர் அவயவ மலவோ?" அமாத்தியாய! அப்படியானால் அந்த மகாத்மாவை உடனே ஈண்டு வரவழைப்பீர்! நான் அந்தவரின் திருவடிகளைப் பணிந்து அபசார க்ஷமை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

* சித்திரகூடப் புராணம். † மனோன் மணீயம்.

மந்திரி :—மகாராஜ் ! நாங்கள் இவ்வாறு ஆக்ஞாபித்தருள்வீர்களென யான் முன்னரே யுணர்ந்து அம்மகானை இங்ஙனம் விஜயம் செய்தருளும்படி நமது சிவிகையை யனுப்பி வேண்டிக்கொண்டேன் ; அவ்வண்ணமே இதோ அம் மங்கை வேந்தனும் ஆசாரவாசலின் சமீபம் வருகின்றார் நாமும் சென்று எதிர்கொண்டு அழைத்து வருவோம் வாருங்கள்;

செங்கணான்:—ஏ மங்கை வேந்தே! இதோ செங்கணான் நமஸ்கரிக்கிறேன் சுவாமிந்! தம்முடைய அபாரமகிமை இத்தகைய தென்பதை யறியாது தேவர் திருவடியில் பெரிதும் அபசாரம் புரிந்த இந்தத் துராத்மனைக் கடைக்கணித்து இவனுய்யுமாறு அநுக்கிரகித்தருளல் வேண்டும். அல்லாமலும் தம்மை மூன்று தினம் சிறை வைத்த பாபம் தீரும்படி தம்மிடம் வாங்கிவந்த பகுதித் திரவியங்களை யெல்லாங் கொண்டு ஆங்காங்கு தமதுநாமத்தால் சாது ரக்ஷணசாலைகளமைத்து நன்கு நடத்திவருவான் மந்திரிபால் ஆக்ஞாபித்துவிட்டேன். ஆகிலும் தாமிப்போது ஆரோகணித்து வந்த இந்த முத்துச்சிவிகையையும் என்னுடைய ஞாபகார்த்தமாக அங்கீகரித்து வேண்டும்போதெல்லாம் உபயோகித்துக்கொள்ளுதல் வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன் தபோநிதி.

பரகாலர்:—ஏ ராஜேஸ்வரா! உலகில் ஒருவன் அநுபவிக்கும் சுக துக்கங்களுக்கெல்லாம் அவனவனே காரணமாகிறான் பாரும் * "கொல்வாருங் கூட்டுச் செறிப்பாரு மாடவர்கள்- அல்லாரு நாய் வேட்டம் ஆடாத மாத்திரையே-பல்லாத பைங்கிளியும் பூவையு

* சிந்தாமணி.

மாதியா-வெல்லாங் கிளைபிரித்திட் டேமுறுநோய் செய் பவே" என்பது போல நான் பூர்வஜன்மத்தில் யாரைச் சிறைவைத்தேனோ? அதனை இப்போது அனுபவிக்க நேர்ந்தது. அதற்கு தாம் என்செய்வீர்! எல்லாம் ஈசன் செயல். அவனன்றி யோரணுவும் அசையாதென்பதை அறியீரோ; ஆனதால் தாம் கேட்டுக் கொண்டபடி சிவி கையைப் பெற்றுக் கொண்டேன். சென்றுவருகின் றேன்.

செங்கண்ணன்:—நமஸ்காரம் சென்று வாருங்கள் கிருபை எப்போதும் இருக்கட்டும்.

(பரகாலர் அவணின்று நீங்கித் தமது நகரிற்குப் போந் தருளி என்றேபோல் ததியாராதனத்தை விமரிசையாய் நட த்திப் போதராநிற்க நாளடைவில் வரதனளித்த திரவியமும் தீர்ந்து கையில் பொருளற்று ஓர் நாள் கைங்கர்யத்தை நடத்த வியலாதுபோனதைப்பற்றி மனம் வருந்தினவராய் தமது அரண்மனைக்குச் செல்வாராயினர்.)

பரகாலர்:—ஆகா! என்ன ஆச்சர்யம்! நாம் எப் போது மங்கை மடத்தினின்று ததியாராதனத்தை முடித்துக்கொண்டு வருவோம் வருவோமென்று நமது வரவை அன்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்து நம்மைக் கண்டதும் நடுங்கி ஒடுங்கி மிகுந்த பய பக்தி யுடன் அழைத்துக் கொண்டுபோய் சோடச வுபசாரங் களைப்புரியா நின்றவளாய் பஞ்சபக்ஷண பரமான்னங்களை எல்லாம் தயார் செய்து வைத்திருந்து எவ்வளவோ இன்மொழிகூறி அம்ஸை புரியச்செய்து குதூஹலத்து டன் கொஞ்சிக் குலாவி விளையாடும் எனது ப்ரியசுந்தரி யாகிய குமுதவல்லியானவள் இன்றுதினம் நமதுகிரகத்

தின் கபாடங்களையெல்லாம் தாளிட்டுக்கொண்டு அந்தப்புறத்தினுள் ஏதோ சிந்தாக்கிரந்தையாய் இருக்கின்ருள்போற் றெரிகிறது காரணம் யாதாயிருக்கலாம்; ஒன்றும் தெரியவில்லையே; சரி வினவி யறிந்துகொள்வோம். அடீ ப்ரியசுந்தரி! கதவைத்திற! நான் ஒருபோதும் உன்விஷயத்தில் ஏதுந் தவறி நடந்தவனல்லவே. கண்மணி! கோபம் வேண்டாம் கதவைத் திறப்பாய்;

குமுதவல்லி:—ஆகா! நமது ப்ராணபதி வந்துவிட்டார்போல் இருக்கிறது அதனுற்றுன் கபாடத்தை தட்டும் சப்தம் கேட்கிறது நாமோ அவர்மீது மோடியாய் கபாடத்தைத் தாள் போட்டு வந்து விட்டோம் ஐயோ பாவம்! அவர் என்செய்வார்? நமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியே முன்னம் பொக்கிஷத்தினுள்ள திரவ்யத்தை எல்லாம் கைங்கர்யத்தில் செலவழித்து இப்போது வாத னளித்த தனம் யாவற்றையும் அதற்கே உபயோகப்படுத்திவிட்டார். இனி கையில் திரவியம் கிஞ்சித்தும் இல்லாது போனதால் இன்று நடக்கவேண்டிய ததியாராதனத்தை நிறுத்தி விட்டாரேயன்றி வேறில்லை; ஆனதால் இதோ சென்று கதவைத் திறந்துவிட்டு வருகின்றேன்.

(பரகாலர் உள்ளே பிரவேசிக்கிறர்.)

பரகாலர் :—அடி என் காதற்கிளியே! என் மீது உனக்கு என்ன வர்மமடி? அடீ! பார் உன்னுடைய முகாரவிந்தமானது என்றும் பூரணச் சந்திரனைப்போல் ப்ரகாசித்துக்கொண்டு இருப்பது நீங்கி இன்று ஏதோ காந்தி யெல்லாம் குறைந்து பெரிதும் வாட்டமுற்றிருக்கின்றதே கண்மணி! காரணம்யாது? இப்படி என்னருகில் வா, ஒரு வார்த்தை சொல்வாய்.

குமுதவல்லி:—பூபாலா! நீர் எனது கரத்தை விடும்! தூரநில்லும்! என்னைத் தொடாதீர்! பாரும் உலகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்களுக்கு கேவலம் சொல்லுறுதி அவஸ்யம் இருக்க வேண்டும். அது இல்லாதவர்களுக்கு என்ன சாமர்த்தியம் இருந்தும் எதற்குப் பிரயோஜனம்? பிரபு! பாருங்கள்; ஒரு பக்தர்,

* "காற்றைப் பிடித்தகொரு பீற்றற் றுருத்தியை
கலிவிடுதி வீட்டை மோட்டுக்
காக்கை கழு கீர்த்துணு மியாக்கையைத்
தேக்குபொய்க்
காம நோய்த் தீமனத்துச்
சோற்றுச் சுவற்றுறுதி நாற்றச்சடத்தை மிகு
துன்பங்களுறு பொந்தினை
துற்கந்த முற்றமல பாண்டத்தை யென்றுற்
சுமக்க முடியாது கண்டாய்
ஆற்றுட் கிடந்துகய லெற்றைப் பிளந்துசுர
வலையுட் புகுந்து வயலூ
டாளைத் துறந்துவிரி பாளைக்கருங் கமு
கலைத்துக் குலைச் செந்நெல் சேர்
சேற்றிற்குதித்து வயல் நாற்றைப் பறிக்குமவர்
செம்முகத்துலவு கெண்டைத்
திண்டிறற் கஞ்சியுயர் கொண்டல் புக்குய்ந்துவளர்
திருமல்லி வள நாடியே."

என்றுபாடியிருக்கின்றாரே? எதற்காக அவர் அவ்வாறு இச்சடத்தை வெறுத்து வேண்டாம் வேண்டாமென்று ஆண்டாளிடத்தில் வேண்டா நிற்கிறார்? ஏ பிராண காந்தா! எல்லாமறிந்தவர்களான தங்களை நான் கேள்வி கேட்பது தகுமா? தமக்கு நான் என்ன சொல்லப்

* சந்திர கலாமாலை.

போகிறேன். அல்லாமலும் தாம் எனக்கு ஆதியில் என்ன வாக்குத் தத்தம் செய்தீர்கள்? இப்போது ஏன் அதன்படி நிறைவேற்றாமற் போனீர்கள்?

பரகாலர்:—அடி கல்யாணி! இது தெரிவிப்பதற்குத்தானே இத்தனை மோடியும் சாஹஸமும் புரிந்தனை. அடி சுந்தரி! இன்று தினம் ததியாராதனத்தைப் பெரிதும் நிறுத்தினதற்குக்காரணம் திரவிய ஹீனனாய் விட்டதா லென்பது நீ அறியாததல்ல; அப்படியிருக்க நான் என்ன செய்வது யாரைக் கடன்கேட்பது; என்று மிகவும் பரியாலோசித்துப் பின்னர் ஒன்றுந்தோன்றாமல் நிறுத்தி விட்டேனே யல்லாது வேறல்லடி கண்மணி.

குமுதவல்லி:—ஏ நாதா! தாம் சொல்வதெல்லாம் சரியே யாகிலும் "நற்காரியத்திற்கு நாலாயிரம் விக்கினம்" என்பது போல என்ன ஆபத்து வந்தபோதும் அதற்கு மனமிடைந்து பின்வாங்காமல் எடுத்த விரதத்தை இனிது முடிப்பதன்றோ? தம்போன்ற சுத்த வீரர்களுக் கழகாகும். ஆனதால் எங்காகிலும் சென்று எத்தொழிலைச் செய்தேனும் கைங்கர்யத்தை நடத்தி வரவேண்டியது. இல்லாவிட்டால் தமது திருமுகத்தில் நான் ஒரு போதும் விழியேன் தாமும் இனி இங்கு வர வேண்டாம். எங்கேயாவது செல்லும்; அடி சேடி! இப்படி வாடி! இவரைக் கரத்தைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் வெளியில் விட்டு விட்டுக் கதவைத் தாப்பாளிட்டுக்கொண்டு வாடி; செல்லும்! செல்லும்!!

பரகாலர்:—ஜெகதீசா! இப்படி எனது பார்யாளானவள் என்னை அவமதித்துப் பேசியதோடு அவள்

சேடியும், இதோ கரத்தைப் பிடித்துக் கொண்டுவந்து வெளியில் என்னை தள்ளிவிட்டு கபாடபந்தனம் செய்து கொண்டு போய்விட்டாள் ஆகா! இதற்கென்ன செய்கின்றது இனி நாம் நமது மந்திரி முதலானவர்களுடன் சென்று ஆங்காங்கு வழிப்பறி முதலியன வாகிலும் புரிய வேண்டியதுதான். ஆனதால் அவர்களை யழைத்துச் சென்று பொருள் சேகரித்து ததியாராதனத்தை நடத்தா நிற்போம் சென்று வருவோம்.

(இவ்வாறு களவாடி அப்பொருள்கொண்டு கைங்கர்யத்தை சிலகாலம் நடத்தி வந்தனர்.)

# ஐந்தாம் அத்யாயம்.

* திருமணங் கொல்லை யரசுச்சி யேறித் திசையனைத்துங்
கருமணிக் கண்கொடு காண்குறு காற் கலிகன்றி முன்னர்த்
திருமணக் கோலத்துடன் வந்தருளுஞ் சிறப்பினவாம்
மருமணச் சோலை யரங்க நகரப்பன் மாணடியே.

இடம்—அடர்ந்த அரண்யம். காலம்—நள்ளிரவு,

பாத்திரங்கள் { பரகாலர். மந்திரிகள். பரமேஸ்வரன். பரமேஸ்வரி.

பரகாலர் :—அஹோ! நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் முதலிய மந்திரிமார்களே! இப்போது நமக்கோ நாளை நடத்தவேண்டிய கைங்கர்யத்திற்குக் கைவசம் கிஞ்சித்தேனும் பொருளில்லை. பொக்கிஷத்திலிருந்தவையும் அருளாளன் அளித்தவையும் நெடுநாளைக்கு முன்பே தீர்ந்துபோய் சில தினங்களாய் வழிப்பறி முதலியன வற்றால் பொருள்தேடி கைங்கர்யத்தை நடத்தி வந்தோமாயினும் இன்று தினம் இது வரையில் இக்காட்டினிடமாக நாம் வந்து நெடுநேரமாகியும், ஒரு மனிதனுவது இப்பக்கம் வரவேயில்லை. இதுவும் அக்கிருபாகரனின் சோதனைதான். ஆனாலும் நான் இதோ புரவி விட்டிழிந்து சமீபமுள்ள இத்திருமணங் கொல்லை அசுவத்த விருக்ஷத்தி லேறிநின்று இப்பாட்டைவழியாக தூரத்தில் எவரேனும் வருகிறார்களாவென்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்களெல்லோரும் இதர மார்க்கங்களைக் கவனித்து அங்கு வருமவர்களிடம்

* அரங்க நகரப்பன் அடிப்புகழ்ச்சி மாலை.

கிரமமாக விஷயத்தைத் தெரிவித்து ஹிதமாய்க் கேளுங்கள்; அதற்கவர்கள் சம்மதித்து ஆபரணங்களைக் கழற்றி யீவரேல் பெற்றுக்கொண்டு அவர்களை ஹிம்ஸியாது வந்தனம் புரிந்து போகச் சொல்லிவிடுங்கள்; அற்றேல் தாடையில் பளீரென நான்கு அறை அறைந்து யாவற்றையும் பறித்துக்கொள்ளுங்கள்; இது தான் நல்ல தருணம் சீக்கிரம் சென்று வாருங்கள்.

மந்திரிகள் :—ஆகா மன்னர் மன்னே! சென்று வருகிறோம்.

சாக்ஷாத் பரமேஸ்வரன் நமது பரகாலரது ஆதுரத்தைப் பார்த்துச் சகியாதவராய் வழிப்பறி செய்தேனும் அடியார்களை ஆதரிக்கும் நோன்பைக் கைக்கொண்டொழுகுவதால் இவர் தீச்செயலை நற்செயலாகத் திருவுளம் பற்றிக் கடாக்ஷிக்கவேண்டுமென்று கருதி சர்வலோகேஸ்வரியான இலக்ஷ்மி தேவியாருடன் பிராமண வடிவங்கொண்டு விசேஷ வஸ்திரபூஷண ஆபரணலங்கிருதராய் திருமணக் கோலத்துடன் இருவரும் அவ் வனத்தே பாட்டைசாரிகள் போல பரகாலர் பதிவிருக்கும் திருமணங்கொல்லைப்பக்கமாய் வந்துகொண்டிருத்தல்.

பரகாலர்:—ஆகா! இன்றுதான் நமக்கு நல்ல காலம் பிறந்தது நாம் இதுகாறும் எவ்வழியினும் ஒருவரும் வரவில்லையே நாளைக் காரியம் எப்படி முடிவுபெறப் போகின்றது என மிகவும் மனம் வருந்தினவனாய் நில்லா நிற்கையில் ஆ! ஆ!! சபாஷ்! அச்சா! இன்று அடிக்கப்போகும் வழிப்பறியினால் நம்மாயுள் காலமெல்லாம் இவ்வித செயலிற்குப் போகவேண்டாத படியா

யும் நாம் எடுத்துக்கொண்ட கைங்கர்யமானது சிறிதும் முட்டின்றி நன்கு நடை பெருவதற்காக வேண்டிய பொருளை ஒரேசமயத்தில் சேகரித்துக் கொள்வதற்கு போதுமான ஆபரணங்கள் எவ்வளவோ அவ்வளவை யும் பூண்டு கொண்டு யாதொரு குபேரனைவன் தனது பத்னி சகிதம் தனது நவநிதிகளையும் ஆபரணங் களாகச் செய்து தரித்து வந்ததை யொப்ப இதோ நமக்குச் சமீபத்தில் ஓர் அந்தணர் தன் நாயகி சகித ராய் வருகின்றனர். அவர்களைப் பார்த்தால் ஏதோ சமீப காலத்தில்தான் திருமணம் புரிந்து கொண்டவர்கள் போலத் தோன்றுகிறது, இன்னும் அவர்கள் கொண் டிருந்த கல்யாணக்கோலங் களைநதார்களில்லை. ஆயினும் எப்படி யிருநதாலென்ன நமக்குப் பொருள்தானே உத்தேசம். ஆனதால் இதோ ஓடி அவர்களை வழிமறித் துக் கொள்ளுகிறேன். ஓப்! அதோ யாவர் போகாநின் றது? நில்லுங்கள்! நில்லுங்கள்!! மீறிப்போவீர்களா ளுல் எனது கட்கத்திற்கு நீங்கள் இன்று இரையாவது நிச்சயம். ஆகையால் இவ்விடத்தே நின்று நீங்களிரு வரும் தரித்திராநின்ற ஆடையாபரணதிகளில் திருமங் கல்யமும ஓர் சிற்றுடையும் தவிர மற்றவைகளை யெல் லாம் ஒன்று விடாமல் கழற்றி கீழேவைத்து விடுங்கள்; அகோ மந்திரிகாள்! சீக்கிரம் இங்கு ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள!! இதோ இவர்களால் கழற்றி வைக்கும வற்றையெல்லாம் மூட்டைகளாக ஒன்றுவிடாமல் எடுத் துக் கட்டுங்கள்; இந்தப் பிராமணரது பாத விரலில் அணிந்துள்ள மோதிரமொன்று கழற்ற முடியாமல் கஷ் டமாயிருக்கிறது ஆனதால் அதை நான் பற்களால் கடி த்து இதோ எடுத்து விடுகிறேன்.

பரமேஸ்வர பரமேஸ்வரி சம்வாதம்.

பரமேஸ்வரி:—எபிராண கந்தா! தம்முடைய லீலா விநோதங்களை யார் அறிவார்கள்; லோகத்தில் பிரபந்நனும் கிஞ்சித் சத் கைங்கர்ய பரனும் தேசானுகூலனும் சதா ஈஸ்வர த்யானமுள்ளவனும் எவனிருக்கிறானோ அன்னவன் மிகவும் பல விதத்திலும் வருந்தி சாதாரண உண்டி உடைகளுக்கே தெருவில் திண்டாடி நிற்கவும் பொல்லாத பாபமே ரூபமாய்க் கொண்டு பாஷண்டனும், கிருபணனும், தேசத் துரோகம், மாதுர்த் துரோகம், பிதுர்த் துரோகம், சகோதரத் துரோகம் ஆதியன புரிபவனும், ஹரி நாம ஸ்மரணையே யில்லாதவனும் வர்த்திப்பவனுக்கு, சகல சம்பத்தும் அளித்து குபேரனைப்போல் வாழச்செய்கின்றீர் இதன் உண்மையை ஆராயின்

* "விருப்புரினும் தொண்டர்க்கு வேண்டுமித மல்லால்
திருப்பொலிந்த மார்பனருள் செய்யான் — நெருப்பை
விடாதே குழவி விழ வருந்தினாலும்
தடாதே யொழியுமோ தாய்"

என்னும் அடியவர் கூற்றை மெய்ப்பித் தருளுகின்றீர்; ஒருவனுக்கு சகல ஐஸ்வர்யங்களுமிருப்பின் பகவத் பக்தி சிறிதுமிலனாய் செல்வத்தையே மதித்து, காமக் குரோத லோபமோகமத மாச்சர்யாதி விகாரங்களையே பெரிதும் அவலம்பித்து பவக்கடலில் கிடந்து உழல்வானென்று கருதி, நின் திருவடிமாட் டன்புடைய பிரபந்நர்களுக்கு பக்தியாகிற அழியாப் பெருஞ்செல்வம் தினே தினே வளர வளர அதற்கு முற்றும் விரோதி

* ஞானசாரம்.

யாகிற அழிதருஞ் செல்வமாகிய தனதான்ய தாரபுத்தி ராதிகளெல்லாம் தங்காது அறவே யொழியும்படி துடைத்து விடுகின்றீர் ; இதன் உண்மையை அறியாத பாமரர்கள்தான் பிரபந்நர்களை மதியாது தூற்றுவார் கள் ;

*" அலகை முலைசுவைத்தார்க் கன்பரடிக் கன்பர்
திலத மெனத் திரிவார் தம்மை—உலகர்பழி
தூற்றில் துதியாகும் தூற்றாதவ ரிவரைப்
போற்றிலது புன்மையே யாம்"

என்பதை யுணர்ந்து அறிவாளர்கள் அப் பதிதர்கள் தூற்றுவதை ஒரு சிறிதும் மதியாது புறமொதுக்கி வர்த்திப்பர், அது போலவே ஏ கிருபாலயா ! இப் பாகாலனும் நம்மிடமுள்ள கைப்பொருள் யாவும் இழந்தோம் இனி வழிப் பறித்தேனும் சாது ஸம்ரக்ஷ ணஞ் செய்யவேண்டுமென்று தாங்கொண்ட விரதத் தைத்தவறாது நிறைவேற்றிவரும் இவர் திறத்து இன் னும் சோதிப்பது பக்தவத்ஸலனாகிய தமது சௌலப் பியத்திற்கு சிறிதும் அடாது. அல்லாமலும் "தன் னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகு ரைக்குமேல் - என்னடியார் அது செய்யார் செய் தாரேல் நன்று செய்தாரென்பர் போலும்" என்று ஸ்ரீ பட்டர்பிரானுமன்றோ உம்மை பெருங்கருணைத் திரு வாளனென்று பகர்ந்திருக்கின்றார். மேலும் அனைத் துலகும் அனைத்துயிரும் அமைத்தளித்த அன்னையா கும் எனக்கும் மனம் பதருகின்றதே. ஏ! சர்வலோக சரண்யா ! தமியாள் பொருட்டாவது இவரை இரக்ஷித் தருளல் வேண்டும் நாதா.

---

* ஞானசாரம்.

பரமேஸ்வரன் :—பிரியே! * அப்படியே செய் தருளுகின்றேன்.

பரகாலர் :—ஏ பிராமணோத்தமா! நீரும் உமது பத்னியுமாக என்ன இரகசியம் பேசிக்கொண்டு நகை யாடுகின்றீர்கள்; என்ன சாமியிலுஞ்சாமி பெரியசாமி யாக விருக்கின்றீர்; பூனை ஏழையானல் எலி மைத்து னன்முறை கொண்டாடும் என்பதுபோல் நமக்கென்ன பிராமணர்களை ஏன் ஹிம்சிக்கவேண்டும் என்று பார்த் தால் என்ன ஆள் சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை போலும்; ஜாக்கிரதை! உமது பாதத்தில் அணிந்திரு ந்த மோதிரத்தை நான் பற்களால் கடித்து எடுத்த தற்கு என்னைக் கலியனென்றும் கேட்டுவிட்டீர். அது வும் போனாலும் போகட்டும் இப்போது கட்டிவைத்த

---

* இன்றைக்கும் இவ்வைபவங்கள் திருவாலி திருநகரியில் பிரதி சம்வத்ஸரந்தோறும் வரும் பங்குனி உத்திரத்திற்கு இரண்டுதினம் முன்வரும் திருவாலி பிர்மோத்ஸவ எட்டாந் திருநாளன்று வயலாலி மணவாளனும் அமிர்தகட வல்லி நாச்சியாருமாக திருக்கல்யாண மஹோத்ஸவங் கண்டருளி அவ்வலங்காரத்துடன் அபரிமிதமான தீவட்டி மத்தாப்பு பாணவேடிக்கை முதலிய ஆர்ப்பாடத்துடன இரவு 11-மணி க்கு திருநகரிக்கு எழுந்தருளாநிற்க அவண் முன்னரே நம் பரகாலர் அஸ்வாரூடராய் மந்திரி முதலானோர் சகிதம் சென்று திரு வரசினடியில் பதிவிருந்து வருகிற மணமக்களின் திரு வாபரணங்களைப் பறித்தருள இவ்விடம் சிலவார்த்தைப் பாடு கள் ஆனதும் பின்னர் பகவான் கருடாரூடராய், இலக்ஷ்மி சமேதராய் சேவைசாதித் தருளப் பெறும் திருநாள் செவ் வனே நடைபெற்று வருகிறது இவ் வேடுபறி உத்ஸவத் தைப் பார்க்கப் பதினாயிரங்கண்கள்வேண்டும். யாவரும் சென்று சேவிக்கலாம்.

ஆபரணமூட்டைகளை எடுக்கப்போக அவை பர்வதம் போல் இடம்விட்டு சிறிதும் பெயராமல் அசலமாக விருக்கிறது. இதனை யோஜிகதுப்பார்த்தால் நீர் யேதேனும் மந்திரவாதம் செய்துவிட்டீர்போலும் என்று எண்ணுகிறேன் தம்மைப் பார்த்தாலும் மகா மந்திர வாதிபோலத்தான் தோற்றுகிறது சரி இதோ உமது மந்திர பலத்தையும் எனது தந்திரபலத்தையும் இந்தக் கட்கத்தினால் நிறுத்து விடுகின்றேன் இப்படி இருவரும் வாருங்கள்;

பரமேஸ்வரன்:—ஏ கள்வர்தலைவா! கோபம் கொள்ளாதீர்; என்னை நீர் மிகவும் நலியச் செய்தமையால் உம்மைக் கலியன் என்றேன், நீர் சொன்னபடி ஸர்வ மந்திரங்களுக்கெல்லாம பிரதி பாத்தியன் யானே இப்போது ஓர் மந்திரத்தைப் பிரயோகம் செய்துதான் நீங்கள் கட்டிவைத்த அச சுமைகளை அசையாமற் செய்தோம். ஆனதால் நீர் இப்போது எங்களை வீணில் கோறல் புரியவேண்டாம், இதோ அம்மஹா மந்திரத்தை உமக்குச் சொல்லிக் கொடுத்து விடுகிறேன், சமீபத்தில் வந்து செவிசாய்த்துக் கேளும், இரகசியமாய் உபதேசிக்கிறேன், அதனால் நீர் வேண்டிய பல நன்மைகளையெல்லாம் அடையலாம்.

என்று சாக்ஷாத் ஸ்ரீ பரமேஸ்வரன் பரகாலர் திருச்செவியில் சதுர்வேத சாரமாய் பிறவித் துயராறுத்திறைவர் பதமீவதாய்ச் சிறந்தொளிரும் அஷ்டாக்ஷர மகாமந்திரத்தை உபதேசித்தருளிக் கருடாரூடராய் லெக்ஷ்மி தேவியாருடன் சேவை சாதித்தருளி மறைந்தனர்.

பரகாலர்:—ஆகா மோசம் போனேனே! மந்திரமுபதேசித்த அந்தணரையும் மணமகளாய் வந்த திருமகளாரையும் காணேனே! தக்ஷணமே கருடாரூடனாய் லக்ஷ்மி சமேதனாய் ஸ்ரீ பரந்தாமன் சேவை சாதித்தருளி மறையக்கண்டேனே இப்படியாக அடியேற்குக் கிடைத்த திவ்ய மங்கள ஸ்வரூப சேவையினாலும் திருமந்திரோபதேசத்தாலும் ஜகதீசனது திருவடியில் தரித்திருந்த மோதிர நகையால் வாய்வைத்து திருமேனியை ஸ்பரிசித்த விசேஷத்தாலும் எனது அஞ்ஞானாந்தகாரம் நீங்கி பிரபத்தியாகிற மெஞ்ஞானச் சுடர் உதிக்கப்பெற்று அநுபவித்த சுகானந்த மேலீட்டால் பகவானின் அனந்த கல்யாண குணகண சேஷ்டிதங்களை நினைந்துருகி பாக்கள் பாடவல்ல பாண்டித்யனானேனே ஏ பிரணவஸ்வரூபா!

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தருங் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னு நாமம்."

என்று பாடத்தொடங்கி பகவான் உகந்தருளிய நிலங்களுக் கெல்லைநிலமான இமவான் நிலத்தில் திருப்பிரிதி ஸ்ரீ பதரிகாசிரமம் ஸ்ரீ சாளக்கிராமம் முதலிய திவ்ய தேசங்களைச் சேவிக்கத் திருவுளங்கொண்டு ஸ்ரீ குமுதவல்லியார் சகிதம் பரிஜனங்களுடன் திவ்ய தேச யாத்திரைக்கு எழுந்தருளி ஆங்காங்குச் சேவிக்கப் பதிகங்கள் பாடிக்கொண்டு

* "வீங்கு நீரருவி வேங்கடமென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்கு விற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல
பகையணங் காழியும் பால் வெண் சங்கமும்
தகை பெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிளராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோன் நின்றவண்ணமும்"

கண்டு வணங்கி வடநாடு தொண்டநாடு நடுநாடுகளி லுள்ள திருப்பதிகளையும் சேவித்துப் பதிகங்கள் பாடிக் கொண்டு பாலாற்றங் கரையில் மிகுந்த பசியோடு நம் மங்கையர்கோமான் பரிஜனங்களுடன் வருகையில் கடி காசலம் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியானவர் ஓர் விருத்த வை ணவராய் ஒரு கரத்தில் கட்டமுதும் மற்றொரு கரத் தில் பஞ்சாங்கச் சுவடியுங்கொண்டு பரகாலர் முன்பு தோன்றியருளக் கண்டு நம் ஆலிநாடரும் பணிந்து, பெரியீர்! தமது வரவு நல்வரவாகுக! தமது கரத்தில் தரித்திருப்பது யாது? பஞ்சாங்கச் சுவடியோ வென்ன, அம்முதியவர் ஆமென்ன, ஆனால் தயைகூர்ந்து எனது கிரகநிலையைச்சிறிது ஆராய்ந்து பார்த்தருளல் வேண்டு மென்ன, ஆகா அப்படியே சொல்லுகிறேனென்று அப் பெரியாரும் பதினொரு இந்திரியங்களுக்கும் இருப்பிட மாகிய சரீரத்தில் நவக்கிரக ரூபமாக ஸ்ரீ பரவாசுதேவன் உறைந்தருளுவன், அல்லாமலும் பக்தசிரோன்மணியா கிய உம்முடைய இருதயத்தில் சதா அந்தப் பகவான்

* சிலப்பதிகாரம்.

வசிப்பதால் இப்போது தமக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தில் இருக்கின்றன என்று மொழிந்தருளி, ஓய் அடியவரே! இவ்வாற்றங் கரையினிடமாக இதோ நான் கொண்டுவந்துள்ள கட்டமுதை உண்ணப்போகின்றேன், நான் தனியனாயுண்பது என்றும் வழக்கமில்லை. ஆனதால் நீரும் உமது பரிஜனங்களுடன் வந்து எனது வார்த்தையைத் தட்டாது கூட உட்காருங்கள், சிறிது அமுது உண்டு போகலாம் என்று ஆழ்வாருடன் அனைவரையும் இருக்கவைத்து நெல்லிக்காய்முதலிய ஊறுகாயுடன் ஆடைத்தயிரோடு கூடிய கட்டன்னத்தை யெடுத்து முற்காலத்தில் தேவர்களுக்கு அமுதம் பகிர்ந்தருளியது போல யாவருக்கும் பங்கிட்டருளி புண்ணச்செய்து தானும் உண்டருளினர்; பின்னர் பரகாலர் அடிகேள்! தமது ஊரும் பேரும் சொல்லியருள்வீரென்ன, அவ்வயோதிகரும் தனது பெயர் யோக நரசிம்மன் என்றும் ஊர் கடிகாசலமென்றுந் தெரிவித் தருளி உடனே மறைந்தனர். ஆழ்வாரும் திடுக்கிட்டு ஆகா முன்பே யறியாமற் போனோமே யென்று மந்திரி முதலானோரிடம் "பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலின்" ஆச்சர்யகுண சேஷ்டிதங்களைப் பற்றி பெரிதும் புகழ்ந்து உருகாநின்றவராய் அவணின்று மிழிந்து சித்திரகூடத்தை யடைந்து ஆங்கெழுந்தருளி யுள்ள கோவிந்தராஜனைச் சேவித்துப் பின்னர் சீர்காழிக்கெழுந்தருளினர்.

## ஆறாவது அத்யாயம்

*"வையமீதில் வாழ்வை நம்பிமையல் கொள்ளு மாந்தர்காள்
வெய்ய கால னுலிகொள்ள மேதிமேல்வரா முனம்
மெய்ய ரோது மேலை வெற்பர் வீறுரைக்கி லீவர் பொற்
செய்ய பாத மலரினீழல் செவி புகாமு னேலமே.

இடம்—சீர்காழி. காலம்—அருணோதயம்.

பாத்திரங்கள்—பரகாலர். திருஞானசம்பந்தர்.

மந்திரி:—ஏ கட்டியங்காரா! நமது மங்கையர் கோமான் இதுபோது ஏதோ சிந்தாக் கிராந்தராய் முத்துச்சிவிகையின் மீதே யிருந்துகொண்டு பல பக்கமும் பல்லக்கைக் கொண்டுபோகச் சொல்லுகின்றார். ஆனதால் போயிகளும் மிகவும் பயந்தவர்களாய்ச் செல்லுகின்றனர். அதற்குக் காரணம் இங்ஙனம் இருக்கவேண்டிய தாடாளப் பெருமானின் ஆலயத்தைக் காணாமல் திகைக்கின்றாரென்று தோன்றுகிறது. ஆனதால் நீ எப்போதும் போல் அஜாக்கிரதையா யிராமல் ஜனத்திரள் விலகிப்போகும்படி எச்சரிக்கை கூறிக் கொண்டு போகக்கடவாய்.

கட்டியன்:—பிரபு அப்படியே செய்கின்றேன். நாலுகவிப்பெருமான் வந்தார்! நங்கலியர் வந்தார்! ஆலிநாடர் வந்தார்! அருண்மாரி வந்தார்! அடையார் சீயம் வந்தார்! அரட்டமுக்கி வந்தார்! மானவேற் பரகாலர் வந்தார்! மங்கையர்கோமான் வந்தார்! பாவாதி

* திருநாராயணபுரக்கலம்பகம்.

மத்தகஜ கண்டீரவர் வந்தார்! நீலநிறத்து நிமலர்வந்தார்! எச்சரிக்கை! எச்சரிக்கை!!

இவ்வாறு கட்டியர் கட்டியங் கூறிவர முத்துச் சிவிகையில் பரகாலப்பிரான் எழுந்தருளி சீர்காழி சம்பந்தமூர்த்திகள் மடத்திற்கு அருகிற செல்லாநிற்க அதுகண்டு அம்மடாலயத்திலுள்ள சீடர்களிற் சிலர் ஓடிவந்து எங்கள் திருஞானசம்பந்தப் பெருமானுள்ள விடத்திலே நீவிர் விருது ஊதிக் கொண்டு செல்லுதல் கூடாது என்று தடுக்க அது தெரிந்து பரகால ஸ்வாமிகளும் அவர்களை கையமர்த்தி உங்கள் சமயாசாரியரிடத்திற்கு நாமே வருகின்றோம் வாருங்கள் என்று இவரே சென்று இருவரும் ஒருவரை யொருவர் அளவளாவிக்கொண்டு சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

சம்பந்தர் :—பெரியீரே! தமது திருவோலக்கத்தின்கண் கட்டியர்களால் கூறப்படும் விருதுகளில் மற்றவையாவும் உரியவையாயினும் நாலுகவிப் பெருமான் வந்தார் என்பது, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய இவை நான்குந் தோன்றக் கவி பாடவல்லார்க்கே ஏற்கும். அவையோ மிக்க அருமையினும் அருமையாகும், அப்படித் தாம் பாடவல்லீராயின் யாங்கள் காணுமாறு சில பாடல்கள் பாடியருள்வீர்?

பரகாலர் :—ஐயன்மீர்! தாம் விரும்பிய படியே இதோ பாடா நிற்போம் ஆனால் நாம் நாரணன்முன் பாடுவதே தவிர நரர்முன் பாடுவதில்லை ஆகையால் பூர்வமே இவ்விடத்திலுள்ள 1008 திருப்பதிகளில்

ஒன்றாகிய * காழிச்சீராம விண்ணகரமானது சிலகாலத்திற்கு முன்பு ஒரு சோழராஜனால் ஆலயமுற்றிலுந் தக

* காழிச்சீராமவிண்ணகரம் சித்திரகூடம் திருவாரூர் திருவண்ணாமலை முதலிய அநேக விஷ்ணுவாலயங்களை யெல்லாம் இடித்து இலிங்கப்பிரதிஷ்டை செய்துகொண்டு வந்த கிருமிகண்ட சோழனெனவன் திருக்கண்ணபுரஞ் சென்று அவ்வாலயத்தின் ஏழு திருமதில்களில் ஆறு மதில்களை இடித்துக்கொண்டுபோய் திருமறுகல் திருப்புகலூர் முதலிய சிவாலயங்களை கட்டுவித்து பின்னர் உள்ள ஒரு மதிளினையும் இடிக்கப் புகுவதறிந்த திருக்கண்ணபுரம் அரையர் என்னும் அக்காலத்துள மகான் ஒருவர் மனம் நொந்தவராய் அந்தோ! கலியின் கொடுமையால் ஆறு மதில்களையும் இடித்துப் போனதுமன்றி மீதமாயுள்ள ஒருமதிளினையும் இப்போது இடித்துக்கொண்டு போகப் போகிறானே என்று ஸ்ரீ சௌரிராஜப்பெருமான் திருமுன்பே திராவிடவேத சேவாகால சமயத்தில் இதனை நினைந்து மனம் பொராதவராய் ஏ பரமதயாநிதே! மகா பாபிஷ்டனாய் தனது கண்டத்தில் கண்டமாலையுண்டாகி கிருமிகள் புழுத்து நெளிவதை பிறர்கண்டறுவருப்பதற்கு வெட்கித் திருநீற்றுப் பையை மாலைபோல் தரித்துக்கொண்டதனால் திருநீற்றுச் சோழனென்று பெயர் கூறிக்கொண்டு போதரும் பகவத் த்வேஷியான இவ்வரசன் நினது திருக்கோவிலின் ஆறுமதில்களை முன்னர் இடித்துக்கொண்டு போனது மன்றி நின்ற ஒருமதிலையும் இதோ இடிக்கப் போகின்றானே உனக்கென்ன கண் தெரியவில்லையோவென்று குபிதராகி தனது கரத்திலேயிருந்த தாளத்தினால் ஸ்ரீ சௌரிராஜனின் திருமுகத்தில் ஓங்கி அடித்திட அவ்வடிபட்டமாத்திரத்தில் கருணாநிதியின் அஸ்தத்தொளிரும் நேமி (பகவான் ஒரு கார்யத்தை செய்யென்று நியமிப்பதற்கு முன்னறிந்து அக்காரியத்தை புரிதந்து நிற்றலால் சக்கரத்திற்கு நேமியென்று பெயர் வந்தது) யானது உடனே சென்று அச்சண்டாளனின் கண்டத்தை கண்டங்கண்டு கடல்மூழ்கி நஞ்

ர்ப்புண்டுபோக ஆங்கண் எழுந்தருளியுள்ள தாடாளப் பெருமானை அக்காலத்தில் மிகுந்த பக்திமானாயிருந்த ஓர் வேளாளனால் எடுத்துக்கொண்டுபோய் தனது கிரகத்தில் பூஜாவிக்கிரகமாக வைத்துக்கொண்டு பூஜிக்கப் பெற்று வந்து இப்போது அவ்வம்ஸத்தளான ஓர் விருத்தையின் இல்லத்திலுள்ள அடுக்குப்பானைக்குள் அவ்வர்ச்சா விக்கிரகம் இராநின்றது; ஆனதால் அதனை தருவித்துக்கொடுப்பீரானால் உமது ஐயமொழிய பாடா நிற்போம், அதுவும் தேவதார்ப்பணமாக விருக்கும். அதற்காகத் தாம் அதிக சிரமம் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை; அன்னவள் தமது மடத்திலேயே பணிவிடை புரிபவளாயும் தம்மிட மிகுந்த அன்புள்ளவளாயும் இருக்கும் ஔவை யென்பவளிடத்தில் தானிருக்கிறது ஆனதால் உடனே வரவழைத்தல் கூடும்.

சம்பந்தர்:—மங்கைவேந்தே! யாங்கள் இத்தலத்திலேயே சதா வாசமாயிருந்தும் ஒரு நாளும் கேட்டறியாத இவ்விசேஷங்களையெல்லாம் தாம் ஞான திருஷ்டியாலுணர்ந்து தெரிவித்தருளினீர், ஆகா தமது வல்லபமே வல்லபம் மாதவமே மாதவம் பெரியீர்! அப்படியாயின் இதோ துறையாய்க் கொண்டுவரச் செய்கின்றேன். ஓய் கார்பார்தம்பிரானே! நமது ஔவைப்பிராட்டியின் கிரகத்திற்குச் சென்று அவ்வம்மை பிதிரார்ஜித பூஜா

---

சர்வ சுவாமியின் திருக்கரத்தே வந்துநின்றது. இவ்வுண்மைக்கறிகுறியாய் இன்றும் திருக்கண்ணபுரத்தில் ஆறுமதிள்களின் அஸ்திபாரங்களும் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானின் திருமுகத்தில் தாளத்தா லடிபட்ட தழும்பும் இத் திவ்யதேசத் தெம்பெருமான் திருக்கரத்தேமட்டும் பிரயோகச் சக்கரமு மிருப்பதை நன்கு காணலாம்.

விக்கிரகமாய் வைத்திருக்கும் தாடாளப் பெருமானை நாம் வாங்கி வரும்படி ஆக்ஞாபித்ததாகத் தெரிவித்து உடனே வாங்கிவருவீராக.

கார்பார்:—அப்படியே இதோ ஓடி வாங்கி வருகி கிறேன் (ஔவையார்வீட்டிற்குப்போய்) ஏ பாட்டியாகிய ஔவைப்பிராட்டியாரே! நமது சம்பந்த மூர்த்தி சுவாமிகள் நீர் அதிபத்திரமாய் வைத்து பூஜித்துவரும் தாடாளப்பெருமானை வாங்கிவரும்படியாக என்னையனுப்பி யிருப்பதால் தடைகூறாது தருவீராக.

ஔவை:—ஐயா கார்பார் அவர்களே! "வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும் - இடவகைகள் இகழ்ந்திட்டென்பால் கோயில்கொண்ட கோவலனைக் கொழுங்குளிர் முகில்வண்ணனை ஆயரேற்றை யமரர் கோவை அந்தணர்தம் அமுதத்தினை" எவ்வாறு தம்மிடத்தீவேன், ஆயினும் குருவாக்கிற் கெதிர்வாக்குக் கூடாதாகையா லிதோ நானே எடுத்துத்தருகின்றேன், மிகவும் பய பக்தியுடன் பெற்றுக்கொண்டுபோய்க் கொடுங்கள்.

(அப்படியே கார்பார் தம்பிரான் விஸ்வாசத்துடன் பெற்றுக்கொண்டுபோய் சம்பந்தரிடத் தீதல்.)

சம்பந்தர்:—ஏ ஆலிநாட்டரசே! தாம் தெரிவித்தருளிய அர்ச்சாவிக்கிரகமூர்த்தி இவர் தானோ? எனது கார்பார் தம்பிரானை யனுப்பி வாங்கிவரச் செய்தேன், நோக்கியருள்வீர், இதோ நவரத்னமிழைத்த சுவர்ண பீடத்தில் எழுந்தருளச் செய்திருக்கின்றேன்.

பரகாலர்:—ஆர்வலீர்! ஆகா "இவர்தா னயற்கு மாற்கு மற்ற விமையோர் தமக்கும் இறைவர் கண்டீர்" அல்லாமலும் யாம் காணாது வருந்திய மூர்த்தியான

தால் தாம் வேண்டிக்கொண்டபடி "எம்பிராற் கென்னுடைச் சொற்களென்னும் தூயமா மாலைகொண்டு சூட்டுவன்" காண்பீராக.

* "ஒரு குறளாய் இருநிலம் மூவடிமண் வேண்டி
யுலகனைத்து மீரடியால் ஒடுக்கியொன்றா
தருகவென்ற மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வி யைந்தும்
அங்கங்க ளவையாறும் இசை களேழும்
தெருவில் மலி விழாவளமுஞ் சிறக்குங் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே."

என்று தொடங்கிப் பாடாநிற்க, அது கண்டு ஞான சம்பந்தரும் மிக அதிசயித்து, ஏ ஆலிநாட! நமது கவித்திற மறியாது வினவிய தமியேனைக் கோபியாது கடைக்கணித்தருள்வீராக. நாலுகவிப்பெருமான் என்னும் திருநாம மீடுமெடுப்பு மில்லாத் தமக்கே பல்லாயிரம் விதத்தில் தகும்! தகும்!! என்று சொல்லிச் சம்பந்தரும் தமது வேலாயுதத்தை இப்பரகாலர்முன் திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்து நிற்க, அதுகண்டு பரகாலரும்

செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகரச் செங்கண்மாலை
அங்கமலத் தடவயல் சூழ் ஆலிநாடன்
அருள்மாரி யரட்டமுக்கி யடையார் சீயம்
கொங்குமலிக் குழலியர் வேள் மங்கை வேந்தன்
கொற்றவேற்பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங் கடல் சூழ் உலகிற்குத் தலைவர்தாமே.

---

* தனிப்பாடற்றிரட்டு.

என வெற்றிவேல் பெற்றுக்கொண்ட கொற்றமானது முற்றுந்தோன்ற பாயிரத்தோடு பதிகம் பாடியருள, ஞானசம்பந்தரும் பெரிதும் ஆனந்த சாகரத் தழுந்தினவராய் மங்கை நாடனை நன்குமதித்து பலவாறு உபசரித்து வணங்கி வழிபட்டு தமதுபட்டத்தானையின் மீதி லாரோகணித்து ஊர்கோலம் கண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ள அப்படியே பரகாலரும் குமுதவல்லிநாச்சியார் சகிதம் கஜாரூடராய் பவனி வாரநிற்க, அவ்வைபவத்தை சம்பந்தமூர்த்திகள் கண்டு பரமானந்த மெய்தினவராய்

*"கடியுண்ட நெடுவாளைக் கராவிற் றப்பி
கயத்துக்குள் அடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்டு வளர் தெங்கின் பழத்தார் பூகம்
அலையுண்டு குலைசிதறும் ஆலிநாடா
படியுண்ட பெருமாளைப் பரிந்துபாடி
பரிசுபெற்ற பெருமானே அடியேன் பெற்ற
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டாள் உயிரொன்றுங் கொடுவந்தாளே"

என்று பாடிநிற்க, அது கண்டு பரகாலப் பெருமானும் தமதன்பு தோன்ற

†"வருக்கை நறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
வழிக்கரையின் குழிக்கரையின் மதகிலோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங்காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேண்மோ
அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கினோ மென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையுமோர் பெண்ணாக்க லியல்புதானே"

* † தனிப்பாடற்றிரட்டு.

‡ இவ்விபரங்களைப் புலவர் புராணத்தில் பரக்கக்காணலாம்.

என்று பாடியருளினார். அதனைச் சம்பந்தர் முதலானார் சிரவணம் புரிந்து, அத்யந்த அன்பினராய் தங்கள் திருமடத்தே சிலநாள் விஜயம் செய்திருந்து போம்படி வேண்டாநிற்க, அப்படியே பரகாலரும் எழுந்தருளியிருக்கும்போது ‡ இவ் வைபவங்களையெல்லாம் நேரில்கண்டானந்திக்கப் பெற்ற அவ்வூராரிற் பலர் இவர் திருவடியிற் சரண்புகுந்து தங்களை ஆட்கொண்டருளும்படி வேண்டித் தோத்தரிக்க, நம் அருள்மாரியாரும் சம்மதமீய்ந்து, அப்படியானால் உங்கள்பெரியோரரியோர்களிற் சிலர் சிறிது காலத்திற்குமுன் இவண் நடந்த சோழன் கலாபத்தின்போது தாடாளப்பெருமாளின் திருவாபரணங்களை யெல்லாம் களவு செய்துக் கொண்டுபோய் காட்டிற் புதைத்து வைத்திருக்கின்றனர், அவற்றைக் கொணர்ந்துகொடுப்பின் உங்களெண்ணத்தைப் பூர்த்திசெய்கிறோமென்ன, அவர்கள் திகைப்புற்று நாங்களொன்று மறியோமென்று நிற்க, நமது கொற்றவேற் பரகாலரும், சரி அப்படியா? இதோ நாம் அவற்றை வெளியாக்கு கின்றோம் பாருங்கள், என்று அங்கு வந்து கூடியிருந்தவர்களில் சிலரைக் குறிப்பிட்டு அழைத்து, அவர்கள் பெயரையும் சமீபமுள்ள காட்டில் சில இடங்களின்பெயரையும் கேட்டு, பனையேடுகளில் தனித்தனியே வரைந்து, அவற்றை எல்லாம் இதோ பாருங்கள் உங்கள் முன்பாக இத்தீயி லிடுகிறோம், இவற்றில் எந்த ஏடுகள் எறிந்துபோகாமலிருக்கின்றதோ, அந்த ஏடுகளிலுள்ள பெயர் உள்ளவர்களே ஆபரணாதிகளை அபகரித்தவர்க ளாவார்கள், தீயாத ஏட்டிலுள்ளவிடங்களே அவைகள் இருக்குமிடமாகும் என்று சொல்ல அவர்கள் தலையசைத்த

பின் அவ்வண்ணம் புரிதரவே சில ஏடுகள் தீய்ந்து போயும் சில தீயாமனு மிருக்க அவைகளை அவர்களை யே யெடுத்து வாசித் தறியச்செய்து அங்கு சென்று புதைக்கப்பெற்றிருந்த ஆபரணங்களையும் அளவற்ற திர வியங்களையும் அவர்களையே யெடுத்துவரச்செய்து தகர் ந்து போய்க்கிடந்த தாடாளப் பெருமாள் ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் புரிந்து எம்பெருமானையும் ஆங் கெழுந்தருளப் பண்ணி சம்ப்ரோக்ஷண மாதிய யாவும் கிரமேண நன்கு நடத்தி தமது திருவடியி லாஸ்ரயிக்க விரும்பிய பலரையும் கடாக்ஷித்து வைஷ்ணவராக்கி ஆட் கொண்டருளி அவர்களுக்கு திருமந்திர ப்ரபாவத்தை உபதேசித்தருளத் திருவுளம்பற்றி * வாச்சிய ப்ரபா வம் போலன்று வாசகப் பிரபாவம் அவன் தூரஸ்தனு னாலும் இது கிட்டி நின்றுதவும் த்ரௌபதிக்கு ஆபத் திலே புடவை சுரந்தது திருநாமமிறே சொல்லுங் கிரம மொழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபங்கெடநில்லாது. இதுதான் (குலந்தரும்) என்கிறபடியே எல்லா வபே க்ஷிதங்களையுங் கொடுக்கும் ஐச்வர்ய கைவல்ய பகவல் லாபங்களை ஆசைபட்டவர்களுக்கு அவற்றைக்கொடுக் கும் கர்மக் ஞானபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதத்தைப் போக்கி அவற்றைத் தலைக்கட்டிக்கொடு க்கும் பிரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞா னத்தைப் பிறப்பித்து காலக்ஷேபத்துக்கும் போகத் துக்கும் ஹேதுவாயிருக்கும்" என்று சிற்சில இரகசி யங்களை உபதேசித்து அவர்களை உஜ்ஜீவிக்கச்செய்து பின்னர் சம்பந்தர் முதலானோரிடத்து விடைகொண்டு

* முமுக்ஷுப்படி.

† திருவழுந்தூர் என்னு மிப்பதியில் உபரிசரவசுவின் தேரழுந்தியதால் தேரழுந்தூர் எனப்பெயராகியது.

அப்பாற்சென்று † தேரழுந்தூரையடைந்து பூர்வம் தான் உபரிசரவசு வென்னும் பூபதியா யிருந்தபோது இரதாரூடராய் தேசாடனம் செய்துவருங் காலத்தில் அழுந்தூரில் ஆமருவியப்பன் சந்நதியிருப்பதறியாது இரதத்தை விட்டுக்கொண்டுபோனதால் சந்நிதி சமீபம் வந்ததும் தேர் பாதலத் தழுந்திவிட அது கண்டு இவர் மிகவும் பயந்து சுவாமியைத்தோத்தரித்து விமோசனம் அடைந்த விடமாகையால் அந்தப் பூர்வக்ஞானம் நமது பரகால மூர்த்திகளுக்கு தோன்றாநிற்க இருவரும் திருக்கோயிலினருகே செல்லாது தூரத்தே நின்று "செல்லிற்குவளைக் கண்காட்ட நீரிற்குமுதம் வாய் காட்ட - அல்லிக்கமலமுகங்காட்டும் கழனியழுந்தூர் நின்றானை -- வல்லிப்பொதும்பில் குயில்கூவும் மங்கை வேந்தன் பரகாலன் -- சொல்லிற் பொலிந்த தமிழ் மாலை" பலதும் பாடி மங்களாசாசனம் புரிந்தபின்னர் திருவிந்தளூரையடைய அப்பதியமர்ந்தருளிய சுகந்த வன நாதன் இவ்வாழ்வாருக்குத் தன்னையொருக்காற் காட்டி மறைய இவரும் திருப்தியடையாமல் மனக் குறையோடு "வாசிவல்லீர் இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே" என்று தமது குறைபாடுதோன்றப் பாடியருள பெருமாளும் திருவுள மிரங்கி நிரந்தர சேவை சாதித்தருள அது பெற்று நிரம்பிய மனத்தராகி தமது மங்கை நாட்டையடைந்து திருவாலி திருநகரிக்குப் போந்தருளி * அவணுள துவாதச

* இத்துவாதசதிருப்பதிகளின் வைபவமானது இன்றைக்கும் பிரதி சம்வத்ஸரந்தோறும் வாராநின்ற தைமாதத்திய அமாவாசையன்று திருநகரியினின்றும் ஸ்ரீ பரகாலர் திருப்பல்லக்கில் எழுந்தருளி திருக்குறையலூர் சென்று (வாடி

திருப்பதிகளையும் சேவித்து பதிகம் பாடிக்கொண்டு பல திருப்பதிகளின் வழியாக திருவரங்கத்தைச் சேர்ந்து நம்பெருமாள் பக்கலிலே மிகுதியும் ப்ராவண்யராய் ஈடுபட்டு பதிகங்கள் பல பாடிநிற்க அதுகண்டு ஸ்ரீ ரெங்கநாதன் திருவுளமுவந்து முகமலர்ச்சியோடு ஆழ்வாரைக் குளிரக் கடாக்ஷித்து "ஆழ்வீர்! நீர் நமக்கு

---

னேன் வாடி) என்ற பாசுரத்தை அங்கு நின்று சேவித்துப் பஞ்ச நரசிம்மமூர்த்திகளையும் தியானித்துப் பால் அம்ஸை கண்டருளி பின்பு மங்கைமடம் அணுகி (அங்கண்ஞாலம்) என்றெடுத்து சிங்கவேள் குன்ற முதலிய வடநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் புரிந்து விட்டு திருக்காவளம் பாடி திருமணிக்கூடம் திருப்பார்த்தன்பள்ளி இவைகட்கு முறையேசென்று அந்தந்தத் தலங்களைச்சேவித்துப் பாடிக்கொண்டு மணிகர்ணிகை என்னும் திருக்காவிரியின்கிளை நதியில் மஞ்சக்குளிமண்டபம் (இதற்கு மஞ்சனக்குளிமண்டபம் என்று பெயர். இதன் விபரம் "ஒருக்கால் கோயிலிலே நம்பெருமாள் மஞ்சனக்குளி உத்ஸவம் பண்ணிவைத்துக் கொண்டு வாருங்கோள்" என்று திருவுளமாக அந்தப்படியே நடத்தப்பெற்று அதுமுதலாக பிரதிஸம்வத்ஸரமும் அந்த உத்ஸவம் திருமங்கைமன்னனுக்கே நடந்துவருகிறது. இவைகளை கோயிலொழுகுஎன்னும் கிரந்தத்தில் விஸ்தரே ணக்காணலாம்.) அடைந்து திருமஞ்சனங் கண்டருளி திருவரங்கேசனை (துலங்குநீண்முடி) என்ற பாசுரங்களினாலும் அங்கிருந்தே திருநறையூர் நம்பிகளையும் (குலையார்ந்த) என்ற பாசுரங்களினாலும் மங்களாசாசனம் புரிந்துகொண்டு திருநாங்கூருக்கு எழுந்தருளி அங்குள்ள மணிமாடக்கோயில் வண்புருடோத்தமம் அரிமேயவிண்ணகரம், வைகுந்தவிண்ணகரம், செம்பொன்செய்கோயில், திருத்தெற்றியம்பலம் இவ்வாறு திருப்பதிகளையும் பாடிக்கொண்டு மீண்டும் மணிமாடக் கோயிலில் எழுந்தருளியிருந்து தோத்தரித்தவளவில் அப்பதினொருதிருப்பதி எம்பெருமான்களும் ஆங்கண் எழுந்தருளி

விமானம், மண்டபம், கோபுரம், பிரகாரம், முதலிய கைங்கர்யங்களைச் செய்துகொண்டு இங்ஙனேயே இரும்" என்று கட்டளையிட இவரும் அவ்வாறே விடைகொண்டு சில வாண்டுகள் ஆங்கண் எழுந்தருளியிருந்தார்.

---

கருடாரூடர்களாய் அவ் வாவ்வாருக்கு காக்ஷி யளித்தருளப் பெற்றுபின்னர் பரகாலர் மறுநாள் திருவெள்ளக்குளம், திருத்தேவனார்த் தொகைகளை சேவித்து மங்களாசாசனம் செய்துகொண்டு திருவாலியையடைய அங்கு வயலாலி மணாளனும் கருடாரூடராய் எழுந்தருளிச் சேவைசாதிக்கப்பெற்று நம்திருமங்கைமன்னன் திருநகரியை யடைகிறார். இவ்வித துவாதசகருடசேவை மகோத்ஸவப் பிரபாவத்தை வரையறுத்துக் கூறுதல் சாத்தியமாகாமைபற்றி இங்கு சங்கிரகமாய் எழுதப்பட்டது ஆனதால் இதனைநேரில் சென்று சேவித்து பிர்மானந்தத்தை யடைவீர்களாக.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

## ஏழாவது அத்தியாயம்

*அரங்கமாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமாமுகிலை வாலி காலனை
இந்தளூருறை யெந்தை பெம்மானை
ஈசன்நான்முகன் வாசவன்றலைவனை
உள்ளுவா ருள்ளத் துள்ளுறை சோதியை
ஊரகம் நின்றருள் நீரகத் தடிகளை
எவ்வுண் மாயனைத் தெய்வ நாயகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலையாதியை
ஐவா யரவி லறிதுயி லமலனை
ஒருகான் மொழியினும் ஒழிகுவை நெஞ்சே
ஓத நீர் ஞாலத் துழலும்
ஔவிய பிறப்பில் அழுந்தி வாடுவதே.

இடம்—திருவரங்கம். காலம்—வைகறை.

பாத்திரங்கள் { பரகாலர், மந்திரிகள், சீனநாட்டினர்கள்.

பரகாலர்:—மந்திரிவர்ய! மின்னிலங்கு திருவுருவும் பெரியதோளுமார்ந்த என்னரங்கத்தின்னமுதன் தமியேற்கு ஆக்ஞாபித்தருளியவாறு † இன்றே செய்யவும் வேண்டும் - இன்று இன்னே செய்யவும் வேண்டும் - இன்னும் நாளை நாளை யென்பீராகில் - நம்முடைமுறை நாளாவது மறியீர் - நமனுடைமுறை நாளாவது மறியீர்!, ஆனதால் நாம் திருவரங்கம் பெரியகோயிலின் விமானம் மண்டபம், திருமதில் முதலியவற்றை ஜீர்ணோத்தாரணம் புரிதாவேண்டியதால் அதற்கான

* திருவரங்கக் கலம்பகம். † கபிலரகவல்.

திரவியசேகரத்திற்கு ஓர் மார்க்கத்தை நன்றாய் ஆராய்ந்து சீக்கிரம் தெரிவிப்பீர்.

முதன்மந்திரி :—மகாராஜ் ! தாங்களிப்போது ஏற்றுள்ள திருப்பணியோ சாமான்யமானதன்று; விசேஷமான பொருளிருந்தாலொழிய நன்கு நடைபெறுதல் துர்லபமாகும், ஆகையால் எனக்கு ஓர் யுக்தி தோன்றுகின்றது அது யாதெனில் நாகபட்டினத்தில் உள்ள பௌத்தாலயத்தில் ஓர் பாரிய சுவர்ண விக்ரஹம் இரா நின்றது நாம் அதனை எப்படியேனும் கொணரா நிற்பின் நாம் கைக்கொண்ட திருப்பணியானது சிறிதும் பொருட் குறைபாடிலாது இனிது நிறைவேறும் என்று நினைக்கிறேன் மன்னர்பிரானே ! பின்னர் தமது திருவுளப்படி யாகுக.

பரகாலர் :—பேஷ் ! பேஷ் ! பிரதமாத்ய ! தமது புத்திசாதுரியத்தை என்னென்று கூறுவேன். * "தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒரு தலையாய்ச் சொல்லலும் வல்லதமைச்சு" என்னுமாறு அமைச்சர்களிலக்கண முற்று மொறுங்கே யமையப்பெற்ற தம் போல்வார் எனக்கு மந்திரிகளாய் அமர்ந்திருக்கும் போது என்ன கார்யந்தான் ஸித்தியாகாது ? சரி ! தாம் தெரிவித்தபடி துறையாய் அக்காரியத்தை முடித்துவிடல் வேண்டுமெனதால் இன்றே நாகபட்டினத்திற்கு செல்லுவோம் வாரும் இதரமந்திரிகளும் வருவீர்களாக.

(பரகாலரும் மந்திரிகளும் அன்றிரவே நாக
பட்டணம் போய்ச்சேருதல்.)

முதன்மந்திரி:—மகாராஜ் 'நாம் இதோ நாகபட்டினத்திற்கு வந்து விட்டோம். அணித்தில் பௌத்தா

* திருக்குறள்.

லயமும் காண்கின்றது நமது தோலாவழனுக்கல் புரியப்பெற்ற ஓர் தந்திரயுக்தியால் மிகுந்தபலமான இவ்வாலயக் கோட்டைக் கதவுகளெல்லாம் படீர் படீரெனத் தானே திறந்துகொண்டன ஆனதால் நாம் தாராளமாய் உட்செல்வோம் வாருங்கள்.

பரகாலர்:—மந்திரிவர்ய்! இதென்ன ஆச்சர்யமாக விருக்கிறது நாம் எவ்வளவோ கோட்டைகளென்ன, கொத்தளங்களென்ன, காவல்களென்ன இவைகளை எல்லாம் மிக்க சாமர்த்தியமாய்ப் பேதித்துக்கொண்டு இக் கர்ப்பக்கிரகம் வரலாயினோம் ஆனால் இங்கிருக்கும் பசும்பொற்சிலையை ஒருவரும் அபகரித்துச்செல்லாமல் ஓர் யந்திரமானது சதா கிரு கிரு கிரென சுழன்று கொண்டிருந்து எவரேனும் விக்கிரகத்தின் சமீபஞ் சார்வரேல் பொருக்கென ஓடோடியும் வந்து பலமாய்த் தாக்கி கீழே வீழ்த்துகின்றது ஒருக்கால் மீறி அதனைத் தட்டிவிட்டுப் போகலாமே யென்று பார்த்தால் அவன் பிராணனுக்கே அபாயம் வந்துவிடும் போலிருக்கிறது ஆனதால் மெல்ல யாவரும் வெளியே போய்விடுவோம். எவனுந் தன் உயிரையாவது காப்பாற்றிக்கொண்டால் உப்புமாறியாவது பிழைக்கலாம் என்பதுபோல இதற்குத்தப்பிப்போய் புறம்பேசென்று பின்னர் சாவதானமாய் தகுந்த சூழ்ச்சி செய்துகொண்டுவந்து நமது உத்தேசத்தை முடித்துக்கொள்ளுவோம் வாருங்கள்! வாருங்கள் திரும்பிப்போகலாம்.

அப்படியே யாவரும் புறம்பே திரும்பலாயினர்.)

முதன்மந்திரி:—இறையவரே! தமது "திருவுளத்துக் கருத்தெதுவோ—வதுவெனக்குங் கருத்தே"

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

யாயினும் நாம் ஆதியில் ஒன்று யோசிக்காமற்போய் விட்டோம் இந்த சுவர்ண விக்கிரகமானது அத்தனைச் சுலபமாய் பிறரால் கைப்பற்றக் கூடியதாயிருந்தால் இத்தனைக்காலம் இவண்நிலைத்திருக்குமோ? ஒருபோது மிராதன்றோ? ஏதோ ஓர் அரிய மாந்திரீக சத்தியால் நிர்மாணிக்கப்பெற்ற இச்சக்ரம் சுழன்றுகொண்டிருப் பதனாலன்றோ? ஒருவனும் இதைப்பற்றி கனவிலும் நினைத்தானில்லை. ஆனதால் வேந்தர்சிகாமணியே; இது விஷயத்தில் ஏழைமதியினனாகியவெற்கு ஒன்றுந் தோன்றிற்றில்லை. பிரபோ! தாங்கள் இதர மந்திரிகளை வினவித் தெரிந்துகொள்வீர்களாக.

பரகாலர்:—மந்திரிமார்களே! சரி. இப்போது நான் ஒன்று சொல்லுகிறேன் அதன்படி செய்யுங்கள் நீங்களனைவரும் நமது நகரமே சென்று நான் இராஜ்யத்தில் இருப்பதும் இல்லாததும் பிரஜைகளுக்கு தெரியாதவண்ணமாய் ராஜ்யபாரத்தை செவ்வனே நடத்தி வருவதுடன் நமது அரண்மனையையும் அதி ஜாக்கிரதையாய் பாதுகாத்து வருவீர்களாக; நான் மட்டும் இதோ இன்றுதினம் இந்நாகை மாநகரை விட்டு சீனநாட்டிற்குச்செல்ல ஆயத்தமாகவிருக்கும் இச் சௌந்தரவல்லிக் கப்பலில் சென்று பிறநாட்டி லேனும் பொருள்தேடி வருகின்றேன். ஆனதால் நீங்கள் தடைகூறாது திருவாலிநகரிற்கு செல்வதுடன் எனக்கு விடைதருவீர்களாக.

மந்திரிகள்:—பிரபு மகாராஜ்! தாங்கள் பகவத்கைங் கர்யார்த்தமாய் செல்லத்துணிந்து பிரயாணமாகையில் தங்களைத் தடுப்பது நன்றோ? ஆனதால் தாங்கள் தமது

திருவுள்ளப்படியே சிந்தாத்துறையாகச் சென்று விசேஷநாள் அவ்விடம் தாமதிக்காமல் யாவத் காரியங்களையும் முடித்துக்கொண்டு கடிதில் திரும்பி வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். அரசே! நமஸ்கரிக்கின்றோம், கப்பலும் பாய்விரித்து நங்கூரமெடுத்து விட்டான், போகப்போகின்றது, சென்றுவாருங்கள். (ஜானகி காந்தஸ்மரண:—ஜெயஜெயராம்.)

நமது மங்கைநாடாரும் மரக்கலமேறிச் சென்று நேரே சீனநாட்டிற்குச் செல்லாது மத்தியில் கண்ட வனப்பால் ஐயிராவதி நதிதீரத்தின் பிரதேசத்திலிறங்கி அங்கு சின்னாள் வதிதருவாராயினர்.

பரகாலர்:—ஆகா! இதென்ன! "புயங்கபூமியோ-புரந்தரர்க் கமைத்தபொன்னுலகோ - தயங்குசெல்வ நீடளகையோ" வெனக்கண்டோர் பெரிதுமையுறுமாறு இப்பிராந்தியம் ஒளிராநின்றதே! ஆகா! இந்நாட்டின் நீர்வளமென்னே! நிலவளமென்னே! ஆர்கலி சூழ்ந்த அவனிதேவிக்கு ஓர் நுதலெனவொளிர் சீருடைத் திலதமோ! இதோ தோன்றும் நதியின்பெயர் ஐராவதியாமே! இந்நதி தீரமெல்லாம் எவ்வளவோ அந்தமிகுந்த பலவிருக்ஷங்களும் புஷ்பச் செடிகளும் பூங்கொடிகளும் அடர்ந்து மாதுர்யமான பழ வர்க்கங்கள் அங்கங்கே விருக்ஷத்தி னடியில் பழுத்து விழுந்தும் ஒருவரும் விரும்புவாரற்று கிடக்கிறதும் அவற்றிலொழுகும் ரசங்களெல்லாம் திரண்டு எங்குபார்ப்பினும் சிற்றாறுகளாய் ஓடாநின்றது. இவ்வாறாய பல்வளம் பெற்ற ஆரண்யங்களின் அதியுன்னத அமைப்பைக் கண்டனரோ? அரியஞானிகளெல்லாம் தங்களுக்கு எத்

துணைச்செல்வ மிருப்பினும் அவற்றை துச்சமாய் நினைத்து அறவே யொழித்து வனசஞ்சாரமே வைகுந்த வாசமாய்க் கருதி இவண் வந்து விடுகின்றார்கள்; ஆகா இத்தன்மையான "மணங்கொள்மாதவி நெடுங்கொடி விசும்புற நிமிர்ந் தவை முகில் பற்றிப் பிணங்கு பூம்பொழில்" களார்ந்த இந்தப் பிரதேசத்தில் நாம் சிற்பகல் தங்கியிருந்து நமது சிந்தனைக்கினிய ஸ்ரீரங்கநாதனை இவண் பிரதிஷ்டைசெய்து பூசித்துக்கொண்டிருந்தால் இதனடுத்த விடங்களில் சஞ்சரிக்கும் பர்மியர்கள் கேள்விப்பட்டு இங்ஙனம் வந்துபோகத் தலைப்படுவார்கள். அவர்களால் பல விசேஷங்களையறிந்துகொண்டு சீனராஜ்யம்செல்வோம். அற்றேல் ஒன்றும் பயன்படா. ஆகையால் அவ்வாறே புரிதாநிற்போம். ஆகா இஃதென்ன நமதெண்ணத்தை ஜெகதீசனனைவர் முன்னரேயுணர்ந்து இங்ஙனம் திருக்கோயில்கொண்டனரோ? யாதோ தெரியவில்லையே. இதோ ஓர் தேவாலயம் இப் புதரினிடமாக நன்கு தோன்றுகிற்கிறது. ஆனதால் இக்காட்டைத் திருத்தி அவணுள திவ்யதேஜோ மூர்த்தியைக் கண்டு தெரிசித்துச் செல்லாநிற்போம்.

**பரகாலர் தமதுகட்கத்தால் காட்டையழித்துக்கொண்டு ஆலயத்தினுட்செல்லுதல்.**

பரகாலர்:—ஏ கருணாலயா! "அடியேற் கனியனாய் வந்தென் சிந்தையுள்" நினைந்தனவெல்லாம் அளித்தருள் நிமலா! வண்பொன்னிப் போராறுபோலெண்ணி இத் தண்ணயிராவதித் தடத்தமர்ந்தனையோ? அரங்கமென்றிதனையும் அழைத்தலாகாதோ? தாஸனிவண் வந்தடைந்தவை யெல்லாம் ஈஸ்வர நீ நன்கறி

வாய் கொல்லோ! ஐயவதனை யடைந்திடல் வேண்டிச் செய்தவஞ் செய்வான் சேவியா நின்றனன்

* செக்கர்மா முகிலுடுத்து மிக்கச் செஞ்சுடர்
பருதிசூடியஞ்சுடர் மதியம் பூண்டு
பலசுடர்புனைந்த பவளச்செவ்வாய்
திகழ்பசுஞ்சோதி மரகதக்குன்றம்
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல்
பீதகவாடை முடிபூண்முதலா
மேதகுபல்கல னணிந்து சோதி
வாயவும் கண்ணவும் சிவப்பமீ திட்டுப்
பச்சைமேனி மிகப் பசைப்ப
நச்சுவினைக்
கவிர்தலையாவி னமளியேறி
எறிகடல் நடுவு ளறிதுயிலமர்ந்து
சிவனய னிந்திர னிவர்முதலனைத்தோர்
தெய்வக்குழாங்கள் கைதொழக்கிடந்த
தாமரையுந்தித் தனிப்பெருநாயகா
மூவுலகளந்த சேவடியோயே.

இவ்வாறு கொற்றவேற் பரகாலர் பர்மியநாட்டின் காட்டகம்புக்கி அயிராவதியின் அணித்தோர் சூழலில் அரங்கநாதன் ஆலயங்கண்டு அண்ணலை நோக்கி அருந்தவமியற்றிநிற்க ஆங்கணுள சில சாக்யமுனிவர்கள் இவர் தவங்கண்டு இறும்பூதெய்தி சமீபமடைந்து பணிந்துபோற்ற நம்பரகாலரும் அவர்கண்மாட் டன்புகூர்ந்து தாபதர்காள்! என விளித்து †“சமயம் என்பது ஒரு விலங்கு. அவ்விலங்குக்கு முன்னந்தலையில் மயிர்சடையாய் வளர்ந்திருக்கும் பின்னந் தலை மொட்டை நெற்றிமயிரைநெகிழவிடாமல் பிடித்துக்

* திருவாசிரியம். † லத்தீன் இலக்கியம்.

கொண்டால் அதைநிறுத்தலாம். விட்டு விட்டாலோ பின்பு அதைப்பிடிக்கத் தெய்வத்தாலும் முடியாது" அல்லாமலும்

* விகிலவீழருவித்தாரை வேறு வேறாகவோடிக்
குலநதிப்பாலிவைப்பி னேகமாய்க் கூடுந்தோற்றத்
தலகில்பலவழியுழூதோர் அணிமையிலொன்றுமாறும்
பலபலமதமுமீற்றில் ஒருவழிப் படலும்போலும்.

ஆகையால் இவ்வாலயத்தின்கண் பிரம ருத்ரேந்திராதி தேவர்கள் நாளும் வந்தாராதிக்கப்பெற்று எழுந்தருளி யிருக்கும் அனந்தசயனனே நீங்கள் வணங்கும் ஆதி மூர்த்தியாகும். இன்னும்,

* நீசச்சமணர்க்குஞ் சூனியவாதர்க்கும் நீதியற்ற
பூசற்பவுத்தர்க்கும் சைவர்க்கும் யார்க்கும்புகலுகின்றேன்
நாசப்படா வுயிரெல்லாமுதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரங்கத் தாதிமூலத் தரும்பொருளே.

ஆனதால் நீங்கள் கருவிலே திருவுடையீர்களானால் இக்காட்டகத்தைச் சீர்திருத்தி காடுநாடாக்கி † அரங்க நகரெனப் பெயரமைத்து உங்கள் சமயத்தினர் பலரையும் குடிபுகச்செய்து இப் புண்ணியமூர்த்தி நண்ணிய ஆலயத்தைப் பொன்னினாற்சமைத்து எண்ணிய வெண்ணியவாங் கெய்துவீர்களாக. என்று அப் ‡ பொங்கிகளுக்கு ஹிதோபதேசம் புரிந்தருள அவர்களும் அப்படியே பெரிதும் மனதொருப்பட்டு

* காஞ்சிப்புராணம்.

† திருவரங்கக்கலம்பகம். † இந்நகர்தான் இரங்கோன் என்று வழங்கிவருகிறது. ‡ பொங்கிகளென்று பௌத்தகுருக்களுக் குப்பெயர்.

அக்காட்டினை நாடாகத்திருத்தி அனந்தசயனன் ஆலயத்தையும் கற்கோயிலாயுள்ளதை பொற்கோயிலாக்கி வணங்கிவழிபட்டு அரங்கநகரெனப் பெயரமைத்து பலருங்குடியேறி வாழ்ந்துவருவாராயினர். பின்னர் ஆலிநாடரும் அவணிருந்து நீங்கி கரைமார்க்கமாகச் சீனராஜ்யம்சென்று அவ் விராஜதானியில் பலபக்கமும் திரிந்து ஓர் வீதிவழியாய்ச் செல்லுகையில் இவ் வூரில் யாரேனும் சிறந்த சிற்பிகளுளரோ என்று வழியிற் காண்போர் பலரையும் விசாரித்துக்கொண்டு போகுமிவர்முன் தெய்வானுகூலமாய் ஓர் சிற்ப சாஸ்திரம் வல்லோன் தானே எதிர்ப் படலாயினன்.

பரகாலர்:—ஐயா! தாமிந்த ஊர்தானோ? தமது நாமம் என்ன?

சிற்பி:—பெரியீரே! யானிவ்வூரானே, எனது பெயர் யந்திரஸ்தாபகன் என்பார்கள். தமது நாமதேயம் யாது?

பரகாலர்:—யாந்திரிகரே! யாமோ நாகைநகர்வாசியான பரகால யோகியாவேன்.

சிற்பி:—ஐயன்மீர்! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல நான் என்ன உத்தேசமாய் எதை எண்ணிக்கொண்டு போனேனோ அதற்கேற்பத் தாமெதிர்ப்பட்டீரே? நன்று! நன்று!! ஏனையா? தங்கள் நாகபட்டினத்தில் பௌத்தாலயமொன்று பிரசித்தமாக விளங்கிவருகின்றதே. அதனிடமுள்ள செம்பொற்சிலையினை எவரும் கவராடாவண்ணம் அமைக்கப்பட்டிருந்த சுழற்சக்கரமானது சரியாய் சுழன்றுகொண்டிருக்கிறதா தெரிவிப்பீர்?

பரகாலர்:—யாந்திரீகரே! ஆகா அதுவோ! அச்சக்கரம் நெடுநாளைக்குமுன்பே நிறுத்தப்பெற்று விக்கிரகத்தையும் யாவனோ ஒருவன் அபகரித்துப் போயினானே!

சிற்பி :—ஆம் அது வாழை பெருத்த தேச மல்லவோ? சரி. திருவாரூரில் கமலாலயம் என்னும் தடாகத்திலுள்ள ஊற்றுக்கண்கள் மூடப்பெற்று படிக்கட்டுகளெல்லாம் கட்டிமுடிந்தனவோ?

பரகாலர்:—ஆர்வலீர்! அவைகட்டிமுடிந்து நீண்ட நாளாயினவே.

சிற்பி :—ஆகா! அது வரால்மீன்பெருத்த நாடல்லவோ? சரி. ஏனையா! திருவரங்கத்தில் இராயகோபுரத்தின் மோகனக்கல் (விட்டம்) அமைத்து விட்டார்களா?

பரகாலர் :—நேயர்காண்! என்ன, தாம் முடிந்துபோன விஷயங்களையெல்லாம் அதிக ஆச்சர்யமாகவும் புதிது புதிதாகவும் கேளாநின்றீர்! அதனை பஹு காலத்திற்கு முன்பே நிறுத்திவிட்டார்களே!

சிற்பி :—சரி! சரி! அங்கே பருத்திவிளைவு அதிகமல்லவா? நியாயந்தான் தாங்கள் போய்வாருங்கள் நமஸ்காரம்.

பரகாலர் :—அப்படியே சென்றுவருகின்றேன். சரி நாம் உத்தேசித்து வந்த காரியங்கள் யாவும் வாதன் கருணையால் வலுவிலேயே சுலபமாய்த் தெரிந்து கொள்ளலானோம். இந்த ப்ரதேசங்களிலும் ஐராவதி நதிதீரத்தில் பௌத்தர்களைக்கொண்டு ஆங்காங்க ருண்டாக்கி அனந்த சயனப் பரந்தாமனின் கற்கோயிலையும்

பொற்கோயிலாகப்புகுந்து வணங்கி வரச்செய்தோம். இனி நமது நாட்டிற்குச் செல்லவேண்டியதே யான தால் இதோ இச்சீனதேசமிருந்து நமது நாகபட்டி னத்திற்குச் செல்லும் நாவாய் ஒன்று பிரயாணக்கொடி இழுக்கப்பெற்று விளங்குகிறது. ஆனதால் அக்கப் பலின் மாலுமியை யடுத்து நாம் ஏறிச்செல்வதற்கு பிர யாணச்சீட்டு பெற்றுக்கொள்வதுடன் ஓர் தந்திரம் புரி ந்து அதனால் உண்டாகும் ஊதியத்தையும் சம்பாதிப் போம் நாம் இப்போது செய்யப்புகுந் தந்திரத்தால் சிறிது பாபம் சம்பவிக்குமென்றாலும், அவை யெல் லாம் பகவத் கிருபைக்கு பாத்திரனாவதற்கே யானதால் தீயினிற் றூசாகுமே யல்லது மற்றெவன்செய்யும்? சரி முன்னர் நாம் ஏறி இவண் போதந்த சௌந்தரவல்லிக் கப்பலின் மீகாமன் இதோ நின்றுகொண்டிருக்கிறார். அதுவும் தெய்வ சங்கல்பந்தான் நாமும் அவரிடம் சென்று வார்த்தையாடாநிற்போம். ஓய் மாலுமியாரே! நான் நாகபட்டினம் போகவேண்டியவன் ஆகையால் தமது மரக்கலத்தில் ஏறிப்போக அனுமதிச் சீட்டுத் தாவேண்டும்.

மாலுமி :—ஓய் சாமியாரே! தம்மைப்பார்த்தால் எங்கோகண்ட ஞாபகம் வருகிறது அல்லாமலும் தபோ தனராயிருக்கின்றீர்! தம்மிடம் பிரயாணக்கூலி (கப்பல் கேள்வு) பெற்றுக்கொண்டு கொண்டுபோய் விடுவது சரியல்ல; ஆனதால் தாம் ஒன்றும் பணந்தாவேண்டாம் இலவசமாய் ஏறிச்செல்லும். நான் இவ்விடம் இறங்கி விடுவேன் இதோ நிற்கும் கோபால் சிங்குதான் கப்ப லோட்டியாக வருவார் இவர் மிகவும் நல்லவரானதால் இந்தக்கப்பலில் போய்வாரும்.

பரகாலர்:—ஐயா மாலுமியாரே! தங்களுத்தரவின்படியே போய்வருகிறேன் ஆனால் என்னிடத்தில் வேறுசாமான்களில்லை இதோ இருக்கிற இந்தப்பாதிப் பாக்கினை மட்டும் என்கையில் வைத்துக்கொண்டிருப்பது எனக்கே மிகவும் வெட்கமாக விருக்கிறது. ஆனதாலிதை இக்கப்பலின் அடித்தட்டில் ஏற்றியிருக்கும் பாக்குமூட்டைகளோடு போட்டுவைக்கிறேன் நான் இறங்கும்போது ஒருவரும் தடைகூறாது எடுத்துக்கொள்ளும்படி ஓர் சிறு முறிச்சீட்டு மட்டும் எழுதித்தரக் கேட்டுக்கொள்ளுகிறேன் ஏனென்றால் இப்பிளவு ஒரு காரியத்திற்காக நாகைக்கு அவசியம் கொண்டுபோகவேண்டியிருக்கிறது.

மாலுமி:—இதென்ன பயித்தியம்! ஓய்பெரியீரே! நீர் நாகபட்டினத்தில் இறங்கும்போது ஒருமூட்டை பாக்கு வேண்டுமானாலும் தரச் சொல்லுகிறேன் அதற்காக முறிச்சீட்டு வேண்டுவதில்லை போம்.

பரகாலர்:—ஐயா! அப்படியல்ல; தங்களுக்கு இதொருபெரியகாரியமா? ஆனாலும் வருகிற மீகாமனவர் தங்களைப்போல தயாளகுணம் வாய்ந்தவரோ? அன்றோ அறியேனானதால் ஏனந்தத்தொல்லை மனமிருந்தால் கொடும் இல்லாவிட்டால் இதோ கடலில் வீசி எறிந்துவிடுகிறேன்.

மாலுமி:—ஆகா பெரியீர் வேண்டாம்! வேண்டாம்!! கோபித்துக்கொள்ளாதீர்! தமதுபெயரென்ன சீக்கிரம்சொல்லும் இதோ எழுதித் தருகிறேன் இந்தாரும் பெற்றுக்கொண்டு வாசித்துப் பார்த்துக்கொள்ளும்.

முறிச்சீட்டு. கரு-கூ-சஙங. கலி
தினம்.

நாகபட்டணத் துறைமுக அதிகாரியாகிய நாராயண தாஸ் அவர்கட்கு.

ஐயா,

இந்தச் சௌந்தரவல்லிக் கப்பலில் வருகிற ஸ்ரீபரகால ஸ்வாமியானவர் இக்கப்பலில் பாதிப் பாக்குப் போட்டிருக்கிறார், ஆனதால் அவ்விடம் இறங்கும்போது அவற்றை அவர் எடுத்துக்கொள்ள ஒருவருந் தடை கூறாது விட்டுவிடவேண்டியது.

இப்படிக்கு
**தாமோதர தாஸ்,**
மீகாமன்,
சௌந்தரவல்லிக்கப்பல்.

பரகாலர்:—சலாம்ஐயா; இவ்வளவுபோதும் ஒரு ஆதாரத்திற்காக எழுதித் தரும்படிக் கேட்டேனே யல்லது பிறிதில்லை. சரி சென்றுவருகின்றேன்.

**நமதுபரகாலர் ஏறிவந்த கப்பலும் ஸ்ரீ-சௌந்தரராஜ னனுக்கிரகத்தால் சிந்தாத்துறையாக நாகபட்டினத் துறைமுகம்வந்துசேர்ந்தது.**

பரகாலர்:—ஆகா; இதோ மரக்கலமும் திருநாகைத் துறைமுகத்தைக் கிட்டிவிட்டது. அதற்கறிகுறியாய் "கண்ணனைத் துளவத்தாமக் கண்ணனைக் கண்ணுற்கண்டாப்" போல ஸ்ரீ-சௌந்தராஜப் பெருமானுடைய திருக்கோயிலின் கோபுரதெரிசனமாகிறது. இக்கப்பலிலுள்ள இதர பிரயாணிகளும் சிந்தாத்துறையாய்க் கப்பலை கரைகொண்டுவந்து சேர்த்த அழகனைக் குறி

MAHAMAHOPADHYAYA
... NATHAIYAR LIBRARY

த்து தோத்திரம் புரியாநிற்கின்றனர். அன்னோருடன் கூடி நாமும் நாமசங்கீர்த்தனம் புரிவோம்.

"மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட மாலிருஞ்சோலை
மணாளர் வந்தென்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் நீர்மலை
யார்கொல் நினைக்கமாட்டேன்
மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில்போன்
றுளர் வந்துகாணீர்
அஞ்சிறைப் புள்ளுமொன் றேறிவந்தார்அச்சோ
வொருவ ரழகியவா."

ஆகா இதோ மரக்கலமும் நங்கூரம் போட்டுவிட்டார்கள் எல்லோரும் தோணியிலிறங்குவதால் நாமும் இறங்கிச்செல்லுவோம் இதோ கரையில் நிற்பவர்தான் துறைமுக அதிகாரிபோல் காண்கின்றது. அவரிடம் போவோம். அவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கவனித்தால் இதரக் கப்பல்களில் இன்று பாக்கு மூட்டைகள் வரவில்லைபோற் காண்கிறது. அதனாற்றான் ஆரவாரமாய் வியாபாரிகள் எனக் குனக்கென்று இந்தக்கப்பலில் இறக்குமதியாகும் மூட்டைகளைப்பற்றியடித்துக்கொள்ளுகிறார்கள் ஆகையால் நமது பாக்கை விற்பதற்கு இவ்விடம் தாமதித் திருக்கவேண்டியதில்லை. சீட்டினைப்பார்த்ததும் உடனே பணம் தந்து விடுவார்கள்போலிருக்கிறது நாம் நேரே துறைமுக அதிகாரியைப்போய்க் காண்போம். ஐயா! தாங்கள் தானோ நாராயணதாஸ் என்னும் துறைமுக அதிகாரி! அப்படியானால் இதோ முறிச்சீட்டு இருக்கிறதுபாரும். அதன்படி இக்கப்பலில் இறக்குமதியாகும் பாக்கு மூட்டைகளில் என்னுடையதான பாதிமூட்டைகளைத் தனியாக ஒருபக்கம் அடுக்கச்சொல்லுவீர்!

அதிகாரி:—ஓய் சாமியாரே! எங்கே முறிச்சீட்டைத்தாரும் பார்ப்போம்; சரி நீர்தானு பரகாலஸ்வாமி? அப்படியானால் உம்முடைய பாக்குமூட்டைகளைத் தனியாக இந்த தடபடலில் அடுக்கமுடியாது. ஒரே ஆசாமிக்கு முற்றிலும் பஜார் பருவப்படி விலைபோட்டாய்விட்டது ஆனதால் அதற்குள்ள கிரயத்தில் பாதி என்னவாகிறதோ அந்தத் தொகையைமட்டும் பெற்றுக் கொள்ளும் வேறொன்றும் அதிகமாய்ப்பேசாதீர்!

பரகாலர்:—இதென்ன அநியாயமையா! போகட்டும் முடிந்துபோனதைப்பற்றிப் பேசிப்பயனென்ன? சரி பொன்னை எண்ணித்தாரும். ஆனால் நான் பணப் பெட்டிகள் ஒன்றும் தற்போது கொண்டுவரவில்லை. ஆனதால் தம்மிடமுள்ள ஓர் பேழையிற் போட்டுப் பூட்டித் திறவுகோலை என்னிடம் கொடுத்து விட்டு ஒரு மனிதனைக் கூடஅனுப்பி இந்தப் பெட்டியை சிக்கல் கிராமம் வரையிலும் எடுத்துவந்து தருமாறு பணித்தருளவேண்டியது. இதுதான் தம்மை நான் மிகவும் வேண்டிக் கேட்டுகொள்ளுகிறது.

அதிகாரி:—சாமியாரே! அப்படியே செய்கிறேன். (இவருக்குச் சேரவேண்டிய பாதித்தொகையாகிய பதினாயிரம் பொன்னையும் ஓர் பேழையிலிட்டுப் பூட்டித் திறவுகோலை இவரிடம் கொடுத்து ஓர் கூலிக்காரனைக் கூப்பிட்டு.) அடே கூலிஆள்! நீ இந்தச் சாமியாருடன் கூட இப்பெட்டியை ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டுபோய் அவர் சொல்லுமிடத்தில் இறக்கிவைத்துவிட்டு வருவாயாக.

பரகாலர் :—இதோ கூலிக்காரனும் தமது சொற்படி வந்து விட்டான். நாமும்போய் வருகிறோமையா! அடே கூலிக்காரா! இந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு என்பின் வருவாய். இராக்காலமானதால் மிகவும் ஜாக்கிரதை இதோ எனது கிரகமும் சமீபித்து விட்டது உன்னாலும் தூக்கிவரமுடியவில்லை ஆனதால் இவ்விடத்தில் வைத்துவிட்டுப்போ இதோ உனக்கு கூலிப்பணத்தைத் தருகிறேன் பெற்றுக் கொண்டு வீடுபோய்ச்சேருவாய். (அப்படியே போய் வருகிறேன் சுவாமி.)

கூலிக்காரன் போய்விடுகிறன்.

பரகாலர் :—இப்போது கூலிக்காரனும் தூரமே போய்விட்டான்; நாம் தனியாய் எப்படி இந்தத் திரவியப் பெட்டியை திருவரங்கத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது ? நமது நகரிலுள்ள சேனாவீரர்களில் சிலரை யனுப்பி யெடுத்துவரச்செய்வதே நலமாகும் ஏனென்றால் மார்க்கமோ மிகவும் பயங்கரமானது ஆகையால் சிக்கல் கிராமத்தை யடுத்துள இச்சேரியின் பாங்கரான * இத் திடரின் ஓர் புறத்து புதைத்து வைத்துவிட்டுப் போவோம். அப்படியே புதைத்தாய்விட்டது. இதை யார் காப்பது ? இதோ அணித்திலுள்ள ஆலயத்தின் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-கௌரி தேவியை இத் திரவியத்தினைக் காப்பாற்றித் தருமாறு பிரார்த்தித்துப் போவோம். ஹே பகவதி! தாருக விநாசனி! ஹே அம்

* இந்தப்பிரதேசம் இப்போது பொருள்வைத்தசேரி யென்னும் ஓர் பெரிய வூராகியும் ஆங்கணுள காளிதேவிக்குப் பொன்காத்தசெல்வி யென்றும், வாழைத்தண்டு வெட்டிய விடம் மஞ்சட்கொல்லையென்னும் ஓர் கிராமமாயுமிருக்கிறது.

பிகே! யானிதுபோது இவண் புதைத்துப் போந்த அப்பேழையினிடத்துள்ள திரவியங்களைக்கொண்டு அரங்கமா நகரில் அரிதுயிலமரும் ஆதியம் பகவனின் ஆலயத்திருப்பணி அணிபெற அமைப்பதற்காகவே. ஆனதால் நீ காவல் புரிவாய், நினக்கு இன்றுமுதல் பொன் காத்த செல்வியென்று பெயரோங்குக. நான் சென்று வருகின்றேன். ஆகா நாம் அதிகநேரம் இவ்விடம் தாமதிக்கக்கூடாது. இந்நள்ளிரவிலேயே இதோ தோன்றும் மஞ்சட்கொல்லையினுட் புகுந்து சில கதலிமரங்களை வெட்டியுரித்து அதன் தண்டுகளை எடுத்துக்கொண்டுபோய் யாதொரு பௌத்தாலயத்தினிடமாகவுள்ள சுழற் சக்கரத்திற் கொடுத்து அதனைச்சுழலாது நிற்கச்செய்து உட்பிரவேசித்து பொற்சிலையை எடுத்துவருவோம்.

பின்னர் பரகாலரும் தாமுத்தேசித்தபடியே கதலித் தண்டுகளைக் கொண்டுபோய் பௌத்தாலயத்தின் சுழற் சக்கரத்தில் கொடுத்தமாத்திரத்தில் அதன் நார்களினால் சிக்குண்டு அது சுழல்வது நின்றுபோகவும் இவர் உட்பிரவேசித்து சுவர்ணவிக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு அதி வேகமாய் அவ்விரவிலேயே ஒருவரும் அறியாமல் திருவரங்கத்தை நோக்கிச் செல்லா நிற்க திருக்கண்ணங்குடிக்குச் சமீபமாய் வருகையில் வானில் "வெள்ளி யெழுந்து வியாழ முறங்கி சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம் துன்னியதாரகை மின்னொளி சுருங்கி வைகறை கூர்" தருவண்ணங்கண்டு பெரிதும் அச்சுற்று அங்ஙனேயே நின்று பலவாறு எண்ணமிடுவாராயினர்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

# எட்டாவது அத்யாயம்.

* கண்ணகன் ஞால மளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணரும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம் நண்ணிய
மாயச்சகட முதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.

இடம்—திருக்கண்ணங்குடி. காலம்—வைகறை.

பாத்திரங்கள் { பரகாலர், குடியானவன், கோத்தவால், யோகீஸ்வரர்.

பரகாலர்:—இன்னும் அருணோதயமாவதற்கு ஓர் சாமப்போதுதானிருக்கலாம். இதுபோது நாம் நீளப் போதல்கூடாது ஆகலின் இதோ தோன்றும் திருக்கண்ணங்குடியைச்சார்ந்த இக்கழனியோ நீருஞ் சேறுமாக இராநின்றது. அதனிடமாக விக்கிரகத்தை புதைத்து வைத்துவிட்டு நாம் இத்திந்திருணி விருக்ஷத்தினடியில் பிற்றைநாட் கங்குல் போதருமளவும் காத்திருப்போம். பின்னர் விக்கிரகத்தை எடுத்துகொண்டு அரங்கமாநகரிற்கு செல்லுவோம். அன்றேல் நமது இரகசியம் வெளிப்படையாய்விடும். ஆனதால் அவ்வாறே அச்சேற்றிற் புதைத்துவிட்டு நாம் இப்புளியவிருக்ஷத்தினடியில் உட்கார்ந்திருக்கையில் ஆகா என்ன இன்று அத்யந்த ஓர் நித்திரை வாராநின்றது இருந்தாலென்ன பொற்சிலையை பாதுகாக்கவேண்டிய பெருங்கவலையிருப்பதால் உறங்கிவிடப் போகாதென்று இமைகொட்டாது நான் விழித்துக்கொண்டிருக்க வ எகினத்தரு

* திரிகடுகம்.

வே! நீ மாத்திரம் நன்றாயுறங்குகின்றாயே. † இனி நீயும் உறக்கம் ஒழிவாய் (என அவ்வாறே அவ்வெகினை விருக்கம் என்றும் உறக்கம் ஒழிந்துநின்றது.)—ஆகா அருணோதயமாகப் போகாநின்றதே என்றல்லவோ மிக வகமகிழ்ந்திருந்தோம். இதென்ன கஷ்டகாலம்! இதோ கையுங் கலப்பையுமாய் மாடுகளை ஓட்டிக்கொண்டுநாம் எந்தக்கழனியில் விக்கிரகத்தைப் புதைத்துவைத்துளோமோ அவ்வயலை அதற்குரியவன் ஏர்கட்டி உழுதல் புரியப் போந்துளானே இதற்கென்செய்குதும். ✻ "பொன் பெயருடையோன் தன் பெயர் கடுப்பத்-தூணம் பயந்த மாணமர்குழவிக்-காக்கர் கூட்டத் தமர் விளையாட--நெருப்புமிழாழி யீந்தரு ணிமலன்" துணை செய்வானாக. ஆகிலும் இதுபோது ஓர் யுத்தியால் அந்நவனை மருட்டி விரட்டி விடுகின்றேன் எனக்கு இஃதோர் பெரியகாரியமா? பார்ப்போம். அடே நீ யாவனடா? யாருடைய நிலத்தில் சிறிதும் அச்சமில்லாமல் ஏர்பூட்டி உழுவதற்கெய்தினை? சீ! அறிவீனா! அகலப் போவாய் போகின்றனையா? அல்லது என் உடைவாளிற்கு இறையாகின்றனையா? சீக்கிரம்சொல் துஷ்டப் பயலே!

குடியானவன் :—அந்தோ இதென்னவிபரீதம். நாம் நமது புளியடிக்குட்டையில் மூன்று நாளாய்ஜலம் விட்டுக்கட்டி இன்றுதினம் உழப்போனால் இவனோரா

† இது முதல் தாழாக்குடி, காயாமகிழ், ஊறாக்கிணர், உறங்காப்புளி, தீராவழக்கு திருக்கண்ணங்குடி, என்னும் முதுமொழிவருவதுடன் இவையாவும் இன்றைக்கும் நன்கு காணலாம்.

✻ கல்லாடம்.

திருவாலியெத்தன் ஓடிவந்து வழக்காடுகிறானே! இதென்ன கலியன் கூத்தோ? சரி இவனுடன் நாமெதிர்த்து வீணில் போராடக்கூடாது முரடனாகவுமிருக்கிறான் ஒரு சமயம் பிராணனுக்கே தீங்குவரினும் வரும். ஆனதால் இவனை விநயமாய் நமதூர் அதிகாரியான கொத்தவாலிடம் இழுத்துக் கொண்டுபோய்விடுவோம். அது தான் நல்லயோசனை ஓய் சொந்தநிலக்காரரே! சரி உமது வயலிலேதான் நான் அநியாயமாய் ஏர் கட்ட வந்தேன். வாரும் நம்மிருவருடைய வழக்கினையும் இவ்வூர் அதிகாரியிடம் தெரிவித்துக் கொள்ளுவோம். அவரெப்படியேனும் தீர்ப்பு செய்யட்டும் பார்ப்போம் போகலாம்வாரும்.

பரகாலர்:—சரி, வாடா போகலாம் அப்படியே யாகட்டும்.

இவ்விருவரும் நியாயஸ்தலம் அடைதல்.

கோத்தவால்:—ஓய் வாருங்காணும் சாமளமேனிப்பிள்ளை! இதோ உம்முடன் கூடவந்துள்ள இவரார் பார்த்தால் மிகவும் பயமாயிருக்கிறது பீமசேனனைப் போலிருக்கிறார்.

குடியானவன்:—ஐயா அதிகாரியவர்களே! என்னுடைய நஞ்சையாகிய புளியடிக்குட்டையில் இன்று விடியற்காலம் ஏர் கட்டப்போனேன். அவண் இத்தடித்தாண்டவராயன் நின்றுகொண்டு தனது நிலமென்றும் ஏர் கட்டாதேயடா வென்றும் மீறிக்கட்டினால் தலையை வாங்கிடுவேன் என்றும் அதட்டி உருட்டித் தன் கைவரிசை யெல்லாங் காட்டுகிறான் என்ன ஐயா

இது திருவாலியெத்தன் சமாசாரமாக விருக்கிறது. இந்த வழக்கைத் தாங்கள்தான் விசாரித்து முடிவு சொல்லவேண்டும்.

கோத்தவால்:—போதும்! போதும்!! உமது கதையைநிறுத்தும். ஓய் சுவாமி பெத்தபெருமாளே! உமது வழக்கென்ன? இப்படி வந்து சொல்லும் பார்ப்போம்.

பரகாலர்:—ஏ தயாளுவே! நானிருப்பது திருவாலி நாடேயாயினும் இதுகாலம் சீனதேசம் சென்றிருந்தேன். இதோ பாரும் நான் தரித்திருக்கும் ஆடையாவும் * சீனம்பரந்தான். இதோ நிற்கும் இப் பாமயோக்கியன் ஏர்கட்டப்போன அந்தவயல் எனது பிதிரார்ஜிதமானது. அதற்கு அந்தவிதமாய் செப்புப் பட்டயமுமிருக்கிறது. எனக்கு ஒரு நாள் மாத்திரம் கெடு தருவீராயின் அந்தப் பட்டயத்தைத் தமது சமுகம் கொண்டுவந்து காட்டத் தயாராக இருக்கிறேன். அதன் பின்னர் தாம் எப்படித் தீர்ப்புச்செய்யினும் செய்க. அதுபரியந்தம் எனது நிலத்தில் இவன் ஓர் அடிகூட யெடுத்து வைக்கலாகாது. மீறி வைத்தானுனல் என்ன வந்தாலும் வரட்டும். இவனை இலேசில் விடுவதுமில்லை. இந்த வழக்குத் தீரப்போகிறதுமில்லை; என்னுலானதைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

கோத்தவால்:—ஓய் சாமளமேனிப்பிள்ளை! ஏதப்பா இவர் சொல்வதைப்பார்த்தால் ஒரு சமயம் அப்படி பட்டயமிருக்கலாம் போலத் தோன்றுகிறது. இருக்கட்டும் எல்லா வள்ளலும் நாளை விடிந்தால் தெரிகிறது. இப்போது நாழிகையும் பதினைந்திற்கு மேலாகி

* சீனம்பரம்-சீனநாட்டில் நெய்த வஸ்திரம்.

விட்டது. இனி ஏர் கட்டித்தான் என்ன செய்யப்போகிறீர். நாளை வாரும் அவர் வார்த்தையின் ஆழ நீளத்தையும் பார்த்து விடுவோம், இருவரும்போய் வாருங்கள்.

குடியானவன்:—சரி! சரி!! தாங்கள்கூட ஒப்பம் வைத்துவிட்டீர்களா! * "பொய்யுடை யொருவன் சொல் வன்மையினுல் - மெய்ப்போலும்மே மெய்ப்போலும்மே. மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால் - பொய்ப்போலும்மே பொய்ப்போலும்மே." என்பது இதோ வியக்தமாய்விட்டது. எல்லா விதத்திற்கும் நாராயணன் இருக்கிறுன். பிரபு போய் வருகிறேன்.

பின்னர் பரகாலரும் அவ்விடம் நின்று நீங்கி வீதி வழியாக வரும்போது பசிதாகம் மேலிட்டவராய் சமீபத்தில் ஓர் கிணற்றில் சில பிராமணஸ்திரீகள் ஜலம் எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் பாற் சென்று அம்மணீ! என்னைத் தாகவிடாய் வருத்துகின்றது. அதனுல் மிகவும் மெலிகின்றேன். சிறிது அருந்த ஜலம் கொடுத்தருளல் வேண்டும் என இரந்து கேட்டும் அவர்கள் சூத்திரனுக்கு கொடுத்தால் சேஷப்பட்டுப் போய்விடும் என்று கூறிக் கொடாது போய்விட இவரும் பெரிதுந் துன்புற்று இனி "இக்கிணறுகளில் ஜலம் ஊறுது போகக்கடவது." என்று மொழிந்தருள அவ்வண்ணமே அவ்வூரிலுள்ள கூபங்களிலெல்லாம் இருந்த ஜலமும் வற்றி ஊறுமலே நின்றுபோக திரும்பிவந்து பார்த்த மாதர்களனைவரும் திகைத்து

* வெற்றிவேற்கை.

நின்று இவ்வதிசயத்தை அங்கங்கே கூடிக்கூடிப் பேச இதை யறிந்த வூரரெல்லோரும் ஓடிவந்து பாகாலர் திருவடிகளில் வீழ்ந்து அறியாமற்செய்த பிழையை மன்னித்தருளும்படி வேண்டி ஜலத்திற்கு மார்க்கங் காட்டுமாறு பிரார்த்தித்து நிற்க இவரு மனமிரங்கி தனது கைவிரல்களில் அணிந்திருந்த மோதிரமொன்றைக் கழற்றி இதோ வீசி யெறிகிறேன் இவ்வாழி எங்கே போய் விழுகிறதோ அங்கு வெட்டினால் மாத்திரம் ஜலம் அகப்படும் என்று மோதிரத்தை விட்டெறிய அவர்களும் அப்படியே சென்று மோதிரம் விழுந்தவிடத்தை வெட்டிப்பார்க்க ஜலம் அபரிமிதமாய் ஊறவும் மற்றவிடத்தில் சிறிதும் ஜலம் ஊறாதிருப்பதையுங்கண்டு அத்யாச்சர்யமடைந்து பாகாலரை பலவாறு போற்றித் துதித்துப் போவாராயினர். இவரும் உடனே அங்கு நின்று நீங்கிச் சிறிது தூரத்தில் ஓர் தென்னஞ்சோலையைக்கண்டு அங்கு செல்லாநிற்க ஆங்கண் அனந்தநாராயணன் ஆலயமொன்றிருப்பதைக் கண்டு உட்சென்று அவ்வெம்பெருமானைச் சேவிக்கையில் அவர் மிகுந்த சுந்தரமாய்ச் சேவை சாதித்தும் ஓர் திருவாபரணமேனும் தரித்திராதிருப்பதைக்கண்டு மனம் பொறாராய்த் தாமணிந்திருந்த ஓர் முத்தாரத்தைக்கழற்றி இந்த * "ஆபரணத்தைத் தரி" என்று சாத்தி சேவித்து விட்டுத் திரும்புகையில் அங்கு ஓர் வேளாளன் இல்லிலிருப்பதைக்கண்டு அவனிடம்சென்று தாகத்திற்கு ஜலம்கேட்க அவனும் உட்சென்று திவ்யமான நீர்மோர் கொண்டுவந்து கொடுக்க இவர் பானஞ்செய்து களைதீர்ந்து இது தாழாக்குடி என்று

* இவ்வூர் ஆபரணதரியென்று வழங்கிவருகின்றது.

சொல்லிப்பின்பு திருக்கண்ணங்குடிக்குப் போந்து திருவீதி வலம்வருகையில் தென்மேற்கிலுள்ள வீற்றிருந்த பெருமாள் சன்னதியைக்கண்டு சேவித்துக்கொண்டு, மேலப்பிரகாரத்திலுள்ள ஸ்தல விருக்ஷமாகிய வகுளமரத்தினடியில் அநேக தேசாந்திரிகள் வேனிற் காலக் கொடுமையை ஒருவாறு தணிப்பான் வேண்டிக் கூட்டங் கூட்டமாய் வந்து தங்கி இளைப்பாறிப்போவதைக் கண்டு மிக மன மகிழ்ந்து ஏ மகிழத் தருவே! நீ யென்றும் காயாதிருப்பாய் என்று அதனை மங்களாசாசனம் புரிந்து வலம் வந்து சியாமளமேனிப் பெருமானையும்,

* வங்கமாமுன்னீர் வரி நிறப் பெரிய வாளரவின்
 னணைமேவிச்
சங்கமாரங்கைத் தடமலருந்திச் சாமளமேனியென்
 தலைவன்
அங்கமாறைந்து வேள்வி நால்வேதம் அருங்கலை
 பயின்றெரி மூன்றும்
செங்கையால் வளர்க்குந் துளக்கமில் மனத்தோர்
 திருக்கண்ணங்குடியுணின்றானே.

என்றெடுத்துப் பாசுரங்கள் பாடி, அப்பெருமானின் திருவருள் பெற்று ஆவணின்றும் வெளிப்போந்து இதோ "செந்தோருக்கன் குடபாற்றிசை சென்று சேர்ந்தான், காரிருள் எங்கும் பரந்து நிறைந்தது இனி நாம் தாமதியாது கழனியிற் புதைத்து வைத்துள்ள பொற்சிலையை யெடுத்துக்கொண்டு திருவரங்கம் நோக்கி நடவாநிற்போம் எனப்போய்க் கழனியிற் புதைத்து வைத்திருந்த சுவர்ணவிக்கிரஹத்தை எடுத்துக்கொண்டு பொழுது விடிவதற்கு முன்னர் திருவரங்க நகர் போய்ச்சேர்ந்தனர். பின்பு திருவாலிதிருநகரிற்கு

* பெரிய திருமொழி.

செய்தியனுப்பி குமுதவல்லிராணியார் மந்திரி முதலானோரை வரவழைத்து திருவரங்கத்தே பரகால விலாசம் என்று ஓர் திருமாளிகையமைத்து அதனிடமாக யாவரையும் வசித்திருக்கச்செய்து சிலரை திருவாரூரிற் கனுப்பி சோழபூபனால் திருப்பணி நடத்தப்பெற்று வரும் கமலாலயமென்னும் தடாகமானது ஊற்றுக்கண் ஜலப்பெருக்காற் படிக்கட்டுகள் கட்டமுடியாமல் நின்றே கிடந்துபோனதைக் கட்டிமுடித்துக் தருவதாய் ஒப்புக்கொண்டு சீன நாட்டினின்றும் தெரிந்து வந்த தந்திரத்தை அவர்கட்குத் தெரிவித்து அதன்படி புரிந்து அதனாற் கிடைத்த விசேஷ திரவியத்தைப் பெற்று வரச்செய்தும் மற்றுஞ் சிலரையனுப்பி பொருள் வைத்த சேரியில் திரவியத்தைப் புதைத்து வைத்து வந்த இடத்தை தெரிவித்து அதனை எடுத்துவரச்செய்தும் திருவரங்கம் பெரியகோயிலின் திருமதில் விமானம் கோபுர முதலியவற்றை ஜீர்ணோத்தாரணம் புரிவதற்காரம்பித்து நடத்திப்போதருங்காற் பொக்கிஷத்திலுள்ள பொருள்கள் யாவும் செலவாகிவிட இனிப் புத்த விக்கிரகத்தை உருக்கவேண்டுவது தான் என்று அவ் விக்கிரகம் வைத்துப் பூட்டியிருந்த ஓர் அறையினைத் திறந்து எடுத்து வரும்படி ஆக்ஞாபிக்க அப்படியே சிலர் சென்று அவ் விக்கிரகத்தைத் தூக்கிவரப்போக அது அவர்கள் கரத்திற் பிடிபடாமல் சுற்றிச்சுற்றி யோட்டமெடுக்க அதனை யவர்கள் நமது மங்கையர்கோமானுக் கறிவிக்க இருவரும் அதனை அபரிசுத்தம் புரியச்செய்ய உடனே அவ்விக்கிரகம் தனது சக்தி குன்றி,

“ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ
பூயத்தான் மிக்கதொரு பூதத்தாலாகாதோ

தேயத்தேபித்தளை நற் செம்புகளாலாகாதோ
மாயப்பொன் வேண்டுமோ மதித்தென்னை
பண்ணுகைக்கே"

என்று புலம்பிக்கொண்டு ஒரு சார் விழுந்துவிட்டது பின்பு அவர்கள் அவ் விக்கிரகத்தை யுருக்கி அந்தத் தங்கத்தினை விலையாக்கி பெற்ற பொருளால் ராய கோபுர மோகனக்கல்லைப் பஞ்சப்பொதிகளை யதேஷ்டமாய்க் கொண்டுவரச் செய்து அவற்றினுதவியால் மோகனக்கல்லை நிறுத்தி நான்காவது திருமதிட்கு அஸ்திபாரமிடப் பூமியைத் தோண்டுகையில் அவணின்று பூமிக்குள் யோகத்திலிருந்த அரிய தபோதனரொருவர் திடுக்கிட்டு தமது யோகங் கலைந்து வெளிப்படுவாராயினர்,

பரகாலர் இது கண்டு மிகவும் திகிலடைந்து அந்தவரைப் பணிந்து விபரம் வினவியறிதல்.

பரகாலர்:—ஆ! ஆ!! ஜெகதீசா * "கலையேபழுகித் துரோபதைக்குக் - கலையேவழங்கி மிதிலைவழிக் கலையே யுருவாக் கண்டுபிறங்-கலையேகுடையா வெடுத்துநின்ற" ஏ கருணாநிதி! உன்னுடைய லீலாவிநோதந்தானென்ன. உலகில் ஒருவன் சில நாட்கூட ஆகார முதலியன இல்லாமலிருப்பதே துர்லபம் அதனினும் எவ்வளவோ நீண்டகாலம் எவ்வித உணவும் உட்கொள்ளாமல் பூமிக்குள்ளிருந்துங்கூட சிறிதும் சரீரம் வாட்டமில்லாமலும் காந்தி குறையாமலும் அரோக திடகாத்திரராய் இதோ ஒரு மகாத்மாவானவர் நாம் வெட்டிய பூமிக்குள்ளிருந்து வெளிவந்துள்ளார். ஏ சர்வ லோக சரண்யா! இது உன் அற்புத நாமோச்சாரண அசஞ்சல பக்தியால் விளை

---

* சமுத்திரவிலாசம்.

ந்த விளைவன்றோ? ஆகா இவர் நாம் செய்துவரும் பகவத்கைங்கர்யத்தை நன்கு பிரகாசிக்கச் செய்வதற்காக இவ்விடத்து தவமிருந்தனரோ? உண்மை தெரியவில்லையாயினும் நாம் இவர் திருவடிக்கண் சரண்புகுந்து பாபரகிதனுவோம். அகோ யோகீஸ்வர! தீனன் நமஸ்கரிக்கின்றேன், மாதவத் தோங்கலாகுந் தேவரீர் இப்பூமியின்கீழ் தவத்திருக்கக் காரணம் யாதோ? தெரிவித்தருளல் வேண்டும்.

யோகீஸ்வரர்:—அடிகேள்! அடியேன் பற்பல திவ்ய தேசங்களையும் சேவித்துக்கொண்டு இப்பூலோக வைகுண்டத்தை யடைந்து சுவாமிகள் தரிசனத்திற்காகவே இங்ஙனமிருந்து தேவரீரையே தியானித்துக்கொண்டு யோகத்தமர்ந்து அதன்படி இன்று திவ்ய சேவை லபிக்கப்பெற்று கிருதார்த்தனுகினேன் தேவரா.

பரகாலர்:—மாதவசீலரே! தாம் இமவான் நிலத்தில் வீற்றிருந் தருளும் ஸ்ரீ - நரசிம்ம மூர்த்தியின் அனந்த கல்யாண குணங்களை நன்கறிவீரோ? பல தேயங்கள் சேவித்துப் போந்தீரே, சிறிதுசெப்பியருள்க.

யோகீஸ்வரர்:—பெரியீர்! தாஸ்யன் அப்பதிசென்றதுமில்லை அப்பரமன் கீர்த்தியை அறிந்தவனுமல்லேன், சுவாமிகள் தான் அருளிச்செய்யவேண்டும்.

பரகாலர்:—தவசிரேட்டரே! ஆங்கண் அடியவர்கள் சென்று அப்பெருமானைத் திருவடி தொழுவரேல் அப் பரமேஸ்வரன் அவர்கள்கூட வார்த்தையாடி விரும்பியவற்றை யளித்தருளுவன்; இது தான் அங்குள்ளவிசேஷம்

யோகீஸர்:—ஐயன்மீர்! தேவர் தெரிவித் தருளிய வாறு தமியேனென் சென்று அம்மூர்த்தியை தரிசித் தால் எளியேனுடன் அப்பகவான் பேசுவாரா?

பரகாலர்:—அவ்வண்ணமே பேசியருளுவர்; நான் கூறியபடி உம்மோடு அக்கருணையங்கடல் உரையாடா விடில் பொய்யாலுண்டாகும் பாபத்திற்கு நான் பாத் திரனாகிறேன்.

யோகீஸர்:—சுவாமிந்! அடியேனுக்கு அங்ஙனம் செல்ல விடை தந்தருளவேண்டும், இன்று சென்று வருகின்றேன், நமஸ்காரம்.

யோகீஸ்வரரும் ஹிமோத்கிரிக்கு செல்லுவாராயினர்.

பரகாலர் தெரிவித்தபடியே யோகீஸரும் சென்று ஹிமோத்கிரியில் ஸ்ரீ-நரசிம்மமூர்த்தியைக்கண்டு சேவி த்து நிற்க, அந்நரசிம்மமூர்த்தியும் அடியவருடன் வார்த்தையாடி யருளி விரும்பிய வண்ணம் அந்தமில் பேரின்ப வீடு அளித்தருளினர். பரகாலரும் அவர் போயருளியபின் நான்காந் திருமதிளைக் கட்டி முடித் துக்கொண்டு ஐந்தாந் திருமதிளை சிற்பசாஸ்திர முறைப் படி நிருமிப்பதற்காக அளந்த நூலானது தொண்ட ரடிப் பொடிகள் திருமடத்தின்மேற் சேர அதனை யறிந்த சிற்பிகள் ஆழ்வாரிடம் தெரிவித்து நிற்க பர காலரும் மிகவும் துணுக்குற்று அத்திரு மாளிகையை விட்டு விலக்கி அத்திருமதிளை அழகுபெற அமைத் தருளினர்; இவ்விஷயத்தைத் திருமாலை கைங்கர்யம் புரிந்துகொண்டிருந்த தொண்டரடிப்பொடி ஆழ்வார் தெரிந்து அதிசயித்து இவரின் திருவுளப்பாங்கினைப் பன்முறையும் வியந்துகொண்டாடியும் தமது புஷ்ப

கைங்கர்யத்திற்கு உபகரணமான ஓர் பொற்கருவிக்கு அருள்மாரி யென்று பெயரிட்டு வழங்கி வருவாராயினார். பின்னர் திருமங்கை மன்னனும் திருக்கொட்டாரம் இந்து களஞ்சியம் முதலியவைகளைத் திருப்பணி புரிகையில், பொருளிற்கு முட்டுப்பாடெய்தி சிந்தனை செய்காலையில், காவிரிப்பூம் பட்டினத்தில் இரத்தினங்கள் ஏற்றிவந்த கப்பலொன்று மார்க்கத்திலடித்த புயற்காற்றால் பாய்மரம் முதலியன முறிபட்டு திசை தப்பி வந்தொதுங்கிக் கிடக்கிற செய்தி ஒற்றர்களால் தெரிந்து, அங்கு தனது பரிஜனங்களுடன் சென்று, அந்நாவாயிலுள்ள யாவத் பொருள்களையும் எடுத்து சேனைவீரர் வசம் அரங்கநகரிற் கனுப்பி வைத்துத் தாம் மாத்திரம் ஒன்றியாய் அப்புரியின் ஓர் வீதிவழியாய் வருகையில், அவண் ஒரு கிரகத்தினின்று ஓர் வைசிய மங்கையானவள் தனது கரத்தினிடமாகப் பொற்கிண்ணங் கொண்டு ஏதோ ஓர் காரியார்த்தமாய் வீதியில் வர, அதனைக்கண்ட இவர் பொருக்கெனச் சென்று அக்கிண்ணத்தை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு ஓடும்போது, அந்நங்கையும் அலறிக்கொண்டு ஆ கிருஷ்ணா! உன் திருவடிக்கே அபயம் என்று ஓலமிட்டு வீட்டிற்குள் விரைந்துசெல்ல, அதுகண்டு பரகாலரும் ஆகா! நாம் என் செய்தோம் பிரபந்நோத்தமியென்றறியாமலன்றோ பெரிதும் அபசாரப்படலானோம் எனத்திரும்பி வந்து அக்கிண்ணத்தை அவ்வீட்டின் கதவின் கீழ் வைத்துவிட்டு அங்கோர் புறத்துப் பதிவிருந்து யாதாகுமோ வென்று பயந்து நிற்க, வீட்டினுட்சென்ற பெண்ணரசியாரும் தனது நாயகன்பாற் போய் நின்று கண்ணுங்கண்ணீருமாய் ஏ பிராணபதி!

என் செய்கேன்! அடியாள் பொற்கிண்ணக் கையளாய் வாசலில் போகாநிற்கையில் யாரோ ஓர் கள்வன் உடன் வந்து கிண்ணத்தைப் பறித்துக்கொண்டோடிவிட்டனன் என்று பிரலாபித்தாள். அது கேட்ட அவள் பர்த்தாவும், மிகவும் அகமகிழ்ந்தவராய் அடிசுந்தரி! இன்று தான் நமது குலமும் கோத்திரமும் உய்ந்தன காணுய்! அடீ ப்ரியே! உன்னுடைய பாக்கியமே பாக்கியம்! மகா உத்தமியாகிய நின்னைப் பத்தினியாகப் பெற்ற ஓர் நற்றவத்தால் மிகக்கொடிய பாபிஷ்டனுகிய எனது பொற்பாத்திரமும் சற்பாத்திரத்திற்போய்ச் சேர்ந்தன; ஆனதால் கண்மணி! எனது சமீபத்தில் வந்து ஓர் முத்தந் தருவாய், என்று அன்பாய் அணைத்துத் தழுவிநிற்க, அந் நங்கையும் ஒன்றுந் தோன்ருதவளாய் பிரமித்து ஆ! என்னின்னுயிர்க்காதல! தாம் கிண்ணம் போனதையெண்ணி சிறிதும் மனங்கரையாது, வரம்பிகந்த மகிழ்ச்சி தமியாளைத் தழுவிப்புகழுங்காரணம்யாதோ சிறிது புகன்றருளல் வேண்டும் என வேண்டிநிற்க, அவ்வணி கோத்தமரும் அடி மாசிலாமணியே! மங்கை நாட்டடிகள் என்னும் மாதவத்தோங்கல் ஒருவர் தமது பெருஞ் செல்வமனைத்தையும் அடியவர்கட் கன்னமீதலாதிய சற்கருமங்களில் விநியோகித்துவிட்டு திருவரங்கம் பெரியகோயிற் றிருப்பணியை நடத்தவாரம்பித்து தம் கையிற் சிறிதும் பொருளின்றி இனியெத்தொழிலைச்செய்யினும் பொருளீட்டி தாங்கொண்ட விரதத்தை முற்றுவித்தருள வெண்ணங்கொண்டு, ஆங்காங்கு சென்று களவாடி போதருவாராகி நேற்றுகூட நமது நகரில் திசைதப்பி வந்தொதுங்கிக்கிடந்த ஓர் மரக்கலத்திலுள்ள நவரத்னமாதிய யாவற்றையுங்கொள்

ளையாடிப் போனார்களன்றோ! அப் பரகாலமூர்த்திகளே இவண் வந்து நினதுகரத்திலிருந்த கிண்ணத்தைப் பறித்தோடி யருளினரேயன்றி பிறிதொருவ ரிவ்வளவு துணிகரமாய் நமது பொருளை அபகரித்தோடார். ஆனதால் ஏ! சுமுகி! வருவாய்! கிரகத்தின் வாசலிற் சென்றுகாண்போம். என்றுசொல்லிக்கொண்டு இருவருமாக வந்துபார்க்கையில், தெருவாசற்கதவின் கீழ் அப்பொற்கிண்ணம் இருக்கக்கண்டு பெரிதும் அச்சமுற்று துக்காக்கிராந்தராய் பத்தினியைக்கடிந்து, அடி துஷ்டை! நீயாது கடுஞ்சொற்கூறி அந்நீலமேனியனை கிண்ணங்கொடு போகா வண்ணம் புரிந்து நின்றனை? அடி காதகி! இதோ பார் உன்னை என்ன பாடுபடுத்துகிறேன், என்று கரத்தையோங்கி அப் பெண்ணிளங் கொடியை ஹிம்சிக்கப் புக, அதுகண்டு அணித்தில் ஒளிந்திருந்த நம் மங்கையர் கோமானும் சடக்கென ஓடி வந்து அவ் வணிகோத்தமரின் இரு கரத்தையும் பிடித்துக்கொண்டு பிரபந்நோத்தமரே! இக் கிரகம் மகா பக்தசிரோன்மணியின் திருமாளிகை யென்றும், இவ் வம்மையாரை வைணவ குலோத்தமி யென்றும், அறியாது நும்மிருவர் திருவடிமாட்டும் இப்பதிதன் புரிந்த அபசாரத்தை மன்னித்தருளும்படி உங்களிருவரையும் பன்முறை நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறேனென்று அவர்களிடம் மன்றாடிக் கேட்டு விடை பெற்று அவணின்றும் புறப்பட்டு திருக்கண்ணபுரம், நந்திபுரவிண்ணகரம், திருவழுந்தூர், திருச்சேறை, சிறுபுலியூர் முதலிய திருப்பதிகளைச்சேவித்துப் பதிகம்பாடிக்கொண்டு திருக்கண்ணமங்கைபுக்கி அத்திருப்பதி யெம்பெருமானைப் பதிகம்பாடித் துதிக்கையில்,

திருநின்றவூர் பத்தராவிப் பெருமானும் தாம் முன்பு ஒருபாடல் பெற்றது போதாதென்று மீண்டும் என்னைப் பெற்ற அன்னையாரால் ஞாபக மூட்டப்பெற்று இவ் வாழ்வார் எதிரில் வந்து காக்ஷியளிக்க, அது கண்டு * "புத்தவிகாரம் புகுந்துருவங் கைவாங்கி அத்தன் திருப்பணிக்கே யாக்கின" நம் பரகாலரும் நின்றவூர் "நின்ற நித்திலத்தொத்தினை - கண்ணமங்கையுட்கண்டு கொண்டேனே" என்று அப் பெருமானையும் சேர்த்துத் துதிப்பாராயினர். அப்பால † "சந்தனப்பொதியச் செந்தமிழ்முனியும் - சௌந்தர பாண்டியனென்னுந் தமிழ் நாடனும் - சங்கப்புலவருந் தழைத்தினிதோங்கும் மங்கலப்பாண்டிவளநாடு" சென்று, திருக்கூடல், திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருமோகூர், திருப்புல்லாணி, திருக்குறுங்குடி, திருக்குருகூர் முதலிய பல திவ்யதேசங்களையும் சென்று வணங்கி பகவானின் அர்ச்சாவதாரங்களோடு விபவாவதாரங்களையும் நினைந்து நினைந்து உள்ளங்கரைந்து பல பதிகங்கள் பாடிக்கொண்டு மீண்டும் திருவரங்கத்தை யடைந்து மற்றுஞ் செய்யவேண்டியதாயிருந்த திருவரங்கம் பெரிய கோயிற் றிருப்பணிகளை யெல்லாம் நன்கு செய்து முடித்துக்கொண்டு நன்கை. குமுதவல்லியாருடன் பகவத் கைங்கர்ய பராய் விளங்கி வருவாராயினர்.

---

* தில்லைவளாகவுலா. † அகத்தியம்.

## ஒன்பதாவது அத்யாயம்.

* மாலென்பதாம் பின்னைமால் வரையான் மால் விசும்பின்
மாலின்புயல் காத்த மால் வண்ணன் —மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர் கடைந்தான்
பேரோத மேனியான் பேர்.

இடம்—**திருவரங்கம்.** **காலம்**—நண்பகல்.

பாத்திரங்கள்—**பரகாலர், அரங்கநாதன்.**

பரகாலர்:—நாமோ அநேக திவ்ய தேசங்களை சேவித்துக் கொண்டு போதந்து இவ்வரங்கமாநகரம் அடைந்தோமாயினும் இன்னும் "முற்றப்புவனமெல்லாமுண்ட முகில்வண்ணன் கற்றைத்துழாய் சேர்கழலிணையில் நமக்குள்ள பேரன்பு அடங்கின பாடில்லை. ஆனதால் வடமொழியினிடமாகவுள்ள இருக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுக்கும் சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கல்பம் என்னும் ஆறு அங்கம் இருப்பதுபோல நமது சடகோப மகாமுனிவர் அருளிச்செய்த தமிழ் மறை நான்கிற்கும் முறையே ஆறங்கங் கூற வெண்ணி பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறியதிருமடல் பெரியதிருமடல் ஆகிய ஷட்பிரபந்தங்களையும் பாடி அங்கமாக அமைத்தோம். என்றாலும் திரும்பவும் திருநெடுந் தாண்டகத்தை நம்பெருமாள் திருமுன்பே சென்று திருமுகோல்லாசத்திற்கு உகப்பாகும்படி தேவகானத்தில் பாடித் துதிப்போம். ஏ அழகிய மணவாளா! கேட்டருள்வாயாக.

---

* பெருந்தேவனார் பாரதம்.

மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியா யிறப்பதற்கே யெண்ணா தெண்ணும்
பொன்னுருவாய் மணியுருவிற் பூதமைந்தாய்
புனலுருவா யனலுருவிற் றிகழுஞ்சோதி
தன்னுருவா யென்னுருவில் நின்ற வெந்தை
தளிர்புரையுந் திருவடியென் தலைமேலவே.

என்று பரகாலர் பாடல்கள் பல பாடி நின்ற வளவில்
அரங்கநாதன் பேரா வுகந்தருளி அவருடன்
வார்த்தையாடலாயினர்.

அரங்கேசன்:—ஏ ஆலிநாட! தாம் தேவ கானத்திலே பாடிய பாடல்களைக் கேட்டு திருவுளமுவந்து அத்யந்தம் மகிழ்ச்சியடைந்தோம். * "ஆழ்வீர் நீர் இப்போது ஒரு வார்த்தை சொல்லுவாரைப் போல யிராநின்றீர். நாம் உமக்குச் செய்யவேண்டுவதுண்டாகில் சொல்லுவீராக.

பரகாலர்:—ஏ பரஞ்சோதி! நாயந்தே! நாயந்தே!! நித்யசம்சாரியாய்ப் போந்த அடியேனைத் தேவரீர் இப்படி விஷயீகரித்தபின்பு ஒரு குறையுண்டோ? ஆகிலும் ஒரு விண்ணப்பமுண்டு. அது யாதெனில் தேவரீர் லோகாநுக்கிரஹார்த்தமாகச் செய்தருளின அர்ச்சாவதாரங்களில் பிரதானமான இந்த ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திலே மார்கழிமாதம் சுக்ல பக்ஷத்தில் ஏகாதசியினன்று அத்யயன உத்ஸவம் கண்டருளும்போது பூர்வமே மதுரகவியாழ்வாரால் நடத்துவித்ததுபோல சடகோபன் சொல்லான திரு

* கலியனருள்பாடு.

வாய்மொழியையும் வேதபாராயணத்தோடு கேட்டருளி இதற்கு வேதசாம்யமும் அநுக்கிரகித்தருளல் வேண்டும், இது தான் அடியேனது பிரார்த்தனையாகும்.

அரங்கேசன்:—ஆழ்வீர்! அப்படியே வேதசாம்யம் அநுக்கிரகித்தோம் ஹே முதலிகளே! அத்யயனோத்ஸவத்திலே வேதபாராயணத்தோடு திருவாய்மொழியையும் பாராயணம் பண்ணிப்போருவீர்களாக. என்று ஆக்ஞாபித்தருளி "கலியன் நம்மைத் தேவகானத்தாலே மிகவும் பாடுகையாலே அவர் மிடறு நொந்தது ஆனபின்பு நாமின்று தரித்த சிஷ்டமான எண்ணெய்க்காப்பை அவர் திருமிடற்றிலே தடவுங்கோளென்று அருளப்பாடு பிரசாதிக்கப் பின்பு பெருமாள் பரிகரமும் அவர் திருமிடற்றிலே எண்ணெய்க்காப்பைச் சாத்த அவரும் கிருதார்த்தராய் மடமேற எழுந்தருளினபின்பு திருநகரியிலும் ஆழ்வார் அத்யயனோத்ஸவத்திற்கு கோவிலேற வெழுந்தருளும்படிக்குப் பெரிய பெருமாள் திருமுகப்பட்டயமும் எழுதி சந்நிதிப்பேனையும் திருநகரிக்கு அனுப்பிவைக்க சடகோபரும் திருமுகப்பட்டயத்தையும் சிரசாய்வகித்து அத்யயனோத்ஸவத்திற்கு உதவும்படி கோயிலேற எழுந்தருளினபின்பு திருமங்கைமன்னனும் ஆழ்வாரை எதிர்கொண்டு திருவடி தொழுது சந்நிதியிலே எழுந்தருளப் பண்ணிக் கடாக்ஷித் தருளித் தமது திருவுள்ளத்தின் உகப்பாலே நம்மாழ்வார் என்று திருநாமம்சாத்தி, திருமாலை * ஸ்ரீ-சடகோபன், திருப்பரிவட்டம் முதலான

* இதுமுதலாகத்தான் பெருமாளுடைய திருவடிநிலைக்கு ஸ்ரீ-சடகோபன் என்னும் பெயர் உண்டாகியது.

வரிசைகளைப் பிரசாதிக்கத் திருமங்கைமன்னனும் மறுநாள் ஏகாதசி துடங்கிப் பத்துநாளாக பிராதக்காலத்திலே கீர்வாண வேதபாராயணமும் இராத்திரிகாலத்திலே திருவாய்மொழி அநுசந்தானமுமாக காலவிபாகம் பண்ணி வேதங்களை அநுசந்தித்துச் சாற்றும்போது ஆழ்வார் திருமுன்பு திருவாய்மொழியைத் தலைக்கட்டின வளவிலே எம்பெருமான் திருவடிகளை சேர்ந்தபடிகளை அநுகரித்து ஆழ்வாரைப் பெருமாள் திருவடிகளிலே சேரும்படி பண்ணுவித்து ஆழ்வார் பிரதி சம்வத்ஸரமும் அத்யயனோத்ஸவத்திற்கு எழுந்தருளி திருவாய்மொழி அநுஸந்தானம் நடக்கும்படி பண்ணுவித்து திருமாலை, ஸ்ரீ-சடகோபன் முதலான வரிசைகளை யெல்லாம் பெரியபெருமாள் பிரசாதித்து அருளப்படும் பிரசாதித்தருளும்படி கட்டளை யிடுவிக்க பின்பு ஆழ்வாரும் கிருதார்த்தராய் திருநகரியேறவெழுந்தருளி பிரதிசம்வத்ஸரந்தோறும் கோயிலுக்கு எழுந்தருளாநின்று அத்யயனோத்ஸவத்தை பரிபாலனம் பண்ணிக்கொண்டுவர,, நம்பாகாலரும் திருவரங்கத்தே" கலியப்தம் 455க்குமேல் தசாவதாரக் கோயிலைக்கட்டிப் பிரதிஷ்டிப்பித்து தம்மையும் விக்கிரகமாக மூலோத்ஸவ விக்ரஹங்களை யேறி யருளப்பண்ணி பிரதிஷ்டிப்பித்து அதற்கு வடபுறமாகவும் வாள் கடை தூரம் நிலங்கொண்டு ஸ்ரீ பண்டாரத்திலே த்ரவியத்தை முதலிட்டு "பாடியவாளன்துறை" என்று அதற்கு திருநாமஞ் சாத்தி அவ்விடத்திலே, தகனஞ் செய்யப்பெறுபவர்களுக்கு பரமப்தம் உண்டாகத் தக்கதாக பெருமாள் சந்நிதியிலே வரம் பெற்றருளி வர்த்திப்பாராயினர். பின்னர் ஓர் நாள் மங்கையர்கோமான் மஹேந்திரகி

ரிக்கு சமீபமாய் சித்தாஸ்ரமமென்று பிரசித்தமாயுள்ள திருக்குறுங் குடிக்குச்சென்று அங்கு வசிக்கத் திருவுளங்கொண்டு ஸ்ரீரங்கநாதன் திருமுன்பே சென்று "கோதை நறுமலர் மங்கைமார்பா குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்" என்று விண்ணப்பித்து அவ்வாறே அநுக்கிரகிக்கப் பெற்று திருக்குறுங்குடிக்குச் செல்ல ஆயத்தமாயிருந்தனர். இஃது இப்படி இருக்க நமது ஆலிநாடர் திருமடப்பள்ளி, திருநடமாளிகை, ஆலிநாடன் திருமண்டபம், திருக்கொட்டாரம், ஐந்து களஞ்சியம், மற்ற சங்குசக்ர சின்னங்கள், திருமண் குறிகள், இருபத்தொரு திருக்கோபுரங்கள்

"மாடமாளிகை சூழ்திரு வீதியும் மன்னு சேர்
திரு விக்ரமன் வீதியும்
ஆடல் மாறன களங்கன் வீதியும் ஆலிநாடன்
அமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியும் குலவிராச
மகேந்திரன் வீதியும்
தேடரிய தர்மவர்மா வீதியும் தென்னரங்கர்தந்
திருவாவரணமே"

இவைகளை யெல்லாம் புதுப்பித்தருளியபோது ஓர் சமயம் கைங்கர்யபராளாய் வேலைசெய்துகொண்டிருந்த சிற்பி முதலானவர்களைப்பார்த்து ஏ! பகவத் கைங்கர்ய பரர்களே! நீங்கள் செய்யும் வேலைக்குப் பிரதி பலனாய் பசும்பொன் வேண்டுமோ அல்லது பரமபதம் வேண்டுமோ என்று கேட்டருளுகையில் அவர்களிலனேகர் பசும்பொன்னே வேண்டுமென்று அன்றாடம் கூலி பெற்றுச் செல்வாராயினர் சிலரோ எம்மாண்டவனே! அடியோங்கட்கு பரமபதந்தான் வேண்டுமென்று மிக

வும் வேண்டிக்கொண்டு யாவருக்கும் படியாகக் கொடுக்கும் ஸ்ரீரங்கநாதன் நைவேதனங் கண்டருளிய திவ்ய சித்திரான்னங்களையே யுண்டு வந்து மற்றொன்றினையும் விரும்பிப்பெறாது அதிக பயபக்தியுடன் திருப்பணிகளைச் செய்துகொண்டுவந்தவர்களான சிலர்கள் நமது பரகாலப்பிரான் திருக்குறுங்குடியேற எழுந்தருளப் போகிறாரென்ற செய்தி கேட்கப்பெற்றதும் ஓடோடியும் வந்து ஆழ்வார் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் தண்டம் சமர்ப்பித்து ஏ கருணையங்கடலே! ஆதியில் தேவர் திருவாய்மலர்ந்தருளியபடியே அடியோங்களுக்கு "போம் வழியைத் தருமென்னும் இன்பமெல்லாம் பொசித்துவழி போயமுத விரசையாற்றில்நாம்மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை நண்ணி நலந்திகழு மேனிதனைப்பெற்று தாமமரர் வந்தெதிர் கொண்டலங்கரித்து சற்கரிப்ப மாமணிமண்டபத்துட் சென்று மாமலராள் கோன்மடியில் வைத்துகக்கும் வாழ்வு" தந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்து நிற்க. நம் ஆலிநாடரும் அவ்வண்ணமே தருகிறோமென்று அவ்வனைவரையும் ஓர் ஓடத்தில் ஏற்றி வடதிருக்காவிரியில் போய்க்கொண்டிருந்த விசேஷ ஜலப்பிரவாகத்தின் மத்தியில் கொண்டு போகாநிற்க ஆங்கண் தெளிவிசும்பு திருநாட்டினின்று ஓர் திவ்விய விமானம் போதரக்கண்டு அத்யாச்சர்யப்பட்டு "இந்த வுடற்சிறை விட்டெப்பொழுது யாமேகி அந்தமில் பேரின்பத்துள்ளாகுவோ" மென்று எதிர்பார்த்திருந்த யாவர்களும் உடனே அவ்விமானத்தில் ஆரோகணித்து பரமபதத்திற்கு சென்றருள பரகாலரும் ஓடத்தைக் கவிழ்த்துவிட்டு மற்றோர் மிதவை பற்றி திரும்பிவரலாயி

னர். பின்னர் நமது மங்கையர் கோமான் கரையினிடமாக வந்து கூடிநின்ற மற்றையோர்களை யெல்லாம் ஸ்ரீ-அழகியமணவாளன் திருச்சந்நிதிக்கு அழைத்து வந்து நீங்கள் யாவரும் ஓடத்திற் போனவர்களின் பெயர்களைச்சொல்லி இத்திருவரங்கத் திருமுற்றத்தே நின்று கூப்பிடுங்களென அவர்கள் அவ்வாறே அழைத்தவுடன் அவர்களெல்லோரும் ஒவ்வொருவராய் எதிரில் வந்து சந்நிதிக்குள் சென்று மறையாநிற்க இது பலரும் கண்டு அத்யாச்சர்யமடைந்து "தொண்டர்தம் பெருமைசொல்லவும் அரிதே" என்று திருமங்கை மன்னனின் திருப்புகழ் பலதும் பாடியாடித் துதித்துப் போவார்களாயினர்.

# பத்தாவது அத்யாயம்.

* ஆதித் தனிக்கோல மானா னடியவர்க்காய்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்-வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யென வழைப்ப
வென்னென்றா னெங்கட் கிறை.

இடம்—திருவரங்கம். காலம்—வெயின்மாலை.

பாத்திரங்கள்—பரகாலர், குமுதவல்லி,

பரகாலர்:—பிரியசுந்தரி! "திருகிநின் றஞ்சிறைய சேவலோடொரு - குருகுறங்குங் கரையில் வாளைதாவிய - திரையலம் புந்துறையின் மாடவீதியில் - அணிமேவு-தெருவிலுஞ் சந்திரிகை நிலாபொலாமணி-யுமிழ் தருஞ்சங்கினை முலாவ வேதவழ் - திருவரங்கம் பெரிய கோயில் மேவிய" ஸ்ரீ-அழகியமணவாளன் தமியேற்கு ஆக்ஞாபித்தருளியவாறு ஆலயத்தினுட் கிலமாயிருந்த திருமதிள் கோபுரம் தொடக்கமான யாவற்றையும் ஜீர்ணோத்தாரணம் புரிந்து

† காவேரி விரஜாஸேயம் வைகுண்டம் ரங்கமந்த்ரம்
பரவாசுதேவோரங்கேசம் ப்ரத்யக்ஷம் பரமபதம்
விமாநம் ப்ரணவாகாரம் வேதஸ்ருங்கம் மகாத்புதம்
ஸ்ரீரங்கஸாயீபகவாந் ப்ரணவார்த்தப்ரகாஸகம்.

என்றவாறு இதுநாள் பரியந்தம் ஸ்ரீரங்கக்ஷேத்திரவாசஞ் செய்துகொண்டிருந்தோம் அடிரமணீ! நாம் திவ்யதேசயாத்திரை புரிந்து போதருங் காலத்தில் திருக்குறுங்குடியிலெழுந்தருளியிருந்த நம்பிஎம்பிரானைச் சேவித்தபோது அப்பரம தயாளன் "நிறைந்த

* நளவெண்பா. † கோயிலொழுகு.

சோதிவெள்ளஞ்சூழ்ந்த நீண்ட பொன்மேனியொடும்-நிறைந்ததென்னுள்ளே நின்றொழிந்தான்" ஆனதால் அழகியமணவாளன் திருமுன்பே சென்று "குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்" என்று விண்ணப்பித்து அவ்விதமே செல்ல விடைபெற்று வந்துளேனாதால் காந்தி! நீயும் புறப்பட்டு வருவாய் மந்திரி முதலானோரும் வருகின்றார்கள் வா போகலாம்.

குமுதவல்லி:—பிராணகாந்தா! ஆக்ஞையின்படியே அடியாளும் வாநின்றேன் ஆனால் ஒருவிஷயம் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். அதன்படி செல்வதற்கு அநுக்கிரகித் தருளல்வேண்டும். அது யாதெனில்

* ஆனைநின்றேலமிட வோடிவந்ததுவும்
லோகமன்றோரடியி னுலளந்ததுவும்
ஆலமுண்டோனிரவு தீரநின்றதுவும்-விசயோன்முன்
ஆதியஞ்சோதிவடி வேபொலிந்ததுவும்
நாரதன் காணரிய மாய்கை கண்டதுவும்
ஆமையொன் றாயகில மேழ் சுமந்ததுவும்-உயர்வான
ஞானம்வந் தேதருவ னார் மொழிந்தபடி
தேவருந் தேடரிய பேறுதந்ததுவும்
ஞாலமுண்டாருயிரெலாமுமிழ்ந் ததுவும்-உமிழாயேல்
நானெனுந் தேவுமிலை யானதுந் தெரியில்
யாதுநின் பாதமல வேறுநம் பியுயர்
நாடிழுந் தேநரகில் வீழுமன் பதைகள் - அறிவேதே
ஞானதிண்டாடுசம ருடபெஞ் சவர்கள்
பாரதம் போர்செய் துரியோதனன் படைகள்
தாமுறிந்தோடவிஜ யாதிபன்ப்ரபலன்-எனுமேன்மை

* நூற்றெட்டுத் திருப்பதி திருப்புகழ்.

தானகன்றேப்ரமக பாலமுண்டிடவோர்
ஆழியொன்றேபொருது நீதிகண்டுதன
தாண்மையுண் டோவெனவோர் பாகனென் றிரதம்-
[விடுவோனே

மானசந் தோடபர னேசவுந் தரசை
யோகசம் போகதா னேபரம்பரம
மாலலங் காரமுகி லேவிரும்பி யெனை - யருள்வாயே

மாநிலம் பாவமற வீழ்தருந் திவ்ய
பாதகங்காசலம தேயரும் புதிரு
மாலிருஞ் சோலைமலை தாழநின் றுவளர்.

பெருமானைச் சென்று சேவித்துக்கொண்டு திருக்குறுங்குடிக்குச் செல்லவேண்டும் இதுதான் அடியாளின் பிரார்த்தனையாகும்.

பரகாலர்:—என்னின்னுயிர் நாயகி! நினது அபீஷ்டப்படியே "சந்தனப்பொழிலின் தாழ்சினை நீழல் தாழ்வரை மகளிர்கள் நாளும் - மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலைவணங்குதும்"! வாராய் செல்வோம். இவ்வாறு திருமங்கைமன்னன் குமுதவல்லியாருடன் பரிஜனங்கள் புடைசூழச் சென்று திருமாலிருஞ்சோலைமலை மாலலங்காரரையும், கூடலழகரையும் ஸ்ரீ - வில்லிபுத்தூர் வடபத்திரசாயியையும், பெரியாழ்வாரையும், திருப்பொருனை வடகரையில் அமர்ந்தருளிய ஸ்ரீ - வைகுண்ட நாதனையும், எம்மிடர் கடிவார், காசினிவேந்தர், அரவிந்தலோசனர், மாயக்கூத்தர் குழைக்காதர், வைத்தமாநிதி, விஜயாசனர் என்னும் எம்பெருமான் அர்ச்சாவதாரங்களை அவ்வவ்விடங்களில் சென்று சேவித்துக்கொண்டு திருக்குருகூரினை யடைந்தார்.

பரகாலர்:—அடி நாரியர்மணியே! நந்தாவிளக்கே! "குறுமுனிவன் முத்தமிழு மென்குறளுநங்கைச்-சிறு முனிவன் வாய்மொழியின் சேய்" என்று திருவள்ளுவரால் பெரிதுங் கொண்டாடப்பெற்ற ஸ்ரீ-சடகோபமகாமுனிவர் திருவவதாரம்புரிந்த திருக்குருகாபுரியைச் சேவிக்கப்பெற்றோம் அன்றியும் ஔவையார்

ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும்பெய்தமைத்த
செம்பொருளை யெம்மறைக்குஞ்சேட்பொருளைத்-தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியானிவ்வுலகின்
றாய் மொழியதென்பேன் றகைந்து ... ... என்றும்

சேய்மொழியோ தாய்மொழியோ செப்பிளிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாருமறையென்ப -- வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின்
சாய்மொழிக ளென்பேன் றகைந்து .... என்று இடைக்காடரும்

வாய்க்குங் குருகைத் திருவீதியெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபத மளித்தாயந்த நாயொடிந்தப்
பேய்க்குமிட மளித்தாற்பழுதோ பெருமான் மகுடஞ்
சாய்க்கும்படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கரசே.

என ஒரு யோகியாரும் இன்னும் பல ஆன்றோர்களும் பலவிதமாய் பாடித்துதிக்கும் பரமமூர்த்திகளான ஸ்ரீமத்-பராங்குசன் அமர்ந்து பக்தியோகம்பயிலும் * திந்திருணிவிருக்ஷமானது இதோ இத்திருக்கோயிலுட்டிகழ்வதைப் பாராய் அடி குயின்மொழிக்கோதாய்! இவ்வாழ்வார் ஒருவர்தானடி நூற்றெட்டுத்திருப்பதி யெம்பெருமானையும் இந்தத் திருப்புளியினடியி

* திந்திருணிவிருக்ஷம் - புளியமரம்.

லேயேயிருந்து சேவித்துப்பாடிப்பாராவும் பாக்கியம் பெற்றவர். அதனை மெய்ப்பிப்பானன்றோ இவண் நூற்றெட்டு திருப்பதி அர்ச்சாவதார மூர்த்திகளும் இவ்விருக்ஷத்தைச் சுற்றிலும் வீற்றிருக்கின்றார்கள். அடி இந்துமுகி! சேவித்தனையா?

குமுதவல்லி:—பிராணநாயகா! உலகில் இஷ்டசித்தியைப்பெற விரும்பிய எவரும் காசிமுதல் கன்னியா குமரிவரையில் உள்ள எத்தனையோ ஸ்தலங்கள் சென்று நீராடிச்சேவித்து வந்தவர்களையும் "கோடிதலங்கள் சென்றீரே குருகாபுரிக்குச் சென்றீரா?" என்று வினவுகிறார்களே இதுபற்றித்தானே! அன்றியும் சற்றுமுன் தேவர் தெரிவித்ததுபோல கல்வியிற் சிறந்த கம்பநாடரெனுங் காளமேகமும்

சொல்லென்கனோ முழுவேதச் சுருக்கென்கனோ வெவர்க்கும்
நெல்லென்கனோவுண்ணு நீரென்கனோ மறை நேர் நிறக்குங்
கல்லென்கனோ முதிர்ஞானக் கனியென்கனோ புகல
வல்லென்கனோ குருகூரெம்பிரான் சொன்ன மாலையையே.

என்று வகுளாபரணன் அருளிய திருவாய்மொழியெனுந்தேனை வாரியுண்டு திருவரங்கமெனும் வரையினிடமாக இராமாயணமெனும் அமிர்தத்தைப் பொழிந்தருளி யுலகை யுய்வித்தருளியது. அப்பெற்றியதான திருவாய்மொழியைச் சங்கிரகித்து அடியாளும் இதாபரிஜனங்களும் கேட்டுய்யுவண்ணம் ஒருவாறு திருவாய்மலர்ந்தருளவேண்டும் நாதா.

பரகாலர்:—கண்மணி! உன்னுடைய புத்தி சாதுர்யத்தை என்னென்று சொல்லுவேனடி "கேசவனையே செவிகள் கேட்க" என்பதொப்ப நீ நன்கு வினவினை;

அடி சுந்தரீ! சொல்கிறேன் கவனமாய்க் கேள் மற்ற பரிஜனங்களும் கேட்பீர்களாக.

* அத்திருவாய் மொழியின் முதற்பத்தால் (மலர் மகள் விரும்பு நமரும் பெறலடிகள்) என்றும் (மல ராள் மைந்தன்) என்றும் (திருமகளார் தனிக்கேள் வன்) என்றும் (திருவின் மணாளன் என்னுடைச் சூழலுளானே) என்றும் பூமகளார் தனிக்கேள்வன்) என்றும் (மைந்தனை மலராள் மணவாளனை) என்றும் (ஸ்ரீயப்பதித்துவம் ப்ரதி பாதிதமாயிற்று. 2-ஆம்பத் தால் (எம்பெருமான் நாரணற்கு) என்றும் எம்பிரா னெம்மான் நாராயணனாலே) என்றும் (நாரணன் முழு வேழுலகுக்கும் நாதன்) என்றும் நாராயணத்வம் ப்ரதி பாதிதமாயிற்று. 3-ஆம்பத்தால் (நாண்மலராமடித்தா மரை) என்றும் (அங்கதிரடியன்) என்றும் (அவன்பாத பங்கயம்) என்றும் (அன்றுதேர்கடவிய பெருமான் கழல்) என்றும் (மூவுலகுந் தொழுதேத்துஞ் சீரடி யான்) என்றும் நாராயணனுடைய சர்வலோக சரண்ய மான சரணாரவிந்தயுகளம் ப்ரதி பாதிதமாயிற்று. 4-ஆம் பத்தால் (இலங்கை நகரம் பெரியுய்த்தவர்) என்றும் (வல்வினை தீர்க்குங் கண்ணனை) என்றும் (தொல்வினை தீர) என்றும் (வெய்யநோய்கள் முழுதும் வியன்ஞாலத் துவீய) என்றும் (மேவிநின்று தொழுவார் வினைபோக) என்றும் (பிறந்துஞ் செத்தும் நின்றிடரும் பேதமை தீர்ந்தொழிந்தேன்) என்றும் (நோயே மூப்பு பிறப் பிணியே யென்றிவையொழிய) என்றும் (வேட்கை யெல்லாம் விடுத்து கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை) என்றும் (அஃதே யுய்யப்பெறுமாறு) என்றும் (உய்வு

* திருவாய் மொழி சாரசங்கிரகம்.

பாயம் மற்றின்மைதேறி) என்றும் அநிஷ்ட நிவர்த்திஷ்ட பிராப்தி காத்வ லக்ஷணமான ப்ராபகத்வம் ப்ரதிபாதிதமாயிற்று. 5-ஆம்பத்தால் (தமியேனுக்கருளாய்) என்றும் (ஆறெனக்கு நின் பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்) என்றும் (உன்னாலல்லால் யாவராலுங் குறை வேண்டேன்) என்றும் (கழல்களவையே சரணாகக் கொண்ட) என்றும் (நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் குருகூர்ச் சடகோபன்) என்றும் (நாடொறுமேக சிந்தையனாய்) என்றும் ப்ரார்த்தனா கர்ப்பவிஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாயிற்று. 6-ஆம் பத்தால் (திருமாமகளிருந்தாம் மலிந்திருந்து) என்றும் (அடிமை செய்வார் திருமாலுக்கு) என்றும் (ஒசிந்த வொண் மலராள் கொழுநன்) என்றும் (என் திருமார்பர்க்கு) என்றும் (கோலத்திருமாமகளோடுன்னை) என்றும் கைங்கர்ய ப்ராதனார்த்தமான நித்ய சம்பந்தம்ப்ரதிபாதிதமாயிற்று. 7-ஆம்பத்தால் (கன்னலே யமுதே) என்றும் (கொடியேன் பருகின்னமுதே) என்றும் (திருமாலின் சீரிறப்பெதிர்காலம் பருகினுமார்வனே) என்றும் (இவ்வேழுலகை யின்பம் பயக்க) என்றும் கைங்கர்ய ப்ரதிசம்பந்தியான ஈஸ்வரனுடைய நிரதிசய போக்யதை ப்ரதி பாதிதமாயிற்று. 8-ஆம்பத்தால் (அடியேனேன் பெரியவம்மான்) என்றும் (விண்ணவர்கோன் நங்கள் கோமானை) என்றும் (அமர்ந்த நாதனை) என்றும் (மூவுலகாளி) என்றும் நேற்பட்டநிறை மூவுலக்குக்கும் நாயகன்) என்றும் ஸர்வ ஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. 9-ஆம்பத்தால் (பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டுநின் கோயில் சீய்த்து) என்றும் (தொடர்ந்து குற்றேவல்

செய்து) என்றும் (கொடுவினையேனும்பிடிக்க) என்றும் (உறுவதிது வென்றுனக் காட்பட்டு) என்றும் ஆட்கொள்வானொத்து) என்றும் (நானும் மீளா வடிமை செய்யப்புகுந்தேன்) என்றும் நித்யகைங்கர்யம் ப்ரதி பாதிதமாயிற்று. 10-ஆம்பத்தால் (துயர்கெடுங்கடிது) என்றும் (கெடுமிடராயவெல்லாம்) என்றும் (ஏழுமையும் ஏதஞ்சாரா) என்றும் (தீருநோய் வினைகளெல்லாம்) என்றும் (இப்பிறப்பறுக்கும்) என்றும் (உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின் புறுதுமெம் பெண்மை யாற்றேம்) என்றும் (பிணியொன்றுஞ்சாராபிறவி கெடுத்தருளும்) என்றும் (பிறவித்துயர் கடிந்தோம்) என்றும் (அமரா வினைகள்) என்றும் (கெடுநாகம் புகலொழித்த) என்றும் (தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்) என்றும் (அந்தி தொழுஞ்சொல்லு) என்றும் (அவாவற்று வீடு பெற்ற) என்றும் கைங்கர்ய ப்ரதிபந்தக நிஸ்ஸேஷ நிபர்கணம் ப்ரதி பாதிதமாயிற்று. அடி! காமர்பூங்கொம்பே! இன்னும் அத்திராவிட வேதத்தின் வைபவமானது விரிக்கிற் பெருகுமானதால் இதுபோது பொலிந்துநின்ற பிரானையும் ஸ்ரீ ஆதிநாயகித் தாயாரையும் ஸ்ரீ வகுளாபரணனையும் சேவித்துக்கொண்டு திருக்குறுங்குடிக்கு நாம் உத்தேசித்தபடி செல்லா நிற்போம்.

**திருமங்கைமன்னன், குமுதவல்லிராணியார், மந்திரி முதலானவர்களுடன் திருக்குறுங்குடியை யடைதல்**

குமுதவல்லி:—மனோகரா! இதோ மலைச்சாரலின் அருகில் ஓர் அழகிய சிறு நகரமும் பர்வதத்தின் மீது ஓர் தேவாலயமும் தோற்றுகின்றதே அதன் விசேஷம் என்ன ப்ரபு!

பரகாலர்:— அடி தருணீமணி! அவைதான் 'கூ நீர் மதியை மாடந்தீண்டும் குறுங்குடி'' அதோ அம்மலை யின்மீது தோன்றும் சந்நதிதான் மலைமேல் நம்பி அமர்ந்துறையும் ஆலயமாகும். அடி இந்து வதனி! ஆங் கண் இன்னும் ஐந்து நம்பிகள் சந்நதிகள் உண்டு. அவைகளை நாம் சென்று சேவிப்போம். பின்தொடர் ந்து வருவாய்.

குமுதவல்லி:—பிராணபதி! நாம் இவ்வாலயத்துட் புகுந்ததும் சங்கம் பேரிகை முதலிய வாத்தியங்கள் சப்திக்கின்றன. ஆனதால் பகவானுக்கு திருவாராத னம் நடைபெறும் சமையம்போல் இருக்கிறது. இந் நற் சகுனபலன் நமக்கு இங்ஙனேயே பரமபதஞ் செல்ல நேமனமாகுமென்று நினைக்கிறேன். அல்லாமலும் நாம் இப்போது நல்ல தருணத்தில் வந்து பஞ்ச நம்பிகளை யும் சேவை செய்து ஆனந்தமடையும் பாக்கியம் பெற் றோம். மற்றும் நமது மந்திரி முதலானவர்களும் இக் குறுங்குடி வாசமே விரும்புவதால் அவர்கட்கும் உய் யும் வகையருளி அநுக்கிரகித்தல் வேண்டும், நாதா!

பரகாலர்:— அடி சுந்தரீ! அப்படியே செய்வோம். ஏ மந்திரி முதலான பரிஜனங்களே! நாமிப்போது உபதேசிப்பதை பயபக்தியுடன் சிரவணம் புரிந்து அதன்படி நடந்து பேரருளாளனுகும் நம்பி திருவடி களே தஞ்சமென நம்பியிருந்து உய்வீர்களாக.

''நின்ற வினையுந் துயருங் கெட மாமலரேந்திச்
சென்று பணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்
என்று மிரவும் பகலும் வரிவண் டிசைபாட
குன்றின் முல்லை மன்றிடை நாறுங் குறுங்குடியே.''

இவ்வாறு பரகாலரும் தமது பரிஜனங்களுக்கு அநுக்கிரகித்தருளி அவர்களை அங்ஙனமே நித்ய வாசஞ் செய்யும்படி ஆக்ஞாபித்துப் பின்னர் குமுதவல்லியாருடன் சென்று திருப்பாற்கடல் நதியில் தீர்த்தமாடிக் கோபுரவாயிலிற் புகுந்து கரண்டமாடு பொய்கையின் கரையில் கரும்பனைப் பெரும்பழம் விழுவதும் வாளை பாய்வதும் பார்த்து மகிழ்ந்து பேரன்புடன் உடல் முழுதும் புளகமெழக் கரங்களைக் குவித்துக்கொண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய பரவசராய் நின்று விழுந்து விழுந்து தண்டம் சமர்ப்பித்து கிடந்த நம்பி, இருந்தநம்பி, நின்றநம்பி, திருப்பாற்கடல்நம்பி, திருமலைநம்பி என்னும் ஐந்து நம்பிகளையும் சேவித்துக்கொண்டிருந்து அங்கு நித்யவாசஞ் செய்து வைராக்கியமடைந்து " உள்ளம் உறை செயல் உள்ள இம் மூன்றையும் உள்ளிக் கெடுத்திறை உள்ளிலொடுங்"குதலாகிய யோக நிஷ்டையில் சில காலம் எழுந்தருளியிருந்து பின்னர் பரமபதஞ்செல்லத் திருவுள்ளமாய் நம்பிகள் சந்நதி சென்று அழகிய நம்பி பொன்னடியிரண்டையும் பற்றிக் கீழ் விழுந்துருகி யுருகி அன்பே வடிவாகக் கிடந்தார். அப்பொழுது எம்பெருமானும் ஆழ்வாரே! உமது அபீஷ்டப்படியே தெளிவிசும்பு திருநாடு செல்ல விடைகொடுத்தருளினோமென்று திருவாய் மலர்ந்தருள அந்தக்ஷணமே குமுதவல்லியாருடன் நமது திருமங்கை யாழ்வாரும் தேவரும் முனிவரும் போற்ற வந்தருளிய திவ்யவிமானத்தில் எழுந்தருளி விரஜா நதியில் தீர்த்தமாடி ஸ்படிகத் திருமேனியரான அமானவனுர் வந்து சதுர்ப் புஜங்களாலும் ஸ்பரிசிக்கப் பிரகாசம் பொருந்திய திவ்ய திருமேனியுடன்

பரமபதஞ்சென்று ஸ்ரீ பரவாசுதேவனுடைய திருமாமணி மண்டபத்தைச் சார்ந்து எம்பெருமான் திருக்கரத்தே ஸ்ரீ சார்ங்கஸ்வரூபராய் விளங்கி வருவாராயினர்.

ஸ்ரீ குமுதவல்லித் தாயார் சமேத
திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

கலந்ததிரு கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திகழாயிரத் தெண்பத்து நாலுரைத்தோன் வாழியே
நாலைந்து மாறைந்தும் நமக்குரைத்தோன் வாழியே
இலங்கெழு கூற்றிருக்கை யிரு மடலீய்ந்தோன் வாழியே
இம்மூன்றில்லிருநூற்றிருபத் தேழீந்தோன் வாழியே
வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே.

சம்பூர்ணம்.

# ஆனந்த சாகரம்.

இப்பெயர்பூண்ட ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையானது ஆனந்தவருடம் சித்திரைமாதமுதல் காரைக்காலிலிருந்து பெரும்பாலும் வைணவமதத்தைத் தழுவி அநேக அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு சிறந்த செந்தமிழ் வசனநடையில் சுமார் 40-பக்கம் கொண்ட புத்தகரூபமாய் வெளிவருமானதால் இதற்கு ஒவ்வொரு வைணவர்களும் சந்தாதாரர்களாய்ச் சேருவீர்களென்று நம்புகிறோம்.

இதற்கு அநேக ஆசார்யபுருஷர்களும் மகாவித்வான்களும் விஷயதானம் புரிவார்கள்.

முன்பணமின்றி ஒருவருக்கும் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. அப்படி முன்பணம் அனுப்புவோர்களுக்கு 8-அணா விலையுள்ளதும் மிக அருமையானதுமான ஸ்ரீ குமுதவல்லி திருமங்கைமன்னன் என்னும் ஓர் அழகிய நாவல் புத்தகமொன்று இனாமாய் அனுப்பப்படும்.

இதன் வருடசந்தா ரூபா 2.

அமிர்தகவி,

ஜெ. இராஜகோபால பிள்ளை, மானேஜர்,

ஆனந்தசாகரம் ஆபீஸ் காரைக்கால்,

பிரான்ஸ் இந்தியா.